சிறப்பிதழ்

ISBN 0971-8362

# திட்டம்

நவம்பர் – 2018 வளர்ச்சிக்கான மாத இதழ் ₹ 30



## தூய்மை: சிந்தனையிலிருந்து செயலைநோக்கி

ஒரு மக்கள் இயக்கம்
அருண்ஜெட்லி

தூய்மை இந்தியா – கனவை நனவாக்குதல்
நிதின் கட்கரி

சுத்தமான, சுகாதாரமான பாரதத்தை நோக்கி...
தர்மேந்திர பிரதான்

சுத்தமான, சுகாதாரமான கிராமங்களை நோக்கி
நரேந்திர சிங் தோமர்


துப்புரவுப் புரட்சி: நடைமுறைப்படுத்துவதில் முன்னேற்றம்
பரமேஸ்வரன் ஐயர்

முழு சுகாதாரத்தில் முன்னோடித் தமிழகம்
– லட்சுமிபதி கோபாலகிருஷ்ணன்

அனைவருக்கும் துப்புரவு – ஏ.தில்லைராஜன்

150 YEARS OF CELEBRATING THE MAHATMA

# மகாத்மா காந்தி சர்வதேச தூய்மை மாநாடு




மகாத்மா காந்தி சர்வதேச தூய்மை மாநாட்டின் தொடக்க விழாவில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் கையேடு ஒன்றினை வெளியிட்டார். மத்திய குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம் புதுதில்லியில் செப்டம்பர் 29, 2018 அன்று இந்த மாநாட்டை நடத்தியது. மத்திய குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சர் சுஷ்ரி உமா பாரதி, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் (பொறுப்பு) ஹர்ஜீத்சிங்புரி, மத்திய குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சக இணை அமைச்சர் ரமேஷ் சந்திரப்பா ஜிகாஜினாகி ஆகியோர் படத்தில் உள்ளனர்.

மகாத்மா காந்தி சர்வதேச தூய்மைக் கூட்டமைப்பின் நான்கு நாள் மாநாடு மத்திய குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகத்தால் புதுதில்லியில் நடத்தப்பட்டது. மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்த நாள் கொண்டாட்டங்களின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையிலும், தூய்மை பாரத திட்டத்தின் நான்காம் ஆண்டு நிறைவை ஒட்டியும் இந்த மாநாடு நடைபெற்றது. இதில் 350க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இவர்களில் 68 நாடுகளில் இருந்து வந்திருந்த 160க்கும் அதிகமான பிரதிநிதிகளும் அடங்குவர். மாநாட்டில் பங்கேற்ற 53 பேர் பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த துப்புரவுத்துறை அமைச்சர்களாவர்.

29, செப்டம்பர், 2018 அன்று இந்த மாநாட்டை குடியரசுத்தலைவர் தொடங்கி வைத்தார். மகாத்மா காந்திக்கு, அவரது 150ஆவது பிறந்த ஆண்டில் நாம் அளிக்கக்கூடிய ஆகச் சிறந்த பரிசு ‘திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத இந்தியா’ என்பதுதான் என்று தனது தொடக்க உரையில் அவர் குறிப்பிட்டார்.

தொடக்க அமர்வினை அடுத்து, துப்புரவு தொடர்பான தொடர்ச்சியான பல அமர்வுகள் நடைபெற்றன. பயன் தரும் தோழமை, நகர்ப்புறத் தூய்மை, மலக்கழிவு மேலாண்மை,, சகதி மேலாண்மை, பாலினம், உள்ளடக்கிய தன்மை, திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத சமூகங்களின் நீடித்து நிலவும் தன்மை, தொழில் நுட்பம், புதுமையாக்கம் ஆகியவை பற்றிய அமர்வுகள் மாநாட்டில் இடம்பெற்றன.

மாநாட்டின் இரண்டாம் நாளில் உலக நாடுகளின் துப்புரவு அமைச்சர்கள் உள்ளிட்ட 116 பங்கேற்பாளர்கள் காந்தியடிகளின் வாழ்க்கையோடும், பணிகளோடும் தொடர்புடைய பல இடங்களுக்குச் சென்றுவந்தனர். தூய்மை இந்தியா திட்டத்தின் வெற்றிக்குச் சான்றாகத் திகழும் புன்சாரி என்ற கிராமத்திற்கு இந்தக் குழுவினர் சென்றனர். அங்கு வசிக்கும் 5100 பேருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பறைகளும், தண்ணீர் வசதிகளும் இருக்கின்றன. இந்தக் கிராமம் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராமமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்தில் ஒரு குழந்தை கூட பள்ளிப்படிப்பை இடையில் கைவிடுவதில்லை. அங்கு பின்பற்றப்படும் இரட்டைக்குழி கழிப்பறைத் தொழில்நுட்பம் பற்றி இந்தக்குழுவினர் ஆர்வமாகக் கேட்டறிந்தனர். கிராமப்புறங்களுக்கு ஏற்றதான வகையில் குறைந்த செலவிலான, சூழலுக்கு உகந்த, எளிதில் பயன்படுத்தக்கூடியதாக இரட்டைக் கழிப்பறைத் தொழில்நுட்பம் இருந்து வருகிறது.

உள்ளூரில் கிடைக்கக்கூடிய சுகாதார வசதிகளைப் பற்றி இந்தக் குழு கண்டறிந்தது. குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள் இறப்பு விகிதம் பூஜ்யம் என்ற நிலையில் இருப்பதை இவர்கள் அறிந்தனர். பள்ளிக்கூடம், அங்கன்வாடிகளுக்குச் சென்று பார்வையிட்டு கிராம மக்களுடன் உரையாடினர். நுண் தொழு உரக்குழிகள், கழிவு அகற்றும் வசதிகள் ஆகியவற்றை ஆய்வு செய்தனர். மரங்களை நட்டனர். தண்டிக்குடில், மகாத்மா காந்தி மந்திர் வளாகங்களுக்கும் சென்ற அவர்கள் அகமதாபாத் சபர்மதி ஆஸ்ரமத்திற்கும் சென்று காந்திக்கு அஞ்சலி செலுத்தினர்.

*வலைதளம்: mgisc.gov.in, Twitter: @SwachchBharat, Facebook: facebook.com/sbmgramin*

*சமூக ஊடக குறிச்சொல்: #SwachchBharat, #MGISC*

# திட்டம்

## மாத இதழ்

மலர்: 50
இதழ்: 15

நவம்பர் 2018
கார்திக் – அக்ரஹாயன 1940

முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**

இணை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**

துணை அசிரியர்
**சஞ்சய் கோஷ்**

❖ தலையங்கம்

❖ ஒரு மக்கள் இயக்கம் – *அருண்ஜெட்லி*

❖ தூய்மை இந்தியா – கனவை நனவாக்குதல் – *நிதின் கட்கரி*

❖ சுத்தமான, சுகாதாரமான கிராமங்களை நோக்கி – *நரேந்திர சிங் தோமர்*

❖ சுத்தமான, சுகாதாரமான பாரதத்தை நோக்கி... – *தர்மேந்திர பிரதான்*

❖ துப்புரவுப் புரட்சி: நடைமுறைப்படுத்துவதில் முன்னேற்றம் – *பரமேஸ்வரன் ஐயர்*

❖ தூய்மையை மேம்படுத்துவதில் சுகாதாரம், குடும்பநல அமைச்சகத்தின் செயல்பாடுகள் – *பிரீத்தி சூடன்*

❖ முழு சுகாதாரத் தமிழகம் முன்னோடித் தமிழகம் – *லட்சுமிபதி கோபாலகிருஷ்ணன்*

❖ சுத்தமான, பாதுகாப்பான சூழலில் குழந்தைகளை வளர்க்க பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் – *ராகேஷ் ஸ்ரீவத்சவா*

❖ மகாத்மா காந்தியும் துப்புரவும்: ஒரு மறுபார்வை – *சுதர்சன் ஐயங்கார்*

❖ இந்திய ரயில்வேயில் சுகாதாரத்தை மேம்படுத்துதல் – *அலோக்குமார் திவாரி*

❖ தூய்மை இந்தியா இயக்கம் – கேந்திரிய வித்யாலயா சங்கதன் – *சந்தோஷ்குமார் மால்*

❖ துப்புரவு பற்றி காந்தி – *டி.ஜான் செல்லதுரை*

❖ அனைவருக்கும் துப்புரவு – *ஏ.தில்லைராஜன்*

❖ செய்தித்துளிகள்

**கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.**

**திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| சிறப்பிதழ் | ... | ரூ. 30.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
வெளியீட்டுப் பிரிவு
A, Wing ராஜாஜி பவன், பெசன்ட் நகர்,
சென்னை – 600 090.
தொலைபேசி: 044–2446 5382

Log on to **http://publicationsdivision.nic.in/**
in collaboration with **bharatkosh.gov.in**

# தூய்மை என்பது ஒரு வாழ்வியல் நெறி




**தூ**ய்மை என்பது ஒவ்வொருவரின் வாழ்க்கையுடனும் தொடர்புடைய ஒன்று. பல் துலக்குவது, குளிப்பது, ஒவ்வொரு முறையும் உணவு உண்ணும் முன்பும், உண்ட பிறகும் கைகளைக் கழுவுவது என்று நம்முடைய அன்றாட வாழ்க்கையின் ஒரு அங்கமாகவே தூய்மை என்பது இருந்து வருகிறது. அழுக்கையும், குப்பைகளையும் கண்டு விலகி ஓடுபவர்கள் தூய்மையான மனிதர்களாக இருக்க இயலாது. தனது சுற்றுப்புறத்தைத் தூய்மையாக்குவதற்கு நேரத்தையும், முயற்சியையும் செலவிடுபவர்கள்தான் தூய்மையான மனிதர்களாவர். பெரும்பாலான மனிதர்கள் தங்கள் வீடுகளைத் தூய்மையாக வைத்துக்கொள்வார்கள். ஆனால், தங்களின் சுற்றுப்புறத்தை அசுத்தமாகுவதற்குத் தயங்கமாட்டார்கள். வீட்டில் சேரும் குப்பை முதல் சாலையில் எச்சில் துப்புவது வரை தூய்மை இல்லாத மனிதன் செய்யும் செயலுக்கு எல்லை என்பதே இல்லை.

இவை பற்றித்தான் தேசத்தந்தை மகாத்மாகாந்தி தூய்மை பாரதத்திற்கான தனது அழைப்பில் கோரிக்கை விடுத்தார். 'தூய்மை என்பது கடவுள் தன்மைக்கு நெருக்கமான நிலை' என்பது அவரது கூற்று. மகாத்மாவை பொருத்தவரையிலும் அது ஒரு சிந்தனை மட்டுமல்ல. அது ஒரு வாழ்க்கைப் பாதையுமாகும். இதை சொன்னதோடு மட்டுமல்லாமல் செய்துகாட்டியும் அவர் வாழ்ந்தார். காந்தியடிகளின் கொள்கை உடல் தூய்மை மட்டுமல்ல. ஆன்மாவின் தூய்மையுமாகும். திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத தேசமாக பாரதத்தைக் காண்பதற்கு மட்டுமின்றி தூய உடலும், ஆன்மாவும் கொண்ட தேசமாகவும் பாரதத்தைக் காண்பதற்கு அவர் விழைந்தார்.

கடந்த சில ஆண்டுகளில் இந்தியா நீடித்த பொருளாதார வளர்ச்சியைக் கண்டுள்ளது. இருப்பினும், சுகாதாரமின்மை, துப்புரவின்மை, ஆரோக்கியக்குறைவு, இறப்பு, கல்வி பெற

இயலாத நிலைமை, உற்பத்திக்குறைவு, பொது நலனில் ஊறுபாடு போன்றவற்றின் காரணமாக தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்குக் கடுமையான பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. உலக வங்கியின் கணக்குப்படி இந்தியா தனது ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஆண்டுக்கு 6.4 சதவீத இழப்பினை தூய்மைக்குறைவு என்ற ஒரு காரணத்தினால் மட்டுமே சந்தித்து வருகிறது. இதை உணர்ந்த பிரதமர் நரேந்திர மோதி ஆகஸ்ட் 15, 2014 அன்று தூய்மை இந்தியா இயக்கத்தை தில்லி செங்கோட்டையிலிருந்து ஆரம்பித்து வைத்தார். திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத தூய்மையான இந்தியாவை 2019ஆம் ஆண்டிற்குள் அடைந்திட அவர் இலக்கினை நிர்ணயித்தார். 2019ஆம் ஆண்டு காந்தியடிகளின் 150ஆவது பிறந்த ஆண்டு வருகிறது. காந்தியடிகளுக்குப் புகழஞ்சலி செலுத்துவதற்கு இதை விடவும் பொருத்தமான தருணம் ஒன்று இருக்க முடியுமா?

குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம் 'தூய்மை இந்தியா'விற்கான திட்டங்களை செயல்படுத்தும் அமைச்சகமாக இருந்தபோதிலும், இந்தத் திட்டத்தின் உட்கூறுகள் ஒவ்வொரு தனிநபருக்கும் உரியவையாக ஆகியிருக்கின்றன. அரசியல் உறுதிப்பாடு, பொதுக்கொள்கை, மக்களின் ஈடுபாடு ஆகியவை தூய்மை பாரதம் திட்டத்தை மக்கள் இயக்கமாக மாற்றியிருக்கின்றன. தூய்மை இருவாரம், ஊர்வலங்கள், விழிப்புணர்வுப் பிரசாரங்கள், ஏராளமான எண்ணிக்கையில் கழிப்பறைகள் கட்டுவது, திடக்கழிவு மேலாண்மை, குப்பை இல்லாத நகரங்களுக்கு நட்சத்திரக் குறியீடு கொடுத்து தூய்மை சர்வேக்ஷன் மூலம் கண்காணித்தல் ஆகியவை நடத்தை மாற்றங்களை மெள்ள மெள்ள கொண்டு வந்துகொண்டிருக்கின்றன. மாணவர்கள், தூய்மைத் தூதுவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள், குடிமைசமூகம், ஊடகம் ஆகியவை 'தூய்மைக்கான சேவை' பற்றிய தகவல்களை மக்களிடம் கொண்டு சேர்த்து வருகின்றன.

'தூய்மையின் தூதுவர்களாக' செயல்பட்டுவரும் அமிதாப் பச்சன், சச்சின் டெண்டுல்கர் போன்ற பிரபலங்கள், கழிப்பறைகளைப் பயன்படுத்துவதைப் பற்றி மக்களிடம் எடுத்துக்கூறி, அதனை பிரபலப் படுத்துவதற்காக பயன்படுத்திக் கொள்ளப் படுகின்றனர்.

சுகாதாரம், பெண்கள் குழந்தைகள் நலம் போன்ற முக்கியமான அமைச்சகங்கள் அதனதன் எல்லைகளில் குறிப்பான பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வுகளைக் காண முயற்சிக்கின்றன. காயகல்ப், விஷ்வாஸ் போன்ற முன்முயற்சிகள், பால் சுவச்சதா திட்டம், கழிப்பறைகள் கட்டுதல், அங்கன்வாடிகளுக்கும், குழந்தைகள் பராமரிப்பு மையங்களுக்கும் தூய்மையான குடிநீர் வழங்குதல் ஆகிய திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் முக்கியமான பங்கினை வகிக்கின்றன.

எந்த வகையான மாற்றத்தைக் கொண்டு வருவதாக இருந்தாலும் அதன் முதன்மையான தூதுவர்களாகவும், தலைவர்களாகவும் இருந்து இளைஞர்கள் சேவை செய்துவருகின்றனர். மனித வள மேம்பாட்டு அமைச்சகம் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் கல்வி நிறுவனங்களில் தூய்மைக் கலாசாரத்தைப் போற்றி வளர்ப்பதற்கு முயற்சித்து வருகிறது. இதைப்போலவே ரயில்வே, பெட்ரோலியம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகங்கள் தங்களின் பரந்துபட்ட கட்டமைப்புகளின் மூலம் ரயில்கள், ரயில் நிலையங்கள், பெட்ரோல் பங்குகள், சீர்மிகு நகரங்கள், கிராமங்கள், ஆகிய பகுதிகளில் முழுமையான துப்புரவை நோக்கிப் பணியாற்றி வருகின்றன. குடிநீர் வழங்குதல், கழிவுநீர் சுத்திகரிப்பு, கட்டமைப்புகளைப் பராமரித்தல் ஆகியவற்றிற்காக போர்க்கால அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றன. தூய்மை இந்தியா திட்டம் இப்போது சிறப்புற செயல்பட்டு வருகிறது. தூய்மை என்பதை ஒரு வாழ்க்கை நெறியாக ஆக்கும் பாதையில் தேசம் முன்னேறி வருகிறது. ●

தூய்மை இந்தியா திட்டம்

# ஒரு மக்கள் இயக்கம்

- அருண்ஜெட்லி




**2014ஆம் ஆண்டு சுதந்திர தின உரையில் தூய்மை இந்தியா பிரசாரத்தை பிரதமர் அறிவித்தபோது, இந்தத்திட்டம் வெறும் அறிவிப்போடு நின்றுவிடும், முன்னேற்றத்தை அடையாது என்று சிலர் நம்பினர். இந்தத்திட்டம் சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் இந்திய மக்கள், அரசிடமிருந்து தட்டிப் பறித்து எடுத்துச் சென்று மக்கள் இயக்கமாக மாற்றிக்காட்டிய திட்டமாகும்.**

கடந்த காலங்களில் அரசாங்கத் திட்டங்கள் பற்றிய பொதுவானதொரு நம்பிக்கையின்மை நிலவி வந்தது. இதற்கு முக்கியமான காரணம், பயனாளிகளை முழுமையாகச் சென்று அடையாது அல்லது இலக்குகளை ஒருபோதும் முழுமையாக எட்ட இயலாமல் போகும் நிலையாகும். எனினும், வித்தியாசமான திட்டங்களும் இருக்கின்றன. தூய்மை பாரதம் திட்டம் மிகவும் வெற்றிகரமான ஒன்றாகும்.

**தூய்மை பாரதத் திட்டம்:**

இந்தியப் பிரதமர் தூய்மை பாரதத் திட்டத்தை 2014 சுதந்திரதினத்தின் போது அறிவித்தபோது இந்தத் திட்டம் வெறுமனே விளம்பரத்திற்காக செய்யப்படுகிறது. இது ஈடேறும் வாய்ப்பு மிகவும் குறைவுதான் என்று சிலர் நம்பினர். ஆனால், இந்தத்திட்டத்தை அரசிடமிருந்து இந்திய மக்கள் தட்டிப்பறித்து மக்கள் இயக்கமாக மாற்றிக்காட்டியுள்ளனர். இந்தத்திட்டம் அறிவிக்கப்பட்டபோது கிராமப்புற துப்புரவு 39 சதவீதமாக இருந்தது. 2019ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்த ஆண்டைக் கொண்டாடும் போது திறந்த வெளிகளில் மலம் கழித்தல் இல்லாத தேசமாக இந்தியா மாறியிருக்க வேண்டும் என்று இலக்கு பிரதமரால் நிர்ணயிக்கப்பட்டது. காந்தியடிகள் தூய்மைக்கு முக்கியத்துவம் அளித்து வந்தவர் என்பதால் இந்தக் குறியீட்டு இலக்கு மிகவும் பொருத்தமானதாகவே இருக்கிறது. இந்தத்திட்டம் இப்போது நான்கு ஆண்டுகளை நிறைவு செய்திருக்கிறது. 39 சதவீதமாக இருந்த கிராமப்புற சுகாதாரம் இப்போது 92 சதவீதமாக அதிகரித்திருக்கிறது. இது ஒன்றும் எளிதில் எட்டி விடக்கூடிய இலக்கன்று. மக்களின் நடத்தை மாற்றத்தை உள்ளடக்கியதாகும் இது. கிராமப்புற மக்களில் பலர் ஆரம்பத்தில் தயக்கம் காட்டிவந்தனர்.

ஆனால், இந்த மக்கள் இயக்கம் இன்று பெண்கள் இயக்கமாக மாற்றம் கண்டுள்ளது. கிராமப்புறப் பெண்கள் முன்னின்று வழிநடத்தி வருகின்றனர். மறைவான கழிப்பறைகளை ஏற் படுத்தித் தருவதுதான் பெண்களின் கௌரவத்தைக்காக்கும் செயலாகும் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆயினும், இந்தியப் பெண்கள் இந்தத்திட்டத்தின் பயனாளிகளாக இருப்பதையும் தாண்டி வழி நடத்தும் தலைவர்களாகவும்




ஆகியிருக்கிறார்கள். உதாரணமாக, கழிப்பறைகள் கட்டுவது என்பது ஆடவர் செய்யும் வேலையாக மட்டுமே இருந்தது. ஆனால், ஆயிரக்கணக்கான கிராமப்புறப் பெண்களுக்கு கழிப்பறைகள் கட்டும் கொத்தனார் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சுய உதவிக்குழுக்களின் உதவியோடு திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத பகுதிகளாக அறிவிக்கப் படுவதற்கு உதவும் முதன்மை சக்தியாக அவர்கள் இப்போது மாறியிருக்கின்றனர். கழிப்பறைகள் கட்டுவது பெண்கள் வருவாய் ஈட்டவும், குடும்ப வருமானம் அதிகரிப்பதற்கும் உதவுகிறது.

கழிப்பறைகளைப் பயன்படுத்து வதால் ஏற்படும் சுகாதார மேம்பாடு என்பது வருமுன் காக்கும் நலத் திட்டமும் ஆகும். 2019இல் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத தேசமாக நாம் மாறும்போது இந்தத் திட்டத்தின் மூலம் 3 இலட்சத்திற்கும் அதிகமான உயிர் கள் காப்பாற்றப்பட்டிருக்கும். இந்தியாவின் பல பகுதிகளில் உள்ள கழிப்பறைகளுக்கு ‘Izzat Ghar’ என்று பெயரிடப்பட்டுள்ளன. கழிப்பறை கட்டும் ஒரு பிரசாரம் தேசத்தின் கவனத்தை ஈர்த்திருக்கும் மையப்புள்ளியாக முதன் முறையாக ஆகியிருக்கிறது. தேசிய செயல் திட்டத்தின் மையப்புள்ளியாக கழிப் பறைகளைக் கட்டுவது என்ற கருத்து உருவெடுத்தது இதுவே முதல் முறையாகும். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்து வதற்குத் தேவைப்படும் நிதிக்கு அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இந்தியாவின் கிராமப்புற மக்கள் குறிப்பாக பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படும்.

கிராமப்புறச் சாலைகள், கிராமப்புற மின் இணைப்பு,

**வெற்றிக்கதை**

### பஞ்சாபில் இருமொழி கைபேசிச் செயலி

திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலைமை நீடித்து நிலவுவதற்கு முன்னெடுக்கப்படும் ‘என்னுடைய கிராமம் என்னுடைய பெருமிதம்’ என்ற பிரசாரத்திற்காக நாட்டிலேயே முதல் முறையாக இருமொழி கைபேசி செயலியை பஞ்சாப் மாநிலம் அறிமுகப் படுத்தியுள்ளது.

**செயலியின் சிறப்பம்சங்கள்:**

- திறந்த வெளியில் மலம் கழித்தல் தொடர்பான புகார்களை இணையம் வழியாகத் தெரிவிக்க உதவுகிறது.
- புகாரின் மீதான நடவடிக்கையின் முன்னேற்றம் பற்றிய நிலவரத்தை அறியமுடியும்.
- கழிப்பறை வசதி இல்லாத சமூக உறுப்பினர் எவரும் அதற்கான விண்ணப்பத்தை இந்தச் செயலியின் மூலம் பெற இயலும்.
- இது தவிர, தூய்மை பாரதத்திற்கான திட்டத்தை வெற்றிகரமாக உதவக்கூடிய விவரங்கள், கல்வி, தகவல் தொடர்பு பற்றிய விவரக்குறிப்புகளும், படைப்புகளும் கொண்ட தூய்மை காட்சியகமும், சமூக ஊடக முனையமும் இந்தச் செயலியில் உள்ளன.


திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத பகுதிகள் பற்றிய விழிப் புணர்வுத் தகவல்கள், தூய்மைச் செயல் திட்டம், மலக்குழி, திடக்கழிவுப் பிரிப்பு போன்றவற்றில் தூய்மைப் பகுதிகளுக்கு இடையேயான போட்டிகள் போன்றவை எனது கிராமம் எனது பெருமிதம் என்ற பிரசாரத்தில் இடம் பெற்றுள்ளன. மாவட்டம், வட்டாரம், மாநில அளவில் சிறப்பாகச் செயல்படும் குழுக்களுக்கான பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம்

# தூய்மை பாரத திட்டம் (கிராமம்)

## தூய்மை பாரத திட்டம் வளர்ச்சி பற்றிய விவரம்

கிராமப்புறங்களில் 90% தூய்மை. 2014 முதல் இதுவரை 8.2 கோடி கழிப்பறைகள் புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. 4.2 இலட்சம் கிராமங்கள், 434 மாவட்டங்கள், 19 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.




## துப்புரவின் தாக்கம்



### நிதி, பொருளாதார தாக்கம்

மருத்துவ செலவு, நேர விரயம், காப்பாற்றப்பட்ட உயிர்கள் ஆகிய கண்ணோட்டத்தில் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராமங்களில் உள்ள குடும்பங்கள் ஒவ்வொன்றும் ஆண்டுக்கு ரூ.50 ஆயிரம் சேமிக்கின்றன.

*- யூனிசெப் ஆய்வு, 2017.*



### காப்பாற்றப்பட்ட உயிர்கள்

தூய்மை பாரத திட்டத்தின் மூலம் 3 இலட்சத்திற்கும் அதிகமான உயிர்கள் 2019 ஆம் ஆண்டு வாக்கில் காப்பாற்றப்பட்டிருக்கும்.

*- உலக சுகாதார நிறுவன ஆய்வு, 2018.*



### சுகாதாரத் தாக்கம்

திறந்த வெளியில் மலம் கழிப்பதால் உண்டாகும் வயிற்றுப்போக்குப் பிரச்சினைகள் கிராமங்களில் 46% அதிகமாக உள்ளன.

*- சர்வதேச நிதியம் (IMF) அறிக்கை 2017 - 2018இன் படி*



### பாலின சமத்துவம்

வீட்டு வேலை, குழந்தை பராமரிப்பில் ஈடுபட்டுள்ள பெண்களின் நேரத்தில் 10% நேர சேமிப்பு.

வேலை பார்க்கும் பெண்களின் விகிதத்தில் 1.5% அதிகரிப்பு.

கிராமப்புற வீட்டு வசதித்திட்டம், கழிப்பறைகள், சமையல் எரிவாயு இணைப்பு, குறைந்த விலையில் உணவு தானியங்கள் ஆகியவற்றால் இந்திய கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும். இவற்றோடு கூடவே, மருத்துவமனை செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ.5 இலட்சம் வரை வழங்கக்கூடிய ஆயுஷ்மான் பாரத் திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும் போது கிராமப்புற மக்கள் வாழ்வில் பெருத்த மாற்றங்கள் உருவாகும்.

**ஊதிய உயர்வு**

அங்கன்வாடிப் பணியாளர்கள், ஆஷா பணியாளர்களுக்கு தரப்படும் ஊதியத்தை அதிகரித்து வழங்குவது என மத்திய அரசு முடிவெடுத்து அறிவித்துள்ளது. தேசிய ஊட்டச்சத்துத் திட்டத்தில் முக்கியமான பங்கினை வகிப்பவர்கள் அங்கன்வாடிப்பணியாளர்கள் ஆவர். தோராயமாக 12.9 இலட்சம் அங்கன்வாடிப் பணியாளர்களும், 11.6 இலட்சம் அங்கன்வாடி உதவியாளர்களும் இருக்கின்றனர். இந்த 24.9 இலட்சம் அங்கன்வாடி ஊழியர்களின் குடும்பங்களுக்கும் ஊதிய உயர்வு பயனளிக்கும்.

அங்கன்வாடிப் பணியாளர்களின் மாத ஊதியம் ரூ.3000 என்பதிலிருந்து ரூ.4500 ஆகவும், சிறிய அங்கன்வாடிகளில் பணியாளர்களின் ஊதியம் ரூ.2250 என்பதிலிருந்து ரூ.3500 ஆகவும், அங்கன்வாடி உதவியாளர்களின் ஊதியம். ரூ.1500 என்பதிலிருந்து ரூ.2250 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு முறையே மாதம் ரூ.500, ரூ.250 ஊக்கத்தொகையும் அவர்களின் பணித்திறன் அடிப்படையில் வழங்கப்படும். கருவுற்றத் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் மிக மோசமான அளவில் ஊட்டச்சத்துக் குறைவு உடைய குழந்தைகள் ஆகியோருக்கு அரசாங்கத்தின் ஆதரவு நிதி ஒதுக்கீடு கணிசமான அளவில் உயர்த்தப்பட்டுள்ளது. நியாயமான ஊதியம் வழங்கவேண்டுமென்பது அங்கன்வாடிப் பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்தது. இதற்கு முன்பிருந்த அரசாங்கங்கள் 25 இலட்சம் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு நன்மை செய்யத் தயங்கின. ஒரே முயற்சியில் நிதி ஒதுக்குவதில் கடினங்கள் இருந்த போதிலும் இந்த அரசு ஏறத்தாழ 50 சதவீதம் ஊதிய உயர்வை வழங்கியுள்ளது. ஊழியர்களின் குறைகளைக் களைவதில் இந்த உயர்வு அதிக அளவில் துணை செய்யும். ●

- **அருண்ஜெட்லி**, மத்திய நிதி அமைச்சர்.

## தாமிரபரணி மகாபுஷ்கர விழா



மகா புஷ்கரத்திருவிழா 2018, அக்டோபர் 9ஆம் நாள் நெல்லை எட்டெழுத்து பெருமாள் கோயில் கோசலையில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்த புஷ்கர விழா 144 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுவதாகும். இந்த விழாவின் போது இலட்சக்கணக்கான மக்கள் தாமிரபரணி நதியில் புனித நீராடினர்.

மேற்கு தொடர்ச்சி மலையில் தென் பொதிகை மலையில் பூங்குளம் என்ற இடத்தில் உற்பத்தியாகிறது தாமிரபரணி ஆறு. திருநெல்வேலி மாவட்டத்திலும், தூத்துக்குடி மாவட்டத்திலும் 120 கிலோமீட்டர் தூரம் ஓடி வங்கக் கடலில் கலக்கிறது. மணிமுத்தாறு, காரையாறு, சேர்வலாறு, ராமநதி, கடனா நதி, பச்சையாறு, குற்றாலம் மலையில் உருவாகிவரும் சிற்றாறுகள் பலவும் தாமிரபரணி நதியுடன் கலக்கின்றன. தாமிரபரணி நதிக்கரையில் ஒன்பது நவகைலாச கோவில்களும், ஒன்பது நவதிருப்பதி கோவில்களும் உள்ளன. தாமிரபரணி ஆற்றில் மொத்தம் 143 படித்துறைகளும், பல தீர்த்த கட்டங்களும் இருக்கின்றன. ●

# தூய்மை இந்தியா என்ற கனவை நனவாக்குதல்

- நிதின் கட்கரி

அக்டோபர் 2, 2014 அன்று பிரதம மந்திரி நரேந்திர மோடி தூய்மை இந்தியாவுக்கான ஸ்வச் பாரத் என்ற உரத்த அழைப்பை விடுக்கும் போது தன் முன்பு இருக்கின்ற சவால் மிகவும் கடினமானது என்பதைத் தெரிந்தே இருந்தார். நாட்டில் இருக்கும் துப்புரவு உள்கட்டமைப்பு வசதிகள் அதிக அளவில் பற்றாக்குறையாக இருந்தன. இலட்சக்கணக்கான மக்கள் திறந்த வெளியில் மலம் கழித்து வந்தனர். திறம்பட்ட கழிவு மேலாண்மை என்பது பெரும்பாலும் நமக்குத் தொடர்பில்லாத விஷய மாகவே இருந்தது. சமூகத்தில் தூய்மையைப் பராமரித்தல் என்ற வார்த்தைக்கு அர்த்தமே இல்லாமல் இருந்தது அல்லது தூய்மைக்கு முன்னுரிமை இல்லாமல் இருந்தது. 125 கோடி மக்களுக்கு துப்புரவு உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவது ஒரு சவால் என்றால், அந்த மக்களிடம் தூய்மை குறித்த உணர்வை ஏற் படுத்துவதும் மிகவும் சிரமமான விஷயமாகவே இருக்கின்றது. எனினும், தூய்மையான மற்றும் சுத்தமான இந்தியா என்ற மகாத்மா காந்தியின் கனவை நனவாக்குவது என்பது நமது அரசுக்கு மிகப்பெரிய கடமையாக உள்ளது. ஒரு புதிய இந்தியாவை உருவாக்குவதற்கான பிரதம மந்திரியின் தொலைநோக்குப் பார்வையில் இதுவும் ஒருங்கிணைந்த ஓர் அங்கமாக உள்ளது. எனவே கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த திசையில் தொடர்ச்சியாக நமது அரசானது பணி ஆற்றி வருகிறது. கழிப்பறைகள் போன்ற துப்புரவு உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், கழிவு மேலாண்மை வசதிகள், தூய்மையை வாழ்க் கையின் ஒரு வழிமுறையாக ஏற்றுக் கொள்வதற்காக மக்களை ஊக்கப் படுத்தும் தொடர்ச்சியான விழிப் புணர்வு முகாம்கள் நடத்துதல் என அரசு தொடர்ச்சியாகச் செயல்பட்டு வருகிறது.

நீர் ஆதாரங்கள், நதி மேம்பாடு மற்றும் கங்கை ஆறு புனரமைப்பு அமைச்சராக இருக்கின்ற எனக்கு தூய்மைப் பணி சவால்களில் மிகப் பெரிய ஒன்றாக இருப்பது கங்கை நதியைத் தூய்மைப்படுத்துவதே ஆகும். கங்கையின் தொடர்ச்சியான, மாசுபடாத நீரோட்டத்தை மீட்டெடுக்க வேண்டும். முந்தைய அரசுகள் இதற்கான தீர்வுக்காக பல திட்டங் களைச் செயல்படுத்தி வந்திருந் தாலும் இந்தப் பிரச்சினையானது பல ஆண்டுகளாக இருந்து கொண்டே இருக்கிறது. கங்கை நதியை பல விஷயங்கள் ஒன்று சேர்ந்து மாசுபடுத்துகின்றன. கங்கை நதியின் கரையில் உள்ள 97 நகரங்கள் உற்பத்தி செய்கின்ற கழிவு நீரானது சுத்திகரிக்கப்படாமல் அப்படியே ஆற்றில் விடப்படுகிறது. அதாவது ஒரு நாளைக்கு 2,953 மில்லியன் கழிவுநீர் கங்கையில் கலக்கிறது. இந்த நகரங்களில் கழிவுநீரைச் சுத்தப்படுத்துவதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் என்பது மிகவும் பற்றாக்குறையாகவே உள்ளன. பல தருணங்களில், முறை யான பராமரிப்புக்காக இவற்றின் செயல்பாடுகள் நிறுத்தப்படுகின்றன. இந்த நகரங்களில் மக்கள் தொகை அதிகமாகும் போது பிரச்சினையும் அதிகமாகிறது. இதனால் கூடுத லான கழிவுகள் உருவாகின்றன. தொழிற்சாலைகளில் இருந்து வரும் சுத்திகரிக்கப்படாத திரவங்கள், ஆற்றங்கரை ஓர நகரங்கள் மற்றும் கரையோர கிராமங்கள் ஆகியவற்றில் இருந்து வரும் திடக்கழிவுப்பொருள்கள், விவ சாயக்கழிவுகள், திறந்த வெளிகளில் கழிக்கப்படும் மலம், மாசுபட்ட கிளை ஆறுகள், ஆற்றில் கலக்கும் கால்வாய்கள் என இவை அனைத்தும் சேர்ந்து மாசுப்பொருள்களை கங்கையில் சேர்க்கின்றன. நதியைச் சுத்தப்படுத்தும் விரிவான தூய்மைப் பணிக்கு உள்கட்டமைப்பு வசதிகள், அமைப்புகள், நடைமுறைகள் தேவைப்படுகின்றன. மாசுப் பொருள்களைக் கொண்டு வந்து சேர்க்கும் ஒவ்வொரு ஆதாரத் தையும் முறையாகவும் நீடித்த வகையிலும் தடுக்கவேண்டும். இதனை மேற்கொள்வதற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள், தனியார் மற்றும் ஆற்றங்கரையில் வசிக்கும் மக்கள் என பல்வேறு தரப்புகளிடம் இருந்தும் ஒருங்கிணைந்த மற்றும்

தீவிரமான நடவடிக்கைகள் தேவைப் படுகின்றன.

கங்கை நதியைச் சுத்தப்படுத்துவதற்கான முந்தைய அரசுகளின் முயற்சிகள் தேவையான விளைவுகளை ஏற்படுத்தாத நிலையில், தற்போதைய அரசு 2015ஆம் ஆண்டில் நமாமி கங்கை என்ற திட்டத்தைத் தொடங்கியது. இந்தத் திட்டம் அரசின் முன்னோடித் திட்டங்களில் ஒன்றாக உள்ளது. 2015இல் இந்தத் திட்டத்திற்கு ரூ.20,000 கோடி ஒதுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான பொறுப்பு தூய்மையான கங்கைக்கான தேசிய இயக்கத்தின் வசம் உள்ளது. இந்த இயக்கமானது சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986இன் கீழ் ஒரு ஆணையமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த இயக்கத்துக்கு 2016ஆம் ஆண்டில் கூடுதல் அதிகாரங்கள் கிடைத்தன. 2017ஆம் ஆண்டில் மாநில மற்றும் மாவட்ட கங்கை கமிட்டிகள் அமைக்கப்பட்டன.

இந்தத் திட்டத்தின் கீழ் 2015-2020 காலகட்டத்துக்காக ரூ.20,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கங்கையைத் தூய்மைப்படுத்துவதற்காக இது வரையில் ஒதுக்கப்பட்ட தொகையில் இதுவே மிக அதிக அளவிலான தொகை ஆகும். இது வரையில் இந்தத் திட்டத்தின் கீழ் ரூ.22,238 கோடி மதிப்பில் 240 செயல்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. கழிவு நீர் செல்வதற்கான உள்கட்டமைப்பு வசதிகள், படித்துறை, ஏரி, தகன மேடை, ஆற்றின் முகத்துவார மேம்பாடு, பல்லுயிர்ப் பாதுகாப்பு, மரம் வளர்ப்பு, ஊரகத்துப்புரவு போன்றவை இந்தச் செயல் திட்டங்களில் உள்ளடங்கி இருக்கின்றன. இவற்றில் 64 செயல் திட்டங்கள் நிறைவடைந்து விட்டன. மீதி உள்ள செயல் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. கங்கை நதியின் கரை ஓரத்தில் உள்ள முக்கியமான 97 நகரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை ஒரு நாளைக்கு 3,603 மில்லியன் லிட்டர் (MLD) கழிவு நீரை உற்பத்தி செய்யும் (2035ஆம் ஆண்டுக்கான கணக்கீடு) என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நகரங்களில் தற்போது ஒரு நாளைக்கு 1651 மில்லியன் லிட்டர் (MLD) கழிவுநீரைச் சுத்திகரிக்கும் வசதிகள் மட்டுமே செயல்பாட்டில் உள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் இந்த அளவானது அதிகப்படுத்தப்படும். இந்த 97 நகரங்களில் அதிக அளவில் மாசுபடுத்தும் 10 நகரங்களாக ஹரித்துவார், கான்பூர், அலகாபாத், ஃபரூக்காபாத், வாரணாசி, பாட்னா, பகல்பூர், கொல்கத்தா, ஹவுரா, பல்லி ஆகியவை உள்ளன. தொழிற்சாலைக்கழிவுகளை சுத்திகரிக்கும் ஆலை என்ற (STP) பிரிவின் கீழ் நாங்கள் சில புத்தாக்க மாதிரிகளைக் கொண்டு வந்துள்ளோம். ஹைபிரைட் ஆன்னுயிட்டி மோட் மற்றும் ஒரு நகரம் ஒரு ஆப்பரேட்டர் என்ற கருத்தாக்கம் போன்றவற்றை அறிமுகப்படுத்தியுள்ளோம். இந்தக் கருத்தாக்கத்தின் கீழ், தற்போதுள்ள மற்றும் புதிய தொழிற்சாலைக்கழிவுகளைச் சுத்திகரிக்கும் ஆலைகள் (STP) ஒரு தனியார் ஆப்பரேட்டரின் கீழ் இருக்கும். சிறப்பாகப் பராமரிக்கவும் தகுதி நிலையில் வைத்திருக்கவும் இந்த முறை பயன்படும். மதுரா நகரத்தில் செயல்படுத்தப்பட உள்ள தொழிற்சாலைக் கழிவுகளை சுத்திகரிக்கும் ஆலை (STP) செயல் திட்டமானது விசேஷமானது ஆகும். ஒரு நகரம் ஒரு ஆப்பரேட்டர் கருத்தாக்கத்தின் கீழ் ஹெச்.ஏ.எம் (HAM) முறைமையில் இது வழங்கப் பட்டுள்ளது. அதே தனியார் ஆப்பரேட்டர் ஒரு நாளைக்கு 30 மில்லியன் லிட்டர் (MLD) கழிவுநீரை சுத்திகரிக்கும் கொள்திறனில் புதிய தொழிற்சாலைக் கழிவுகளை சுத்திகரிக்கும் ஒரு ஆலையைக் (STP) கட்டமைப்பார். 38 எம்எல்டி கொள்திறன் உள்ள பழைய தொழிற்சாலைக் கழிவுகளை சுத்திகரிக்கும் ஆலைகள் (STP) மூன்றை தரநிலை உயர்த்துவார். மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளைச் சுத்திகரிக்கும் அனைத்து ஆலைகளையும் (STP) இயக்குவதற்கும்; பராமரிப்பதற்கும் அவரே பொறுப்பாளர் ஆவார். மதுராவில் உள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (IOCL) எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமானது கழிவுநீரை மீண்டும் பயன்படுத்திக் கொள்ளும். ஒரு லிட்டர் தண்ணீரை ரூ.8.70 என்ற விலையில் இந்த சுத்திகரிப்பு நிலையம் வாங்கிக்கொள்ளும். இதனால் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்டில் (IOCL) பயன்படுத்தப்படும் 2 கோடி லிட்டர் யமுனை ஆற்று நீரானது சேமிக்கப் பட்டு இந்தத் தண்ணீர் இனி வேறு பயன்பாடுகளுக்குக் கிடைக்கும்.

இதனோடு, கங்கையின் கிளை ஆறுகளில் 16 செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். உதாரணமாக யமுனை (ஹரியானாவில் சோனெபட் மற்றும் பானிபட், உத்திரப் பிரதேசத்தில் மதுரா மற்றும் விருந்தாவன், தில்லி), ராம்கங்கா (மொராதாபாத், உத்திரப்பிரதேசம்), சரயு (அயோத்யா, உத்திரப்பிரதேசம்) மற்றும் கோசி (நௌகச்சியா, பீகார்) ஆகிய கிளை ஆறுகளில் செயல் திட்டங்கள் அமல்படுத்தப்படும். இந்தச் செயல்திட்டங்களின் நோக்கம்




ரூ.3,028 கோடி செலவில் 1,353 எம்.எல்.டி கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலைத்திறனை உருவாக்குவதே ஆகும். கங்கையின் மற்ற கிளை ஆற்றங்கரைகளில் உள்ள சுமார் 68 நகரங்களில் இது போன்ற மேலும் பல செயல்திட்டங்கள் வர இருக்கின்றன.

100 சதவிகிதம் மத்திய அரசு நிதியிலான இந்தச் செயல்திட்டங்களின் செயல்பாடு விரிவானவையும் அதே சமயம் ஒருங்கிணைந்தவையும் ஆகும். மத்திய - மாநில அரசுகளின் ஏஜென்சிகள் ஒன்றிணைந்து செயல்பட இவை அனுமதிக்கின்றன. மேலும் கங்கையையும் அதன் கிளை ஆறுகளையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வருகின்றன. மேலும் இவற்றுக்கு 5 ஆண்டுகளுக்கு இதற்கென்று தனிப்பட்ட முறையில் பட்ஜெட் நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாகப் பராமரிக்கப்படவேண்டும் என்பதை உறுதிசெய்யும் வகையில் இந்தத் திட்டத்தில் 15 ஆண்டுகளுக்கான இயக்குதல் மற்றும் பராமரித்தல் செலவு உள்ளடக்கப்பட்டுள்ளது. கங்கை ஆற்றைச் சுத்தப்படுத்தவும், படித்துறைகள் மற்றும் எரிதகன இடங்கள் ஆகியவற்றைப் புதுப்பிக்கவும், ஆற்றின் கரைகளில் மரம் வளர்க்கவும் பல தனியார் நிறுவனங்கள் தங்களது நிறுவன சமூகப் பொறுப்புடைமையின் கீழ் (CSR) பல செயல்திட்டங்களை நிறைவேற்ற முயற்சிகள் எடுத்துக் கொண்டுள்ளன. மேலும் தன்னார்வம் உள்ள தனி நபர்கள் பலரும் மரம் வளர்க்க, படித்துறையைச் சுத்தப்படுத்த மற்றும் இது போன்ற வேலைகளுக்கு தானாகவே முன் வருகின்றனர். கங்கை பிரஹாரிகள் என்று அழைக்கப்படும் இவர்கள் ஆற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும் அதன் கரைகளைத் தூய்மையாக வைத்துக் கொள்ளவும் இதர மக்களுக்கு ஊக்கம் அளிக்கின்றனர்.

இது வரையில் முடிந்துள்ள பணிகள் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பார்த்தால், மார்ச் 2019க்குள் கங்கை ஆறானது 70 முதல் 80 சதவிகிதம் அளவுக்குத் தூய்மையாக இருக்கும் என்று நாம் சொல்லலாம். 2020ஆம் ஆண்டின் முடிவில் முழுமையாக சுத்தமாகிவிடும் என்றும்

கூறலாம். ஸ்வச்சத (தூய்மை) என்பது சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், கப்பல் போக்குவரத்து என்ற எனது இதர இரண்டு அமைச்சகங்களிலும் அதிக முன்னுரிமை கொண்டுள்ளதாக இருக்கிறது. செலவு குறைந்த மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து முறையாக நீர்வழிப் போக்குவரத்தின் பயன்பாட்டை நாங்கள் மேம்படுத்தி வருகிறோம். 111 நீர்வழிப்பாதைகள் தேசிய நீர்வழிப்பாதைகளாக அறிவிக்கப் பட்டுள்ளன. கங்கை மற்றும் பிரம்மபுத்திரா உள்பட 10 நீர் வழிப்பாதைகளை மேம்படுத்தும் பணிகளை நாங்கள் முன்பே தொடங்கிவிட்டோம். இதனுடன் எத்தனால், மெத்தனால், பயோடீசல், பயோசி.என்.ஜி மற்றும் மின்சாரம் போன்ற பசுமை எரிபொருள்களைப் பயன்படுத்துவதை அதிகரிக்க நான் முயற்சி எடுத்து வருகிறேன். அதாவது இவை போக்குவரத்துத் துறையில் பெட்ரோல், டீசலுக்கு மாற்றாக இருக்கும்.

இந்திய தேசிய நெடுஞ்சாலைப் போக்குவரத்து ஆணையம் சுங்கச் சாவடியின் இரண்டு பக்கங்களிலும் ஆண்கள், பெண்கள் என இரு வருக்கும் தனித்தனியாக கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தித் தரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. நாட்டில் உள்ள அனைத்து 372 சுங்கச்சாவடிகளிலும் இந்த கழிப் பறை வசதி மார்ச் 2019க்குள் ஏற்படுத்தப்பட்டுவிடும். மேலும் இந்தச் சுங்கச்சாவடிகளில் குப்பைக்கூடைகளும், தூய்மை குறித்த விழிப்புணர்வு செய்திகள் அடங்கிய பலகைகளும் வைக்கப்பட்டு வருகின்றன. குப்பைகளைத் தெருவில் போடுவதைத் தடுக்கும் வகையிலான செய்திப்பலகைகளும் வைக்கப்படுகின்றன. சாலைப் போக்குவரத்து அமைச்சகமானது சாலைக்கட்டுமானத்தின போது குறைவான கழிவு மட்டுமே ஏற் படும் வகையில் முயற்சிகள் எடுத்துவருகிறது. எரி சாம்பல், பிளாஸ்டிக், எண்ணெய்க்கசடு, நகராட்சிக்கழிவுகள் போன்ற கழிவுப் பொருள்களை நெடுஞ்சாலை கட்டு மானத்துக்குப் பயன்படுத்தவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வரு கின்றன.

கப்பல் போக்குவரத்து அமைச் சகமும், அதன் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களும் அறைகளையும், கழிப்பறைகளையும் புதுப்பிக்கவும், சரக்கு ஏற்றி இறக்கும் மேடைகள் மற்றும் கூடாரங்கள் ஆகியவற்றைச் சுத்தப்படுத்தவும், இனியும் பயன் படுத்த முடியாத மற்றும் யாரும் உரிமை கோராத பொருட்களை ஏலம் விடவும், பூங்காக்களை சுத்த மாகவும் அழகாகவும் பராமரிக்கவும், இதுபோன்ற பிற செயல்களுக்காகவும் 22 அம்ச செயல்திட்டத்தைக் கடை பிடிக்கின்றன. தூய்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ஊழியர் களுக்கு முறையான பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

துறைமுகங்கள் நீடித்த நிலையான வளர்ச்சி பெறவும், அவை சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் இருக்கவும் கப்பல் போக்குவரத்து அமைச்சகமானது "பசுமைத் துறைமுகங்களை" அமைப்பதில் கவனம் செலுத்திவருகிறது. அண்மையில் பசுமை ஆற்றலுக் கான இந்தியக்கூட்டமைப்பு இந்தியா வில் அரசுத்துறை சார்ந்த துறை முகங்களில் விசாகப்பட்டினம் துறைமுகத்துக்கு இதற்கான விருதை அளித்துள்ளது. அதாவது "புதுப்பிக்கத்தக்க எரிபொருளைப் பயன்படுத்துவதில் தலைசிறந்த துறைமுகம்" என்ற பிரிவில் இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துறைமுகம் ஒவ்வொரு ஆண்டும் 1.2 எம்.யூ மின்சாரத்தைப் பயன்படுத்துகிறது. இந்த மின்சாரப் பயன்பாட்டில் 100 சதவிகித மின்சாரம் இயற்கை ஆற்றலில் இருந்து கிடைத்ததாகும்.

மேலே கூறி உள்ள எங்களது முயற்சிகள் அனைத்தும் சாதக மான விளைவுகளைத் தரத் தொடங்கியுள்ளன என்பதை நான் சுட்டிக்காட்டியே ஆக வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு படிநிலையிலும் பல ஏஜென்சிகளும் ஒருங்கிணைந்து ஆதரவாகச் செயல்படுவதால் இந்த விளைவுகள் கிடைக்கின்றன. அதாவது மத்திய மற்றும் மாநில அரசு ஏஜென்சிகள், தொண்டு நிறு வனங்கள், மிகவும் முக்கியமாக நாட்டின் மக்கள் ஆகியோர் ஒருங் கிணைந்து செயல்படுகிறார்கள். தூய்மை இந்தியா இயக்கத்தின் மூலமாக மக்கள் படிப்படியாக தன்முனைப்பு பெற்றுவருகிறார்கள். கனவை நனவாக்கத் தேவையான செயலை மேற்கொள்வதற்கு அவர்கள் விருப்பத்துடன் முன் வருகிறார்கள். 2014இல் நாம் ஆரம் பித்த இந்தியாவைத் தூய்மைப் படுத்துதல் என்ற இயக்கம் சிரமங்கள் மிகுந்த இயக்கமாகும். ஆனால் நான்கு ஆண்டுகள் கடந்த பிறகு பார்த்தால், தேவையான அடிப்படை விஷயங்களை செய்து முடித்துள்ளோம் என்பதற்கும், வர இருக்கின்ற சாதகமான விளைவு களுக்கும் இந்த நாட்டின் மக்களாக நாம் கூட்டாகப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ●

---

- **நிதின் கட்கரி**, சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை, கப்பல் போக்குவரத்து, நீராதாரங்கள், ஆறுகள் மேம்பாடு, கங்கை நதி தூய்மையாக்கல் துறைகளுக்கான மத்திய அமைச்சர்.

# சுத்தமான, சுகாதாரமான கிராமங்களை நோக்கி

- நரேந்திர சிங் தோமர்



நம்நாட்டு மக்கள் பெரும்பாலும் கிராமங்களில் வாழ்கிறார்கள், கிராமங்கள் முன்னேற்றம் அடைந்தால்தான் இந்தியா எல்லோரையும் உள்ளடக்கிய மேம்பாடு அடைந்த நாடாக இருக்கமுடியும். பிரதமரின் தலைமையில் இந்திய அரசு கிராமப்புறங்களில் அனைத்து மேம்பாட்டையும் உருவாக்க முனைகிறது. ஆனால், கிராமப்புற இந்தியா சுத்தமாக இல்லாவிட்டால் இந்த மேம்பாட்டுக்கனவு நிறைவு பெறாது. கிராமப்புறங்களில் பெருமளவு முன்னேற்றத்தை ஏற்படுத்த அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துவருகிறது. இந்த முயற்சியில் சுத்தம் ஒரு முக்கியமான அங்கமாகும். கிராமப்புறங்கள் சுத்தமாக இல்லாவிட்டால் அங்கு முன்னேற்றம் முழுமையாக இருக்காது. கிராமப்புறங்களில் வசிக்கும் கோடான கோடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றியமைக்க புதுமாதிரியான பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு முயற்சியே சுத்தமான பாரதம் இயக்கம் என்பதாகும்.

அக்டோபர் 2, 2014இல் பிரதமர் துவக்கி வைத்த சுத்தமான பாரதம் இயக்கத்தின் நோக்கம் மனிதவாழ்வை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் கண்ணியமாகவும் இருக்கும் வகையில் மாற்றியமைக்க வேண்டும் என்பதே. சுத்தம் என்பது, வாழ்க்கையில் உந்துசக்தியாக மட்டுமல்லாமல் மனிதமேம்பாட்டிற்கு அடிப்படையாகவும் இருக்கிறது. சுத்தமாக இல்லாத நிலையில் எந்த சமுதாயமும் வெற்றி பெறமுடியாது. சுத்தமற்ற சூழ்நிலையில் கல்வி, சுகாதாரம், ஏழ்மை ஒழிப்பு, மனித வளமேம்பாடு ஆகிய இலக்குகளை நம்மால்; அடையமுடியாது.

சுத்தம் என்பது ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு முக்கிய பங்களிக்கிறது. செங்கோட்டையில் சுதந்திரநாள் உரையாற்றிய பிரதமர் சுத்தமான பாரதத்தை உருவாக்குவதற்கான முழக்கத்தை வெளியிட்டார். சுத்தத்திற்கு மிகப் பெரிய தேசிய அந்தஸ்தை வழங்கினார். புதுடெல்லியில் சுத்தமான பாரத இயக்கத்தைத் துவக்கிய பிரதமர், 2019இல் அண்ணல் காந்தியின் 150ஆவது பிறந்த ஆண்டு நிறைவைக் கொண்டாடும் போது சுத்தமான இந்தியா என்ற அவரின் கனவை நிறைவேற்றுவது, இந்தியமக்கள் ஒவ்வொருவரின் கடமை என்றார். இன்று, நாட்டு

மக்கள் யாவரும் இந்த நினைவில் ஒன்றியுள்ளனர். பலதரப்பட்ட மக்கள் சுத்தமான பாரதம் என்ற இயக்கத்தை முழுத்துடிப்போடு செயல்படுத்தி வருகின்றனர். தினமும் பலகோடி மக்கள் இந்த சுத்தமான பாரதம் இயக்கத்தில் சேருகிறார்கள். இன்று, 22 மாநிலங்களில், 468 மாவட்டங்களில் உள்ள 4,68,000க்கும் மேற்பட்ட கிராமங்கள் பொது இடங்களில் மலக்கழிப்பு இல்லாத பகுதிகளாக உருவாகியுள்ளன. அக்டோபர் 2, 2014 முதல், தனிநபர் வீடுகளில் 8.59 இலட்சத்திற்கும் மேற்பட்ட கழிப்பறை வசதிகள் கட்டப்பட்டுள்ளன. அக்டோபர் 2, 2014இல் கழிவு அகற்றல் இந்தியாவில் 38.70 சதவிகிதமாக இருந்தது தற்போது 93.90 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. சுகாதாரம் மற்றும் சுத்தம் சம்மந்தப்பட்ட துறையில் இவ்வளவு பெரிய முன்னேற்றத்தை உலகில் இதுவரை எங்கும் கண்டதில்லை. உலகெங்கிலும் மக்கள் இந்தியாவின் இந்த பெரும் முயற்சியை உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டால் நிலைமையை மாற்றமுடியும் என்பது உறுதியாகி உள்ளது. இந்தியாவின் இந்த வெற்றியால் உந்தப்பட்ட பல நாடுகள் தங்களுடைய கழிவு அகற்றல் சுகாதார நிலைமையை மேம்படுத்த முனைந்துள்ளன.

**நம் கிராமங்களின் விதியை மாற்றியமைத்தல்:**

இன்று நம் கிராமங்களின் தலைவிதி சுத்தமான பாரதம் என்ற திட்டத்தால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இன்று, வெட்டவெளியில் கழிப்பு இல்லாத கிராமங்களில் முன்பு பல நோய்களுக்கு செலவிடப்பட்ட ஒரு குடும்பத்திற்கு சுமார் ரூ.50,000 வரையிலான பணம் சேமிப்பாக மாறியிருப்பது தெரியவந்துள்ளது. இப்படி சேமிக்கப்பட்ட பணத்தின் மூலம் கிராமப்புறக் குடும்பங்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு சிறந்த கல்வியையும் பிற வாழ்க்கை வளங்களையும் வழங்கி வருகிறார்கள். மக்களின் உடல்நலப் பாதுகாப்பிற்காக செலவிடப்படும் தொகை குறைந்து அதிக நாட்கள் பணி செய்கிறார்கள். உலக சுகாதார அமைப்பின் ஒரு ஆய்வின்படி சுத்தமான பாரதம் இயக்கம் துவங்கிய பின் கிராமப்புறங்களில் ஒவ்வொரு ஆண்டும் பல குழந்தைகள் உயிர்க்கொல்லி நோய்களுக்கு ஆளாவதை தடுத்திருக்கிறோம். இந்த முன்னேற்றம் தொடர்கிறது.






**அற்புதமான முயற்சிகள்:**

சுத்தமான பாரதம் இயக்கத்தால் பல அற்புதமான முயற்சிகள் கிராமப்புறங்களில் என்றும் காணாத நிலையில் உருவாகியுள்ளன. சுத்தமான பாரதம் இயக்கத்திற்கு சுயஉதவிக் குழுக்களில் உள்ள மகளிர் பெரிய அளவிலான பங்களிப்பை வழங்கியுள்ளனர். அவர்கள், தங்களுடைய சேமிப்பை இந்தத் துறையில் முதலீடு செய்து, சுற்றுச்சூழலையும், சுற்றுப்புறத்தையும் அழகாகவும் சுத்தமாகவும் வைத்துக்கொள்ள உதவியுள்ளனர். பண நெருக்கடியில் உள்ள பல குழுக்களுக்கு இந்த சுயஉதவிக்குழு மகளிர் நிதிஉதவி செய்துள்ளனர். ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளும் பல முயற்சிகளுக்கு இந்த சுயஉதவிக்குழுக்கள் வலுவூட்டியுள்ளன. பஞ்சாயத்து பிரதிநிதிகள் கூட சுத்தமான பாரதம் இயக்கத்திற்கு மிக அரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். அவர்கள் தங்களுடைய பஞ்சாயத்துப் பகுதிகளில் பொதுக்கழிப்பு இல்லாத சூழ்நிலையை ஏற்படுத்தி

செயல்படுத்தி வருகின்றனர். அவரவர் பகுதியை பொதுக்கழிப்பிடம் இல்லாத பகுதியாக மாற்ற அங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி ஈடுபடுத்தியது மட்டுமல்லாமல் திட மற்றும் திரவக் கழிவுகளை நீக்க மேலாண்மைப் பணிகளையும் மேற் கொண்டுள்ளனர். சுத்தமான பாரதம் இயக்கம், இப்போது பெரிய மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது. அதனை முறைப்படுத்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி சட்டத்தின்கீழ் ஊரகவளர்ச்சி மேம்பாட்டு அமைச்சகம் பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதில், பஞ்சாயத்து பகுதிகளில் சுத்தம் சார்ந்த விழிப்புணர்வை ஏற் படுத்தவும், வாழ்வுரிமை வாய்ப் புக்களை ஏற்படுத்தும் திட்டங் களை செயல்படுத்தவும் கிராமப்புற மக்களுக்கு உற்சாகமும் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. ஊரக வளர்ச்சி அமைச்சகம் கிராமப் புறத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டி லும் கழிவறை, திட மற்றும் திரவக்கழிவை உரங்களாக மாற்றும் திட்டத்தையும், கழிவுநீரை அகற்றும் வடிகால்களையும், குப்பையிலிருந்து உயிரித்தொழில்நுட்பம் மூலம் உரங்கள் தயாரிப்பது, பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் கழிவறை களைக் கட்டுவது, கிராமப்புறங்களில் வடிகால்களைக் கட்டுவது மழைநீரை சேமிக்க குளங்களை உருவாக்குவது மற்றும் கழிவுநீரை சுத்தமாக்கும் திட்டங்கள் ஆகியவற்றை செயல் படுத்துகிறது. இதன் மூலம் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும், சுத்தமான பஞ்சாயத்தாக மாறுகிறது.



**அசுத்த நீர் மேலாண்மை:**

அசுத்த நீர் மேலாண்மை என்பது உலகளவில் இன்று மிகப்பெரிய சவாலாக உள்ளது. கிராமப்புறம் ஆனாலும், நகர்ப்புறம் ஆனாலும் அசுத்தமான நீரை கையாள் வதற்கான திட்டங்களும் உள் கட்டமைப்பு வசதிகளும் இல்லா விட்டால் பல சுகாதார சீர்கேடு களும்; பல நோய்களும், தொற்றுக் களும் ஏற்படுகின்றன. இதன் மேலாண்மையின் ஒரு பகுதியாக தெலுங்கானா மாநிலத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி சட்டத்தின் கீழ் கழிவு நீர்த் தொட்டிகள் குடும்பத்தின் அடிப்படையிலும், பொதுவான இடங் களிலும் அமைக்கப்படுகின்றன. இதைப்போலவே, மகாராஷ்டிரா மாநிலத்தின் நாந்தேர் மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு சட்டத்தின் நிதிகளை பயன்படுத்தி கழிவுநீர்த்தொட்டிகள் கட்டப்பட்டுள்ளதால், அந்த கிரா மங்களில் கொசுத் தொல்லை ஒழிந் துள்ளது. இந்தத்திட்டம், சுமார் 30 கிரா மங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால், கழிவுநீர்த் தொட்டிகளில் நீர் நிலத்திற்குள் செல்வதால், கொசு உற்பத்தி குறைந்து மக்கள், கொசு சார்ந்த நோய்களிலிருந்து தப்பித்து நிம்மதியாகத் தூங்கமுடிகிறது. மிசோராம் மாநிலத்தின் ஐசுவால் மாவட்டத்தின் லெங்குவான் ஊராட்சி பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு சட்டத்தின் கீழ் லிங்குவின் என்னுமிடத்தில் நீர்த் தொட்டி ஒன்று கட்டப்பட்டுள்ளது. ஐசுவால் மாவட்டத்தில் உள்ள விமான நிலையத்திற்கு செல்லும் வழியில் இந்த நீர்த்தொட்டி ஒரு விமானம் போன்ற வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. அந்தத் தொட்டியிலிருந்து குழாய்கள் மூலம் மக்களுக்கு குடிநீர் வழங்கப்படு கிறது. இந்தப் பகுதியில், கட்டணக் கழிவறைகளும் கட்டப்பட்டுள்ளன.

இப்படிப்பட்ட வசதிகளோடு கட்டப்பட்டுள்ள இந்த தண்ணீர்த் தொட்டி பல பணிகளுக்கு உதவும் ஒரு சொத்தாக விளங்குகிறது. கிராமப் பஞ்சாயத்திற்கு வருமானமும் கிடைக்கிறது.

ஹரியானா அரசு, கிராமப் புறங்களில் ஐந்து குளம் என்ற ஒரு திட்டத்தை செயல்படுத்தி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு சட்டத்தின் கீழ் வீணான தண்ணீரைப் பயன்படுத்தும் திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. இதன் முக்கிய நோக்கம், கழிவுநீரை அப்புறப்படுத்தி சுத்தமான சூழ் நிலையை உருவாக்கி கிராம மக்களுக்கு சுகாதாரமாக வாழும் சூழ்நிலையை ஏற்படுத்துவதாகும். கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டத்தில் மட்டிலாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அரியத் கிராமப்பஞ்சாயத்தில் கட்டுமானப் பொருட்கள் தயாரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இங்கு உருவாக்கப்படும் சிமெண்ட் பிளாக்குகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கட்டப்படும் தனிநபர் வீடுகளிலான கழிவறைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. இந்தச் சட்டத்தின் கீழான மற்றொரு திட்டத்தில் மண் புழு உருவாக்கும் இயற்கை உரம் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

**தனிநபர் கழிவு நீர் மேலாண்மை:**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி சட்டத்தின் கீழ் செலவு செய்யப்படும் பெருந்தொகையை கொண்டு கிராமப் புறங்களை சுத்தமாக வைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறந்த பலன்களும் கிடைத்துள்ளன. 2014-15 நிதியாண்டில் இந்தத் திட்டத்தின் கீழ் தனிநபர் வீடுகளில் கழிவறைகள் கட்டுவதற்காக 92435 இலட்சம் ரூபாய் செல விடப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் ரூபாய் 13935 இலட்சத்திற்கும் மேல் செலவு செய்யப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் கழிவு நீர்த் தொட்டிகளுக்காக செலவிடப்பட்ட தொகையான ரூபாய் 15598 இலட்சம் அதற்கு முந்தைய ஆண்டான 2014-15இல் இருந்த ரூ.2938 இலட்சத்தை விட மிகவும் அதிகமாகும். 2014 15இல் திடக்கழிவு மேலாண்மை திட்டமாக மண்புழு, இயற்கை உரம் தயாரிக்கும் தொட்டிகள் கட்டுவதற்கு ரூ.1676 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டு, ரூ.54853 கோடி இலட்சமாக இருந்தது. 201415 நிதியாண்டில் திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மைத் திட்டங்களான கழிவுநீர் வடிகால்கள், திரவ உயிரிஉரங்கள், மழைநீர் சேமிப்புத்தொட்டிகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் கழி வறைகள், கிராமப்புறங்களில் கழிவுநீர் வாய்க்கால்கள் மற்றும் குளங்கள் கட்டுவதற்கு ரூ.49512 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. இதே பணிகளுக்காக 2017-18 நிதியாண்டில் ரூ.85221 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. 2014-15 நிதியாண்டில் நீர் சேமிப்புத் திட்டங் களுக்காக சுமார் 4,71,230 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளன. 2017-18 நிதியாண்டில் இந்தத்திட்டத்திற்கு ரூ.6,ஷ 92,216 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. 2014-15 நிதியாண்டில் சுத்தம் சார்ந்த அனைத்துத் திட்டங்களுக்கும் ரூ.6,17,792 இலட்சம் ரூபாய்கள் செலவிடப்பட்டன. இது, 2015-16இல் ரூபாய் 6,98,357 இலட்ச மாகவும் 201718இல் ரூ.9,87,822 இலட்சமாகவும் இருந்தது. இந்த நிதியாண்டிலும் இதுவரை, சுத்தம் சார்ந்த அனைத்து திட்டங்களுக்கும் 5,93,070 இலட்சம் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன. ஆகவே, கிராமப்புறங்களில் ஒட்டுமொத்த தூய்மைத் திட்டங்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்ட நிதிகள் பெருமளவு செலவிடப்பட்டுள்ளன.

**நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்:**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி சட்டத்தின்கீழ் தூய்மைத் திட்டங்களுக்காக செலவிட்ட தொகையில் 2014-15இல் 13.88 இலட்சம் தனிநபர் வீடுகளில் கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன. 2015-16 நிதியாண்டில் சுமார் ஏழு இலட்சம் கழிவறைகளும், 2016-17 நிதியாண்டில் 7.50 இலட்சம் கழிவறைகளும் 2017-18 நிதியாண்டில் சுமார் ஒன்பது இலட்சம் கழிவறைகளும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்ட நிதியின் மூலம் கட்டப்பட்டுள்ளன. 2016-17 நிதியாண்டில், கழிவு நீர்த்தொட்டிகள் கட்டமைப்பு துரிதப்படுத்தப்பட்டது. 2015-16 நிதியாண்டில் கட்டப்பட்ட 37,000 கழிவு நீர்த்தொட்டிகளை காட்டிலும் 2016-17 நிதியாண்டில் 4,21,553 கழிவு நீர்த்தொட்டிகள் கட்டப்பட்டன. 2017-18ஆம் நிதியாண்டில்கூட 2,19,000 கழிவு நீர்த்தொட்டிகளுக்கு மேல் கட்டப்பட்டுள்ளன. திடக்

கழிவுகளைப் பயன்படுத்தி மண்புழு உர கம்போஸ்டு தொட்டிகளைக் கட்டுவதிலும் சிறப்பான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. 2014-15ஆம் நிதியாண்டில் 5000ஆக இருந்த இந்த தொட்டிகள் 2016-17இல் 1,82,000ஆகவும் 201718இல் 2,54,000 ஆகவும் உயர்ந்துள்ளன. இந்தக் காலகட்டத்தில் உருவாக்கப்பட்ட திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை திட்டங்களான வடிகால் கால்வாய்கள் திரவ உயிரி உற்பத்தி கழிவு நீர்த் தொட்டிகள், பள்ளிகள், அங்கன் வாடிகளில் கழிவறைககள், கிராமங் களில் வடிகால் கால்வாய்கள் மற்றும் குளங்கள் ஆகியவைகளை கட்டுவதில் மிகுந்த முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. 2015-16ஆம் நிதியாண்டில் இப்படிப்பட்ட பணிகள் 82564 மேற்கொள்ளப்பட்டன. 2016-17 நிதியாண்டில் இவற்றின் எண்ணிக்கை 3,82,725ஆகவும் 2017-18 நிதியாண்டில் 183000 மேற்பட்ட பணிகள் முடிவடைந்துள்ளன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி சட்ட நிதி குடிநீர் சேமிப்பு திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டு நல்ல பலன்களை தந்துள்ளது. நீர் சேமிப்பு திட்டத்திற்கான உள் கட்டமைப்பு மேம்பாட்டுப்பணிகள் 2014-15இல் 2,76,000 அளவிற்கு மேற்கொள்ளப்பட்டன. இது 2015-16 நிதியாண்டில் 2,77,000 பணிகளாகவும் 2016-17இல் 6,00,000 பணிகளாகவும் 2017-18இல் 3,84,000 பணிகளாகவும் இருந்தன.

**சவால்களை சந்திப்போம்:**

மேற்கூறப்பட்ட செயல்திட்டங்களை நாம் பார்க்கும்போது, கிராமப்புற மேம்பாட்டிற்கும், சுத்தத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் தெரிகிறது. கிராமப்புறங்களை மேம்படுத்தவும், சுத்தமாக வைக்கவும், ஊரக மேம்பாட்டு அமைச்சகம் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் திட்டங்கள் ஆயிரக்கணக்கான வெற்றித்திட்டங்களை செயல்படுத்தி நம் குடிமக்கள் கிராமப்புறத்தை வளமாகவும், சுத்தமாகவும் வைத்துக் கொள்வதற்கு உதவியுள்ளது.

கிராமப்பஞ்சாயத்துக்கள் கிராமப் புற சுத்தத்தை உறுதியாக்க தனி நபர் வீடுகளில் கழிவறைகள் கட்டுவதோடு மட்டுமல்லாமல், கழிவுகளை மண்புழு உரமாக மாற்றவும் செயல்திட்டங்களை மேற் கொண்டுள்ளன. பஞ்சாயத்துக்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி சட்டத்தின்கீழ் வடிகால் கால்வாய்கள், உயிரி திரவ உரங்கள் தயாரிப்பு, கழிவு நீர்த்தொட்டிகள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் கழிவறைகள், கிராமங்களில் கழிவுநீர் வடிகால்கள் மற்றும் குளங்கள் அமைக்கும் திட்டங்களைக் கொண்டுள்ளன. நம்முடைய கிராமங்களின் மாறுபட்ட தன்மையை கருத்தில் கொண்டு நாட்டில் உள்ள 2,38,617 கிராம பஞ் சாயத்துக்களிலும் ஒரே மாதிரியான சுகாதார மேம்பாடு திட்டங்கள் மேற்கொள்ளப்படமுடியாது என்பதை நாம் உணர வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏற்ப, எளிதாக மேற்கொள்ளப்படக்கூடிய, சிக்கனமான குறைந்தபட்ச தொழில் நுட்பங்களை கொண்ட திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி சட்டத்தின்கீழ் கிராமப்புற இந்தியாவை சுத்தமாக்கும் பல திட்டங்கள் தற்போதைய அரசால் மிக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு அதன் நல் விளைவுகளையும் நாம் இப்போது காண்கிறோம்.

உண்மையில், ஊரக மேம்பாடு அமைச்சகத்தின் இந்த முயற்சிகளால் சுற்றுச்சூழல் சமநிலை உயர்ந்து நம்முடைய கிராமப்புறங்கள் சுகா தாரமான சூழ்நிலைக்கு உயர்த்தப் பட்டுள்ளன. நம் பிரதமர், செப்டம்பர் 15, 2018லிருந்து அக்டோபர் 2, 2018 வரை "சுத்தமே சேவை" என்ற திட்டத்தை செயல்படுத்தியுள்ளார். இந்தத் திட்டத்தில் மக்கள் கொண் டுள்ள ஈடுபாடு பாராட்டுக்குரியது. இந்தத் திட்டத்தை இந்த அக்டோபர் மாதத் திட்டமாக மட்டுமாக கருதாமல் வாழ்நாள் முழுதும் கடைபிடிக்கவேண்டும் என்று நம் கிராம மக்களை நான் கேட்டுக் கொள்கிறேன். தங்களுடைய வீடுகளையும், தெருக்களையும், கிராமங்களையும் சுத்தமாக வைத்து கிராமப்புற வாழ்க்கையை செழுமைப்படுத்தவேண்டும். இதுவே புதிய பாரதத்தை உருவாக்கு வதற்கான அவர்களின் அரிய பங்களிப்பாக இருக்கமுடியும். ●

---

- **நரேந்திர சிங் தோமர்**, இந்திய அரசின் ஊரக வளர்ச்சி, பஞ் சாயத்து ராஜ் மற்றும் சுரங்கங்கள் துறை அமைச்சர்.

# சுத்தமான, சுகாதாரமான பாரதத்தை நோக்கி உறுதியான பயணம்

- தர்மேந்திர பிரதான்

"சுத்தமான பாரதம் என்ற நம் இலக்கை 100 மகாத்மா காந்தி அல்லது 1000 நரேந்திர மோடி அல்லது அனைத்து முதலமைச்சர்களும், அரசுகளும் இணைவதால் மட்டுமே எட்டமுடியாது. ஆனால், 125 கோடி இந்தியர்களும் இணைந்தால் அந்தக் கனவை எளிதாக நனவாக்கலாம்."

– மாண்புமிகு இந்திய பிரதமர் திரு. நரேந்திரமோடி


**அ**க்டோபர் 2, 2014இல் காந்தி ஜெயந்தி அன்று பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி சுத்தமான பாரத இயக்கம் துவக்கியபோது, நம் சமீபகால சரித்திரத்தில் மிக முக்கியமான ஒரு சமூகத் திட்டம் ஆரம்பமானது. இது வரையில் இல்லாத அளவிறகான ஒரு குறுகிய காலத்தில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஒரு பொது இலக்கை அடைய ஒன்றாக உழைத்தனர். கடந்த நான்கு ஆண்டுகளில் சுத்தமான பாரத இயக்கம் என்பது சிந்தனை வடிவில் இருந்து செயல் வடிவில் ஒரு பெரிய மாற்று சக்தியாக உருவெடுத்துள்ளது. எல்லாவற்றிலும் சுத்தம் என்ற உச்சகட்டத்தை நாம் அடையவில்லை என்றாலும் இது வரை காணாத முன்னேற்றத்தை நாம் நாடெங்கிலும் காணலாம். கழிவுநீர் சுத்தம் 2014இல் 38 சதவிகிதமாக இருந்தது 2018இல் 90 சதவிகிதமாக உயர்ந்தது. ஒன்பது கோடிக்கும் மேற்பட்ட கழிவறைகள் கட்டப்பட்டுள்ளன. 4.5 இலட்சத்திற்கும் கிராமங்களுக்கு அதிகமான கிராமங்கள் பொது இடங்களில் மலம் கழித்தல் இல்லாத கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. கோடிக்கணக்கான மக்களுக்கு கழிவறை வசதிகள், சுத்தமான குடிநீர் மற்றும் சுத்தமான சுற்றுபுறச் சூழல் சார்ந்த சுத்தங்கள் ஏற்பட்டு, அதனால் உடல் ஆரோக்கியம் மேம்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின் சமீபத்திய ஒரு அறிக்கையின்படி சுத்தமான பாரத இயக்கத்தின் மூலம் 2014இல் இருந்து அக்டோபர் 2019 வரை சுமார் மூன்று இலட்சம் இறப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன. மிகவும் முக்கியமாக சுத்தம் என்பது தனிநபர் பழக்கமாக இருந்து, ஒரு பெரிய சமூக முன்னேற்ற இயக்கமாக இந்தியாவில் உருவாகியுள்ளது.

நான் மத்திய பெட்ரோலியம், இயற்கை வாயு, திறன்மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சராக சுத்தமான பாரத இயக்கத்தைச் செயல்படுத்த முழுமனதுடன் ஈடுபட்டிருக்கிறேன். இந்த இரண்டு அமைச்சகங்களும், இந்த இயக்கத்திற்கு துடிப்போடு ஆதரவு அளித்து, சுத்தமான, ஆரோக்கியமான பாரதத்தை உருவாக்கத் தேவையான வளங்களைத் திரட்டிவருகிறது. மிகப்பெரிய கொள்கை மாற்றங்கள் மற்றும் வலுவான முயற்சிகள் மூலம் சுத்தமான, பசுமையான, சுகாதாரமான இந்தியாவுக்கான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. தூய்மை செயல்திட்டத்திற்கு பெட்ரோலியம், இயற்கைவாயு அமைச்சகம், சுத்தமான பாரத இயக்கத்திற்கு அமைச்சகங்களுக்கிடையேயான நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசின் அமைச்சகங்களிலேயே நான்காவது உயர் அளவான ரூ.335.68 கோடியை 2017-18ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்தது. ஆண்டு முடிவில், நிர்ணயிக்கப்பட்டிருந்த இலக்கைவிடவும் 20 சதவிகிதம் அதிகமாக ரூ.402 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருந்தது.

இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனங்களான எண்ணெய், எரிவாயு சார்ந்த மத்திய பொதுத் துறை நிறுவனங்களும் பிற கூட்டுமுயற்சிகளும் அவர்களுடைய வணிகச்சூழல் மற்றும் நிறுவன சமூகப்பொறுப்பு சார்ந்த பல உள்கட்டமைப்பு மற்றும் கழிவு நீர் சுத்தத் திட்டங்களை மேற்கொண்டுள்ளதோடு மட்டுமல்லாமல், சுத்தமான பாரத இயக்கத்தின் இலக்குகளை அடைய இந்த சமூகமாற்றத்தில் உணர்ச்சிபூர்வமாக கலந்து கொண்டும் உள்ளன. அக்டோபர் 2014லிருந்து நாம் எந்த அளவு செயல்பட்டிருக்கிறோம்

என்பதை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் நான் பெருமை கொள்கிறேன். இந்த முயற்சி, சுத்த மான ஆரோக்கியமான பாரதத்தை உருவாக்க அவர்கள் உறுதி யாகவும், புதுமையான வகைகளிலும் பணிகளை மேற்கொண்டுள்ளனர் என்பதையே காட்டுகிறது.

அரசுடைமையாக்கப்பட்ட பெட் ரோலியப் பொருள்கள் விநியோக நிறுவனங்களின் பெட்ரோல் பங்க்குகள் நாடெங்கிலும் பரந்து விரிந்துள்ளன. அங்கே பலகோடி மக்கள் தினமும் தங்களுடைய வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பச் செல்லும் நிலையில் அங்கு கழிவறை வசதிகள் இருந்தால் அவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, சுத்தமான பாரதம் இயக்கம் திட்டத்தின்கீழ் அனைத்து பெட்ரோல் பங்க்குகளிலும் சுத்தமான கழிவறைகள், சுத்தமான குடிநீர் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்தும் வசதிகளுக்கு தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கட்டுரை எழுதும் சமயம் வரையில், மொத்தம் உள்ள 56601 பெட்ரோல் பங்குகளில் 55784இல் கழிவறை வசதிகள் உள்ளன. பெண்களுக்கு பாதுகாப்பான, கண் ணியமான சேவைகளை வழங்க தங்களை அர்ப்பணித்துக்கொள்ளும் பெட்ரோலியம் நெடுஞ்சாலை, இயற்கைவாயு அமைச்சகம் செப்டம் பர் 2018வரை தேசிய நெடுஞ் சாலை, மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள பெட்ரோல் பங்க்குகளில் சுமார் 90 சதவிகித பங்க்குகளில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியேயான கழிவறைகளை உருவாக்கியுள்ளது. swachhta@ petrolpump செயலி தொழில்நுட்பம் மூலம் பயனீட்டாளர்களிடமிருந்து இந்தியா முழுவதிலும் உள்ள பெட்ரோல் பங்க்குகளில் உள்ள




கழிப்பறைகள் பற்றிய குறைகள் மற்றும் அவற்றின் சுத்தம் சார்ந்த கண்காணிப்பும் உடனுக்குடன் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ் வொரு பொதுத்துறை வங்கியிலும் பெட்ரோலியப் பொருள்கள் விநியோகக் கம்பனிகளின் பெட்ரோல் பங்குகளிலும் ஆண் களுக்கும், பெண்களுக்கும் தனித் தனியே கழிவறையை மக்கள் பயன்படுத்தும் வகையில் உருவாக்கி அவற்றை சுத்தமாக வைத்திருப்பது நாங்கள் மேற்கொள்ளும் தொடர் நடவடிக்கையாகும். அதனை நாங் கள் அடைந்தே தீருவோம். பல நூற்றாண்டுகளாக இந்திய மகளிர் விறகு அல்லது நிலக்கரி அடுப்பின் புகையில் அவஸ்தைபடுகிறார்கள். இந்த அடுப்புகளில் விறகு, நிலக்கரி மற்றும் வரட்டி போன்றவற்றைப் பயன்படுத்துவதால் மரங்கள் வெட்டப்படுவதோடு வீட்டிற்குள் மாசு ஏற்பட்டு பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மூச்சு சார்ந்த பல வியாதிகள் உருவாகின்றன. இந்த அடுப்பில் சமைக்கும் பெண்கள் நீண்ட நேரம் அடுப்பறையில் முடங்கிக் கிடக்கவேண்டிய நிலையில் அவர்களின் மற்ற வாழ்வாதாரங்கள் குலைந்து அவர்களுடைய சமூக சமத்தன்மை பெரிதும் பாதிக்கப் படுகிறது. இப்படிப்பட்ட ஏழை, பின்தங்கிய பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் துயரங்களை உணர்ந்த பிரதமர் சமையல் எரிவாயு உருளை வாங்க முடியாத குடும்பங்களுக்கு எரிவாயு வழங்கும் புரட்சியைத் துவக்கியுள்ளார். 1.5.2016இல் பிரதம மந்திரி உஜ்வலா திட்டம் துவங்கப்பட்ட பின் நாட்டிலுள்ள பின்தங்கிய, ஷெட்யூல்டு வகுப்பு, ஷெட்யூல்டு பழங்குடியினரை சார்ந்த மகளிருக்கு 5.51கோடி சமையல் எரிவாயு இணைப்புகளை வழங்கியுள்ளார். இதனால், மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள நல்ல மாற்றங்களைக் கருத்தில் கொண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்தத் திட்டத்தின்கீழ் 2020க்குள் எட்டு கோடி இணைப்புகளை வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளார். இந்தியா சுதந்திரம் அடைந்ததிலிருந்து 2014வரை நாட்டில் சமையல் எரிவாயு புழக்கம் 54 சதவிகிதமாக இருந்தது. 2018இல் நான் இந்த நேரம் வரை அது 88 சதவிகிதமாக உயர்ந்திருப்பதால் சுற்றுசூழலுக்கு அதனால் விளைந்திருக்கும் பயனை நாம் அறியலாம்.

இந்தியப் பொருளாதாரம் வேக மாக வளர்ந்துவரும் நிலையில் போக்குவரத்துக்காக பெட்ரோலியப் பொருள்களின் பயன்பாடு அதிகரித்துக்கொண்டே வரும் நிலை யில் சுற்றுசூழல் மாசும் அதிகரிக்கும். பாரிசில் நடைபெற்ற உலகச் சுற்றுசூழல் மாநாட்டில் இந்தியா மேற்கொண்டுள்ள பருவநிலை மாற்ற ஒப்பந்தங்களுக்கு ஏற்ப வண்டி களிலிருந்து வெளிப்படும் மாசை கட்டுபடுத்துவதற்கு எரிபொருள் செயல்திறனை உயர்த்த அரசு பல நடவடிக்கைகளை மேற் கொண்டுவருகிறது. ஒழுங்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள இந்தியா எரிபொருள் தரத்தை உயர்த்தவும், வண்டிகளிலிருந்து வெளிப்படும் மாசுக்காற்றை குறிப்பிட்ட ஒரு தரத்திற்குள் வைக்கவும் பாரத் ஸ்டேஜ் என்ற அளவுகோலை பயன்படுத்தி ஏப்ரல் 2017 வாக் கிலேயே எல்லா பெட்ரோல் பங்கு களிலும் பாரத் ஸ்டேஜ் நான்காம் அளவு ஒழுங்குமுறையை செயல் படுத்தியுள்ளது. இது அல்லாமல், பெட்ரோலியப் பொருள்களில் பாரத் ஸ்டேஜ் நான்கிலிருநது பாரத் ஸ்டேஜ் 6 என்ற தரநிலையைக் கடை பிடிப்பதற்கு நேரடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாரத் ஸ்டேஜ் 6 தர நிலை நான்காம் நிலையைவிட குறைந்த அளவே மாசை வெளிப்படுத்தும். இது, உலகத்தரமான யுரோ 6 நிலைக்கு ஒப்பாகும். பாரத் ஸ்டேஜ் 6வது நிலை டெல்லியில் உள்ள பெட்ரோல் பங்க்குகளில் ஏப்ரல் 2018லிருந்து வழங்கப்பட்டு, ஏப்ரல் 2020க்குள் நாட்டிலுள்ள எல்லா பெட்ரோல் பங்க்குகளிலும் கிடைக்கும்படி செய்யப்படும்.

விரைவான பொருளாதார வளர்ச்சி யோடு பருவநிலை மாற்றத்தையும் பாதுகாக்கும் மிகப்பெரிய சவால் இந்தியாவிற்கு உள்ள நிலையில் உயிரி எரிபொருள்களும் மிகுந்த வாய்ப்புகளை வழங்குகின்றன. விவசாயப் பொருளாதாரத்தை நாம் கடந்து சென்று விட்டாலும், கோடிக்கணக்கான மக்கள் இன் னமும் நிலத்தை நம்பியே வாழ் கிறார்கள். வடமாநிலங்களில் வாழும் மக்கள் குளிர்காலத்தில் விவசாயிகள் விவசாயக்கழிவுப் பொருள்களை எரிப்பதினால் ஏற்படும் புகையினால் பாதிப்புகள் ஏற்படுவதை உணர்வார்கள். இந்தச் சுற்றுசூழல் மாசு பிரச்சினையைக் கட்டுப்படுத்தவும், விவசாயக் கழிவுப்பொருள்களிலிருந்து விவசாயிகளுக்கு வருமானத்தை ஈட்டித்தரவும், இந்திய அரசு 2018இல் உயிரி எரிபொருள் தேசியக்கொள்கை ஒன்றை அறிவித்துள்ளது. விவசாய கழிவு பொருள்களிலிருந்து உயிரி எரிபொருளை உற்பத்தி செய்யும் இரண்டாவது தலைமுறை உயிரி சுத்திகரிப்புச் சாலைகள் 12-ஐ நிறுவும் திட்டம் உள்ளது. இதுவரை, பெட்ரோலில் நான்கு சதவிகித அளவிற்கு எத்தனால் எனும் எரிபொருளைக் கலந்து, விநியோகிப்பதால் 7.8 மில்லியன் மெட்ரிக் டன் அளவிற்கு மாசுக்காற்று வெளிப்பாடு குறைந்துள்ளது. அது அல்லாமல், எரிபொருள் இறக்குமதியில் 1520 மில்லியன் டாலர் சேமிப்பும் ஏற்பட்டுள்ளது. நமது இலக்கு பெட்ரோலில் பத்து சதவிகிதம் வரை எத்தனாலைக் கலப் பதாகும். ஏற்கனவே பயன்படுத்தப் பட்ட உணவுவகை சமையல் எண் ணெய்யை உயிரி டீசல் தயாரிக்கப் பயன்படுத்துவதற்கான சாத்தியம் உள்ளதால் நல்ல வேலைவாய்ப்பும், எரிசக்தி உற்பத்தி அதிகரிப்பும் ஏற் கனவே பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் உணவுத் தொழிலில் தவறாகப் பயன்படுத்தப்படுவதும் தடுக்கப்படும். 2014லிருந்து பெட் ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், சூரிய ஒளியிலிருந்தும், காற்றிலிருந்தும் மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களைத் துரிதப்படுத்தியுள்ளது. பெட்ரோலியப் பொருள்கள் துறையைச் சேர்ந்த பொதுத்துறை எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனங்கள் 2010-14இல் 299.60 மெகாவாட் அளவிற்கு உற் பத்தி அளவு செய்த காற்றாலை மின்சாரம் 2014-18இல் 369.80 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது. இந்நிறுவனங்களின் நிறுவப்பட்ட சூரிய ஒளி மின்சார உற்பத்தி, 2010-14இல் 15.63 மெகாவாட்டாக இருந்தது, 2014-18இல் 70.87 மெகாவாட்டாக உயர்ந்துள்ளது.

மத்திய பொதுத்துறை எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனங்கள் மிக இலாபகரமாக செயல்படுவதாலும், அவர்களுடைய நிறுவன சமூகப் பொறுப்பு ஒதுக்கீட்டில் 33 சத விகிதத்தை சுத்தமான பாரத திட்டங்களுக்கு ஒதுக்கியிருப்பதாலும் பல திட்டங்களை மேற்கொண்டு ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிலைத்து நிற்கும் நற்பயன்களை செய்திருக்கிறார்கள். இந்த நிறு வனங்கள், சுத்தமான கல்விக் கூடங்கள் இயக்கத்தின் ஒரு அங்கமாக நாடெங்கிலும் 21750 பள்ளிகளில் கழிவறைகளைக் கட்டியிருக்கிறார்கள். இவற்றில் 95 சதவிகிதம் கிராமப்பபுறங்களில் அமைந்து ஐந்து இலட்சம் பெண் குழந்தைகளுக்கு மேல் பயன் அளிக்கிறது. இந்தப்பள்ளிகளில், குழந்தைகள், படிப்பை பாதியிலேயே நிறுத்துவது வெகுவாகக் குறைந்து இந்த சுத்தமான பாரத திட்டம் எப்படி கல்வியையும், அதிகாரத்தையும் மக்களுக்கு அளிக்கிறது என்பதை நாம் காணமுடியும். இந்தியாவின் பழம்பெரும் நினைவுச் சின்னங்கள் இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் அதே நேரத் தில் இந்த இடங்களில் குப்பை கள் அதிகமாகச் சேருகின்றன.

ஒவ்வொரு நாளும் மக்கள் ஆயிரக்கணக்கில் வரும் இந்த இடங்களில் சுத்தம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, மிகவும் பொருத்தமானதாகும். திருமலை திருப்பதி தேவஸ்தானம், குவாஹாட்டியிலுள்ள காமக்யா கோயில், ஆக்ராவிலுள்ள தாஜ் மகால், கட்ரா ஜம்முவிலுள்ள வைஷ்னோதேவி ஆலயம், மதுரையில் மீனாட்சி அம்மன் ஆலயம், அமிர்தசரசில் உள்ள தங்கக்கோயில் மற்றும் கங்கோத்ரி, யமுனோத்ரி, கயா, காலடி போன்ற இடங்களில் உள்ள புராதன இடங்களைத் தத்தெடுத்து, அவற்றை, சுத்தமாக வைக்கும் பணியை இந்த நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன.

மத்திய பொதுத்துறை எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள மற்றொரு மிகப்பெரிய பணி தமிழ்நாட்டில் தஞ்சாவூருக்கு இந்தியன் ஆயில் நிறுவனம் பாதாள சாக்கடைகளை சுத்தம் செய்வதற்கான இயந்திரத்தை வழங்கியதாகும். குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் எண்ணெய் மற்றும் எரிவாயு கார்ப்பரேஷன் நிறுவனம், சில இடங்களில் மகளிர் பயன்படுத்தும் சுகாதார அணையாடைகளை சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் எரிக்கும் இயந்திரங்களை நிறுவியுள்ளன. அஸ்ஸாம், ஜார்கண்ட் மற்றும் திரிபுரா மாநிலங்களில் ஒரு இலட்சம் மக்களுக்கு மேல் பயன்படும் வண்ணம் ONGC நிறுவனம் மூன்று குடிநீர் வழங்கு தானியங்கி இயந்திரங்களையும் சூரிய ஒளியின் உதவியால் தண்ணீரை சுத்தப்படுத்தும் கருவிகளையும் பொருத்தியுள்ளனர். பாரத் பெட்ரோலியம் நிறுவனம் தமிழ்நாட்டில் ஆவடி மற்றும் பூந்தமல்லி போன்ற இடங்களில் தினம் 174 மெட்ரிக் டன் இயற்கை உரங்களை தயாரிக்கும் 33 குறு காம்போஸ்ட் மையங்களை நிறுவியுள்ளது. இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனம், டாடா அறக்கட்டளையோடு இணைந்து 300 பள்ளிகளில் 50000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நான்கு மாநிலங்களில் சலவை வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. திறன்மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம் குடிநீர் மற்றும் வடிகால் அமைச்சகத்தோடு ஜூலை 2018இல் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டு இரட்டைக்குழி கழிவறைகளைக் கட்டுவதற்கு 50,000 கொத்தனார்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது. கழிவுப்பொருள்களை சேகரிக்கும் பணியில் ஈடுபடுபவர்களை மேலாண்மை செய்யும் அதிகாரிகளுக்குப் பயிற்சியளித்து அவர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது.

சுத்தமான பாரதம் திட்டம் மத்திய அரசின் திட்டமாக மட்டுமில்லாமல் இந்திய மக்கள் அனைவரும் செயல்படுத்தும் திட்டமாக அமையும் என்பது பிரதமமந்திரியின் கனவு. 15 நாள்களுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் சுத்தம்சார் கூட்டங்கள், சுத்தமே சேவை ஆகிய கூட்டங்கள் மூலம் சுத்தமான பாரதம் என்பதை நாம் கொண்டாடுகிறோம். இதன் அடிப்படையில் பெட்ரோலியம், இயற்கைவாயு அமைச்சகமும் மற்றும் திறன்மேம்பாடு, தொழில்முனைவு அமைச்சகமும் இணைந்து சுத்தமான பாரதம் திட்டத்திற்கு தங்கள் உடல் உழைப்பை வழங்கும் ஆயிரக்கணக்கான மக்களைத் திரட்டியுள்ளது. நடைப்பயணங்களையும் சைக்கிள் ஊர்வலங்களையும் நடத்தியுள்ளது. 2017இல் அமைச்சகங்களுக்கிடையேயான சுத்தமான பாரத தேசிய விருது, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்திற்கு வழங்கப்பட்டதை நான் பெருமையாகக் கருதுகிறேன். உண்மையில், சுத்தமான பாரதம் இயக்கம் இப்போது ஒரு மக்கள் இயக்கமாக மலர்ந்து, மக்களிடையே ஒரு பொறுப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும் நம்முடைய பயணம் இன்னும் தொடரவேண்டும். அடுத்த ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதி நாம் மகாத்மா காந்தியின் 150 பிறந்த ஆண்டு நிறைவைக் கொண்டாட இருக்கிறோம். இந்தத் தருணத்தில் நாடெங்கிலும் எந்த இடத்திலும் வெட்ட வெளியில் கழிப்பு இல்லாத நிலையை உருவாக்குவதே நம் தேசத்தந்தைக்கு நாம் சமர்ப்பிக்கும் காணிக்கையாகும். பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம், திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவு அமைச்சகம் இந்த இரண்டும் சுத்தமான பாரத இயக்கத்தின் மூலம் சுத்தமான, பசுமையான, சுகாதாரமான இந்தியாவை உருவாக்குவதற்கு தொய்வின்றிப் பணியாற்றுவார்கள் என்று நான் உறுதியளிக்கிறேன். பிரதமர் நரேந்திர மோடியின் இந்த இயக்கத்தில் மக்கள் அனைவரும் துடிப்போடு இணைந்து செயலாற்றி மகாத்மா காந்தியின் சுத்தமான, சுகாதாரமான பாரதம் என்ற கனவை நனவாக்குமாறு நான் வேண்டிக் கொள்கிறேன்.

"துடைப்பத்தையும் வாளியையும் கையில் ஏந்தாத வரை உங்கள் ஊரையும், நகரையும் சுத்தமாக வைத்துக் கொள்ள உங்களால் முடியாது"

ஜெய்ஹிந்த்! வாழ்க இந்தியா!

– **தர்மேந்திர பிரதான்,** பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, திறன் மேம்பாடு அமைச்சர், இந்திய அரசு.

# துப்புரவுப் புரட்சி: நடைமுறைப்படுத்துவதில் முன்னேற்றம்

- பரமேஸ்வரன் ஐயர்

இந்தியாவை ஒரு நாடாகப் பார்க்கும் போது, 29 மாநிலங்கள் மற்றும் ஏழு யூனியன் பிரதேசங்கள், 130 கோடி மக்கள் தொகை, அவர்களில் 70 விழுக்காட்டினர் சுமார் 700 மாவட்டங்களில் உள்ள ஆறு இலட்சம் கிராமங்களில் வாழ்பவர்கள் என பன்முகத்தன்மை கொண்டதாகத் திகழ்கிறது. எனினும் 2014ஆம் ஆண்டு வரை இந்திய மக்கள் தொகையில் சுமார் 60 கோடி பேர் திறந்தவெளியில் மலம் கழிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். உலக அளவில் திறந்தவெளியில் மலம் கழிப்பவர்களில் 60 விழுக்காட்டினர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திறந்தவெளியில் மலம் கழிப்பதால் எந்த அளவுக்கு நோய்கள் பரவும், நோய்கள் பரவுவதால் எந்த அளவுக்கு வேலை செய்யும் நேர இழப்பு ஏற்படும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை ஏற்படும் ஆபத்துகள், மனித குலத்திற்கு அடிப்படை கண்ணியம் கூட இல்லாமல் போகும் நிலைமை என்பன உள்ளிட்ட பாதிப்புகளை ஒரு நிமிடம் கற்பனை செய்து பாருங்கள்.

ஆனால், 2015ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி இந்தியப் பிரதமர் என்ற வகையில் முதல் விடுதலை நாள் உரையை ஆற்றுவதற்காக தில்லியில் உள்ள செங்கோட்டை கொத்தளத்தில் நரேந்திர மோடி தோன்றி இந்தியாவின் புதிய வரலாற்றுப் பயணத்தை அறிவித்த போது இந்த நிலைமைகள் அனைத்தும் மாறிவிட்டன. தூய்மை பாரதம் என்ற பெயரில் திறந்தவெளியில் மலம் கழிக்கும் வழக்கம் இல்லாத இந்தியாவை உருவாக்குவதுதான் நரேந்திர மோடி தொடங்கி வைத்த புதிய வரலாற்றுப் பயணமாகும்.

இந்திய வரலாற்றில் இதற்கு முன் எந்தப் பிரதமரும், தேசிய வளர்ச்சிக்கான செயல்திட்டத்தில் துப்புரவை இந்த அளவுக்கு முதன்மைப்படுத்தியதில்லை. உலக அளவில் துப்புரவு சீர்கேட்டிற்கு வழிகோலுவது இந்திய மக்களில் 60 கோடி பேர் திறந்தவெளியில் மலம் கழிப்பதுதான். கடந்த நான்கு ஆண்டுகளாக தூய்மை பாரதம் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட துப்புரவுப் புரட்சி காரணமாக திறந்தவெளியில் மலம் கழித்துக் கொண்டிருந்த 60 கோடி பேரில் 50 கோடி பேருக்கு கழிப்பறைகள் கட்டித்தரப்பட்டுள்ளன. இன்றைய நிலையில் இந்தியாவில் உள்ள 95% கிராமப்புறங்களில் துப்புரவு உறுதி செய்யப்பட்டுள்ளது. தூய்மை பாரதம் அறிமுகப்படுத்தப்பட்ட 4 ஆண்டுகளுக்கு முன்பு இப்படி ஒரு சூழலை நம்மால் நினைத்துக்கூட பார்த்திருக்க முடியாது. கடந்த நான்கு ஆண்டுகளில் 8.7 கோடி வீடுகளில் கழிப்பறைகள் கட்டித்தரப்பட்டதன் பயனாக, 25 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 529 மாவட்டங்களைச் சேர்ந்த 5.1 இலட்சம் கிராமங்கள் திறந்தவெளியில் மலம் கழிக்கும் வழக்கம் இல்லாத கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இது தவிர, அண்மையில் உலக வங்கி ஆதரவுடன் வீடுவீடாக நடத்தப்பட்ட மிகப்பெரிய அளவிலான தன்னிச்சையான கணக்கெடுப்பில் பங்கேற்றவர்களில் 93 விழுக்காட்டினர் கழிப்பறைகளைப் பயன்படுத்தி வருவது தெரியவந்திருக்கிறது. இது தூய்மை பாரதம் திட்டம் செயல்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட நடத்தை மாற்றம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் கடந்த நான்கு ஆண்டுகளாக நடத்தப்பட்ட துப்புரவுப் புரட்சியின் பயனாக, தூய்மை பாரதம் என்பது இந்தியாவில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெருநிறுவனங்கள், குடிமக்கள், சமுதாயம், அரசு என அனைத்துத் தரப்பினரிடமும் பிரபலமான வார்த்தையாக மாறிவிட்டது. இந்தத் தரப்பினர் அனைவருமே




இந்தியாவைத் தூய்மையாகவும், பசுமையானதாகவும் மாற்ற தமது பங்களிப்பைச் செய்து வருகின்றனர். இதைவிட முக்கியத்துவம் வாய்ந்த உண்மை என்னவென்றால், தூய்மை பாரதம் இயக்கம், வயது, சாதி, பாலினம், உடல்திறன், மதம் உள்ளிட்ட அனைத்தையும் கடந்து அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயனளித்ததன் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு வழிகோலியிருக்கிறது என்பதுதான்.

உலகில் மிக அதிக எண்ணிக்கையிலானவர்கள் திறந்தவெளியில் மலம் கழிக்கும் நாடாக இருந்த இந்தியா, உலகின் மிகப்பெரிய நடத்தை மாற்றப் பிரச்சாரத்தை செயல்படுத்திய நாடாக எவ்வாறு மாறியது? துப்புரவுக்கான சமூக அணுகுமுறை, சமூகம் சார்ந்த முழுமையான துப்புரவு போன்ற புதிய தொழில்நுட்பங்களை இந்தியா செயல்படுத்தியதுதான் மிகப் பெரிய அளவிலான நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த உதவியது என்று உலக அளவிலான துப்புரவு வல்லுநர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர். 2014ஆம் ஆண்டு வரை மேற்கண்ட அணுகுமுறைகளில் சில அவசியமானவையாக இருந்த போதிலும், மிகப்பெரிய அளவிலான துப்புரவு சீர்கேட்டை சரிசெய்ய அவை போதுமானவையாக இல்லை என்பது தெளிவாகியிருக்கிறது.

அதனால்தான், தூய்மை பாரதம் இயக்கம் நான்கு எஸ்களால் (4 Ss) அதன் உத்திகளை மாற்றியதுடன், உத்திகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் செய்ய வேண்டியிருந்தது. அவற்றின் விவரம் வருமாறு:

**அளவீடுகள்** (Scale)

இந்தியாவில் 60 கோடி மக்களின் நடத்தையை மாற்றவேண்டிய தேவை இருந்ததால், எவ்வளவு பெரிய விசயத்தை எதிர்கொள்ளப் போகிறோம் என்பதை தூய்மை பாரதம் இயக்கம் உணர்ந்து அதற்கேற்றவாறு தயார்படுத்திக் கொண்டது. இந்தியாவில் உள்ள தனிநபர்கள் மற்றும் சமுதாயத்தினரின் மனநிலையை மாற்றும் திறன் கொண்ட தேசிய அளவிலான தூய்மை பாரதக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. அக்குழுவில் 12 கோடி பள்ளி மாணவர்கள் 10 இலட்சம் கொத்தனார்கள் (அவர்களில் ஒரு இலட்சம் பேர் பெண்கள்), ஐந்து இலட்சம் தூய்மைப் பணியாளர்கள், இரண்டரை இலட்சம் ஊராட்சித் தலைவர்கள், 700 மாவட்ட ஆட்சியர்கள், 400 மாவட்ட தூய்மை பாரத ஊக்குவிப்பாளர்கள், 20 முக்கிய விளம்பரத் தூதர்கள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்தக் குழுவினர் அனைவரும் ஒற்றை தகவல் தொடர்புத் தளபதியான பிரதமரால் வழி நடத்தப்பட்டனர்.

**வேகம்** (Speed)

தூய்மை பாரதம் இயக்கத்தை வேகமாகத் தொடங்கி நடைமுறைப் படுத்த வேண்டிய அவசரத் தேவை நிலவியது. இதை உணர்ந்த பிரதமர், இந்தப் பணிகள் இடைவெளி விட்டு விட்டு செய்யப்படுவதைத் தவிர்க்கும் வகையில், 2019ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதியுடன் தூய்மை பாரதம் இலக்குகள் எட்டப்படவேண்டும் என்று அழைப்பு விடுத்தார். பிரதமர் விடுத்த இந்த அழைப்பின் காரணமாக இந்தியாவின் தூய்மை பாரதம் திட்டம் புதிய உத்வேகம் பெற்றது.

தூய்மை பாரதம் பணிகளை மேற்கொள்வதற்கான குழுக்களை அமைப்பதற்கு வேகம் தேவைப்பட்டது. சிதைந்து கிடந்த துப்புரவுக் குழுக்களை சீரமைத்து வலிமையான குழுவாக மாற்றுவதற்காக குழுவில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு உறுப்

பினர்கள் மத்தியிலும் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய தேவை தூய்மை பாரதம் அமைப்புக்கு இருந்தது. இதை தூய்மை பாரதம் செய்தும் முடித்தது. இதுதான் தலைமைப்பணியில் மேற் கொள்ளப்பட்ட உண்மையான நடத்தை மாற்றம் ஆகும். இந்த நடத்தை மாற்றம்தான் தூய்மை பாரதம் இயக்கத்தை வேகமாக முன்னெடுத்துச் செல்லவும், பிரதமர் முதலமைச்சர் மாவட்ட ஆட்சியர் கிராம ஊக்குவிப்பாளர் என்ற புதிய மாதிரியை உருவாக்கவும் வகை செய்தது. 2019ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் இந்தியாவை திறந்தவெளியில் மலம் கழிக்கும் வழக்கம் இல்லாத நாடாக மாற்றவேண்டும் என்ற விருப்பத்தை பிரதமர் வெளியிட்டார். மாநில அளவில் முதலமைச்சர்களும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்களும் இதற்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுத்தினார்கள். மக்களிடையே உரையாற்றி விழிப் புணர்வை ஏற்படுத்தும் பயிற்சி ஊக்குவிப்பாளர்களுக்கு அளிக் கப்பட்டது. இதன் பயனாகவே கிராமங்களில் நடத்தை மாற்றம் சாத்தியமானது.

### வெறுப்பு வழக்கங்களும் தவறான நம்பிக்கைகளும்

இந்தியாவில் பல்வேறு சமுதாய மக்களிடையே காலம் காலமாக நீடித்து வரும் வெறுப்பு வழக்கங்கள், தவறான நம்பிக்கைகள் ஆகியவற்றை உணர்ந்துகொள்ளாமல் மக்களின் நடத்தையையும் போக்கையையும் மாற்றுவதற்கான இலட்சியத்தை தூய்மை பாரதம் நிர்ணயிக்கவில்லை. துப்புரவு தொடர்பாக கிராமப்புற மக்களிடையே ஏராளமான தவறான நம்பிக்கைகள் நடைமுறையில் இருந்தன. பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் மட்டும்தான் கழிப்பறைகள் தேவை, வீட்டு வளாகத்திற்குள் கழிப்பறைகளை வைத்திருப்பது புனிதமானது அல்ல, கழிப்பறையைத் தூய்மை செய்வது ஒருவரின் சொந்தப் பணி அல்ல என்பன போன்று மக்களிடையே நிலவிய தவறான நம்பிக்கைகள் இருந்தன.

இத்தகைய தவறான நம்பிக்கை களைப் போக்கும் வகையில் நாடு தழுவிய அளவில் மக்கள் ஊடக விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தொடங் கப்பட்டன. ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொருவிதமான செய்தியுடன் மக்களின் தவறான நம்பிக்கை களைப் போக்கும் பிரச்சாரம் செய்யப்பட்டது. பாலிவுட் திரைப்பட நட்சத்திரங்களான அமிதாப்பச்சன், அனுஷ்கா சர்மா ஆகியோர் நடித்த தர்வாசா குழு பிரச்சாரம் இதில் முக்கியப் பணியாற்றியது. அனைவருக்கும் கழிப்பறை தேவை என்ற செய்தியை உணர்த்துவது மட்டுமின்றி, கழிப்பறைகளைப் பயன்படுத்தவேண்டிய தேவைகள், குழந்தைகளும் பெண்களும் மட்டு மின்றி, குடும்பத்தில் உள்ள ஒவ் வொரு உறுப்பினரும் கழிப்பறையை பயன்படுத்த வேண்டியதன் அவசியம் ஆகியவை குறித்தும் இக்குழு விரிவாக பரப்புரை செய்தது. திரைப்பட நடிகர் அக்சய் குமார் நடித்த 'டாய்லெட் ஏக் பிரேம் கதா' என்ற தலைப்பில் ஒரு திரைப்படம் வெளியானது. பிரபலங்கள் நடித்த படங்களின் மூலம் எந்தவொரு விசயத் திற்கும் விளம்பரம் கிடைக்கும் என்பதைப்போலவே, இந்தப் படத்தின் மூலம் தூய்மை பாரதம் இயக்கத்திற்கு ஊடகங்களில் முக்கியத்துவம் கிடைத்தது. திறந்தவெளியில் மலம் கழிப் பதால் ஏற்படும் பிரச்சினைகள், கழிப்பறைகள் இல்லாததால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், குறிப்பாக பெண்கள் எதிர்கொள்ளும்



தடைகள், நிறைவாக அனைத்து வீடுகளிலும் கழிப்பறைகளை ஏற்படுத்தி மக்களுக்கு முழுமையான துப்புரவு நடைமுறைகளை சாதித்தது உள்ளிட்டவை அந்தத் திரைப்படத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இது மக்களிடையே நடத்தை மாற்றத்தைப் பெருமளவில் கொண்டுவர உதவி செய்தது.

**நீடிக்கும் தன்மை** (Sustainability)

தூய்மை பாரதம் இயக்கம் ஏற்படுத்திய துப்புரவுப் புரட்சி வேகம் பெற்று வந்த நிலையில், களஅளவில் எட்டப்பட்ட முன்னேற்றத்தின் வேகம் குறையாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. அதற்கான உத்திகளில் முக்கிய அம்சங்கள் வருமாறு:

- **திறந்தவெளியில் மலம் கழிக்கும் வழக்கத்தை ஒழித்தல் - கழிப்பறைகளின் தரம்:** தூய்மை பாரதம் இயக்கத்தின் கீழ் கட்டப்பட்ட அனைத்துக் கழிப்பறைகளும் இடக்குறியிடப்படவேண்டும் என்ற தேவை எழுந்தது. அனைத்து கிராமங்களிலும் இரட்டை சரிபார்ப்பு செய்யப்பட்டது. அதன்படி, பொதுமக்கள் தாங்களாகவே ஒரு சான்றிதழ் தருவதும், அதை மூன்றாவது உறுப்பினரைக் கொண்டு சரி பார்ப்பதும் கட்டாயமாக்கப்பட்டன. ஒருவேளை புதிதாக கட்டப்பட்ட கழிப்பறைகளில் தரம் குறைவாக இருப்பதாக தெரிய வந்தால், உடனடியாக அதை சரிசெய்யும்படி மாநில அரசுகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

- **திறந்தவெளியில் மலம் கழிக்கும் வழக்கத்தை ஒழித்தல் நீடித்த தன்மை:** திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கம் ஒழிக்கப்பட்டு விட்டால்கூட, அந்த நிலை தொடர்வதை உறுதி செய்வதற்காக மக்களிடையே நடத்தை மாற்றப் பரப்புரை தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதை இந்த உத்தி உறுதிசெய்தது. கழிப்பறைகள் தொடர்ந்து பயன்படுத்தப் படுவதை உறுதிசெய்வதற்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு நடைமுறைகள் மிகவும் முக்கியமாகும். பாதுகாப்பான துப்புரவு நடைமுறைகள் தொடர்வதற்குத் தேவையான ஊக்கத்தொகை வழங்குதல், அமைப்பு சார்ந்த நடைமுறை ஆகியவற்றையும் தூய்மை பாரதம் இயக்கம் ஆதரித்து வந்தது. இதுதவிர, தூய்மை பாரத இயக்கத்திற்குப் பிறகு திறந்தவெளியில் மலம் கழிக்காத போக்கு தொடர்வதை உறுதி செய்வதற்காக 10 ஆண்டுகளுக்கான துப்புரவுத் திட்டத்தை மத்திய குடிநீர் மற்றும் துப்புரவுத்துறை அமைச்சகம் தயாரித்து வருகிறது.

- **திறந்தவெளி மலம் கழிக்கும் வழக்கத்தை ஒழித்தல்:** திறந்தவெளியில் மலம் கழிக்கும் வழக்கம் ஒழிக்கப்பட்டுவிட்ட கிராமங்களில் திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை நடைமுறைகளை நடைமுறைப் படுத்துவதன் மூலம் தூய்மை கிராமங்களை உருவாக்குவதற்கான பணிகளில் தூய்மை பாரதம் இயக்கம் ஈடுபட்டிருக்கிறது. இத்தகைய கிராமங்களுக்கு தேசிய ஊரக குடிநீர்த் திட்டத்துடன் இணைந்து முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகளையும் தூய்மை பாரதம் இயக்கம் மேற்கொண்டு வருகிறது.

இந்தியாவில் கடந்த நான்கு ஆண்டுகளாக மத்திய குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை அமைச்சகம் மத்திய அரசின் பிற அமைச்சகங்கள், மாநில அரசுகள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சாரா அமைப்புகள், குவாசி அரசு நிறுவனங்கள், பெருநிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், நம்பிக்கை அமைப்புகள், ஊடகங்கள் உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து செயல்பட்டு வருகின்றன. தூய்மை இந்தியாவை உருவாக்குவது துப்புரவுத் துறையின் பணி மட்டுமல்ல; அனைவரின் பணியுமாகும் என்பதை உணர வைப்பதற்காகவே இத்தகைய பணிகளை மத்திய குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது. இதற்காக ஏராளமான சிறப்பு முன்முயற்சிகளும், திட்டங்களும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய நடவடிக்கைகளின் ஒருகட்டமாக தூய்மை இருவாரம் (மத்திய அரசின் அனைத்து அமைச்சகங்களும் துறைகளும் தூய்மை பாரதம் சார்ந்த பணிகளை இரு வாரங்களுக்கு மேற்கொள்ள வேண்டும்), முக்கிய இடங்களில் தூய்மைப் பணி (சுற்றுலா மற்றும் பாரம்பரிய முக்கியத்துவம் கொண்ட, மத அல்லது கலாச்சார பெருமை கொண்ட 100 இடங்களில் தூய்மைப் பணி மேற்கொள்வதில் கவனம் செலுத்துதல்), தூய்மை

செயல்திட்டம் (தூய்மை திட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக 76 அமைச்சங்களும், துறைகளும் இணைந்து ரூ.5,248 கோடி நிதி ஒதுக் கியுள்ளன), கங்கை நதிக்கரையை திறந்தவெளியில் மலம் கழிக்கப்படாத பகுதியாக மாற்றுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த விசயத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட முன்முயற்சி என்னவென்றால், தூய்மை கிராமங்கள் 2018 இயக்கமாகும். அதன்படி, நாடு முழுவதும் 698 மாவட்டங்களில் உள்ள 6980 கிராமங்களில் சுதந்திரமான துப் புரவுக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

தூய்மை பாரதம் என்பது உலகின் மிகப்பெரிய துப்புரவு இயக்கம் என்பது மிகைபடுத்தப்பட்ட ஒன்றல்ல. உண்மையில் இது மக்கள் இயக்கமாக மாற்றப்பட்டுள்ளது. அனைத்து நிலைகளிலும் உள்ள மக்கள் தங்களின் இலக்குகளை எட்டவும், நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தவும் ஓய்வின்றி உழைத்து வருகின்றனர். இந்தப் பணியில் பெண்களின் பங்களிப்பு மிகச் சிறப்பாக உள்ளது என்பதை சொல்லித்தான் தெரியவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பெண் களுக்குத் தேவையான பாது காப்பையும், கண்ணியத்தையும் வழங்குவது மட்டுமின்றி, தங்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமுதாயத்தினரின் ஆரோக் கியத்தையும் இது உறுதி செய்வதால் இந்த இயக்கத்தில் பெண்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். பெண்கள் தங்களின் ஓய்வு நேரத்தை தியாகம் செய்தல், தங்களின் குடும்பத்தைக் கவனித்துக்கொள்வதுடன், துப்புரவுப் பணிகளையும் மேற்கொள்ளுதல், அதிகாரத்திற்கு எதிராகக் குரல் எழுப்புதல், கழிப்பறைகள் கட்டுதல் போன்ற ஆண்களால் செய்யப் படவேண்டிய பணிகளை மேற் கொள்ளுதல் என தூய்மை பாரதம் இயக்கம் சார்ந்த சவால்களை பெண்கள் துணிச்சலுடன் எதிர்கொள் கின்றனர்.

திறந்தவெளியில் மலம் கழிக்கும் வழக்கம் இல்லாத சமுதாயத்தை ஏற் படுத்துவதற்கான பணியில் நமக்கு உத்வேகம் அளிக்கும் ஆதாரங் களாகத் திகழ்பவை நடத்தை மாற்றம் குறித்த செய்திகள்தான். துப்புரவு வசதிகளை அணுகுவதற்கான தங்களின் உரிமைக்கு மக்கள் குரல் கொடுப்பது அவர்களிடையே ஏற்பட்டுள்ள நடத்தை மாற்றத்தைக் காட்டுகிறது. துப்புரவுக்காக பாடுபட்டு வரும் சில தூய்மை பாரத வெற்றியாளர்களைப் பற்றி இப்போது பார்ப்போம்.

- கழிப்பறைகளைக் கட்டுவதற்கான கொத்தனார் பணிப்பயிற்சி பெண் களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டவுடன், சுனிதா தேவி என்ற பெண் மிகவும் உற்சாகமாக அப்பயிற்சியில் கலந்துகொண்டார். இரட்டைக்குழி கழிப்பறைகளை கட்டுவது எப்படி என்பதை அவர் வெற்றிகரமாக கற்றுக்கொண்டார். அவரது திறமையைப் பார்த்த மாவட்ட நிர்வாகம், அவரை தலைமைப் பயிற்சியாளராக நியமித்தது. அதன்படி, கிராமம் கிராமமாகச் செல்லும் அவர், கழிப்பறை கட்டுவது குறித்து மற்ற பெண் களுக்கும் பயிற்சி அளித்து வரு கிறார். இதுவரை அவர் 1600க்கும் மேற்பட்ட பெண்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறார்.
- ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ் வாரா மாவட்டத்திற்கு உட்பட்ட கார்ஜி கிராமத்தைச் சேர்ந்த சங்கரி மாவி, தமது 8 உறுப் பினர்களைக் கொண்ட குடும்பத்தைப் பொறுப்பாகக் கவனித்துக்கொண்டே தமது வீட்டிற்கான கழிப்பறையை சொந்தமாகவே கட்டினார். இதன் மூலம் அவரே கொத்தனாராகவும், சித்தாளாகவும் மாறினார். கட்டு மானக் கருவிகளை கையில் எடுத்துக்கொண்டு இரவு பகலாக பாடுபட்டு, மற்ற எவரிடமும் உதவி கேட்காமல் கழிப்பறையைக் கட்டி முடித்தார். இரவு நேரங்களில் பணி செய்வதற்காக எந்த விளக்கு வெளிச்சமும் அவரிடம் இல்லை. தமது செல்பேசியில் உள்ள விளக்கைப் போட்டுக்கொண்டு கழிப்பறை கட்டும் பணிகளை மேற்கொண்டார். அத்துடன் தாம் பயிரிட்டிருந்த பயிர்களை பாதுகாக்கும் பணியிலும் அவர் தம்மை ஈடுபடுத்திக்கொண்டார். இவ்வாறு செய்வதன் மூலம் தமது வழக்கமான வேளாண் பணிகளுடன் வீட்டில் ஒரு கழிப்பறை அமைத்ததன் மூலம் தூய்மைக்கான தேவையையும் அவர் உறுதிசெய்தார்.
- தூய்மை பாரதம் இயக்கத்திற்கான பரப்புரை பணியில் ஈடுபட்டிருந்த சம்ஷால் பேகம் என்ற பெண் ணுக்கு திருமணம் செய்து வைக்க முடிவு செய்யப்பட்டது.

தௌசிப் ராஜா என்ற செல்பேசி கடை உரிமையாளர் அவரை திருமணம் செய்துகொள்ள முன் வந்தார். அதை கேட்ட சம்ஷால் பேகம், முர்ஷிதாபாத்தில் உள்ள மணமகனின் இல்லத்தில் முறைப்படி கழிப்பறை கட்டித் தரப்படவேண்டும் என்பன உள்ளிட்ட சில நிபந்தனைகளை விதித்து அதற்கு தௌசிப் ராஜா ஒப்புக்கொண்ட பிறகுதான் அவரை திருமணம் செய்து கொண்டார்.

தூய்மை பாரதம் இயக்கப் பணிகளை ஊக்குவிக்கும் வகையில் ஒரு புள்ளி விவரத்தை உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ளது. திறந்தவெளியில் மலம் கழிக்கும் வழக்கம் கட்டுப்படுத்தப்பட்டதன் பயனாக, 2014ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு அக்டோபர் வரையிலான காலத்தில் வயிற்றுப் போக்கு மற்றும் புரோட்டின் சத்துக் குறைபாடு காரணமாக மூன்று இலட்சம் உயிரிழப்புகள் தடுக்கப் படும் என்பதுதான் உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட ஊக்க மளிக்கும் புள்ளிவிவரம் ஆகும். திறந்தவெளியில் மலம் கழிக்கும் வழக்கம் கட்டுபடுத்தப்பட்டதும், கழிப்பறை வசதிகள் மேம்படுத்தப் பட்டதும்தான் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. இதனிடையே இந்திய ஐக்கியநாடுகள் அமைப் பின் கலாச்சாரத்துறையான யுனிசெப் அண்மையில் நடத்திய கணக்கெடுப்பு ஒன்றில், திறந்த வெளியில் மலம்கழிக்கும் வழக்கம் கட்டுப்படுத்தப்பட்டதால் தவிர்க்கப் பட்ட மருத்துவச்செலவுகள், நேரசேமிப்பு, உயிரிழப்புகள் தவிர்ப்பு ஆகியவற்றின் மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஓராண்டுக்கு ரூ.50,000 மிச்சப் படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தப்பலன் மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்குத்தான் அதிகம் கிடைத்திருக்கிறது.

தூய்மை பாரதம் இயக்கத்தில் ஏற்கெனவே எட்டப்பட்டுள்ள தாக்கங்கள் ஒருபுறம் இருக்க, மிகப் பெரிய அளவிலான நடத்தை மாற்றத்திட்டங்களை எவ்வாறு செயல்படுத்தலாம் என்பது தொடர்பான ஒட்டுமொத்த வளர்ச்சி செயல் திட்டத்திற்கான பாடங்களையும் இந்த இயக்கம் மக்களுக்கு வழங்கியுள்ளது. நான்கு எஸ்களால் (4 S) ஏற்படும் சவால்களை வெற்றிகரமாக சமாளித்த தூய்மை பாரதம் இயக்கம், அதில் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் நான்கு றிக்களின் முக்கியத்துவம் குறித்தும் மக்களுக்கு விளக்கியுள்ளது.

**அரசியல் தலைமை (Political Leadership)**: அரசியல் துணிச்சலும், மேல்நிலை தலைமையின் உறுதியும் மிகவும் முக்கியமாகும்.

**பொது நிதி (Public funding)**: தூய்மை பாரதம் பணிகளுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதை உறுதி செய்வதற்காக மத்திய அரசும் மாநில அரசுகளும் இணைந்து ஒரு இலட்சம் கோடிக்கும் கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்தன.

**கூட்டாண்மைகள் (Partnerships)**: வளர்ச்சிக்கான பங்குதாரர்கள், தொண்டு நிறுவனங்கள், தனியார் துறையினர், குடிமக்கள் சமுதாய அமைப்புகள், ஊடகங்கள் ஆகியவற்றுடன் தொடர்ச்சியான செயல்பாடுகள் மிகவும் அவசியமாகும்.

**மக்கள் பங்கேற்பு (People's participation)**: துப்புரவு என்பது அரசின் திட்டம் அல்ல. அது மக்கள் இயக்கம்.

கிராமப்புற இந்தியா அதன் துப்புரவுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு 2019ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் தேதிக்குள் இலக்குகளை எட்டும் வேகத்தில் வேகமாக பயணித்துக் கொண்டிருக்கிறது. அனைவருக்கும் துப்புரவை மேம்படுத்துதல், ஐக்கிய நாடுகள் அமைப்பின் நீடித்த வளர்ச்சிக்கான ஆறாவது இலக்கை போர்க்கால அடிப்படையில் எட்டுதல், நீடித்த மாற்றத்திற்கு மக்களிடையே தகவல் தொடர்பு நடத்தை மாற்றத்தை உறுதிசெய்தல் ஆகியவற்றுக்கு உலக நாடுகளிடையே மிகச்சிறந்த உதாரணத்தை தூய்மை பாரதம் இயக்கம் உருவாக்கியிருக்கிறது. 2018ஆம் ஆண்டு செப்டம்பர் 29 முதல் அக்டோபர் 2 வரை டெல்லியில் நடைபெற்ற மகாத்மா காந்தி சர்வதேச துப்புரவு மாநாட்டில் பங்கேற்ற உலகின் 59 நாடுகளைச் சேர்ந்த துப்புரவுத்துறைக்கான அமைச்சர்களும் இந்தச் சாதனையை அங்கீகரித்திருக்கின்றனர். தூய்மை பாரதம் மாதிரியிலான துப்புரவு இந்தியாவில் மிகப்பெரிய துப்புரவுப் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. அதன் தாக்கங்கள் உலகம் முழுவதும் எதிரொலிக்கும் என்பது உறுதி. ●

---

**- பரமேஸ்வரன் ஐயர்**, செயலாளர், குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகம், மத்திய அரசு, புதுதில்லி.

# துப்புரவையும் சுகாதாரத்தையும் மேம்படுத்துவதில் சுகாதாரம், குடும்பநல அமைச்சகத்தின் செயல்பாடுகள்

- பிரீத்தி சூடன்

மனதிற்கு உற்சாகம் தரும் சுத்தமான சூழலில் வாழவும் வேலை செய்யவுமே ஒவ்வொரு மனிதரும் விரும்புகின்றனர். அத்தகைய சூழலில்தான் உடலில் உள்ள நோய்கள் குணமாவதும் காயம் ஆறுவதும் வேகமாக நடக்கின்றன. பண்டைய காலத்தில் நதிக்கரை ஓரங்களில் காலை நேரத்தில்தான் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. ஏனெனில் அப்போதுதான் சுத்தமான நீர், தூய்மையான சுற்றுப்புறம் ஆகியவற்றின் பலன்கள் கிடைக்கும். காலம் செல்லச் செல்ல நகரமயமாதல் மற்றும் மக்கள் தொகைப்பெருக்கம் போன்ற காரணங்களால் நமது இயற்கை மூலவளங்கள் வேகமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதோடு மனிதனின் ஆரோக்கியத்தின் மீதும் நாட்டின் பொருளாதாரத்தின் மீதும் பாதகமான விளைவுகளை இவை ஏற்படுத்துகின்றன. லிக்ஸில் குரூப் கார்ப்பரேஷன் (LIXIL Group), வாட்டர் ஏர் - ஆக்ஸ்போர்டு எக்கானமிக்ஸ் வெளியிட்ட தங்களது ஆய்வறிக்கையில் துப்புரவு வசதியைப் பெறுவதில் ஏற்படும் பற்றாக்குறையானது 2015ஆம் ஆண்டில் சர்வதேசப் பொருளாதாரத்தில் சுமார் 222.9 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இழப்பை ஏற்படுத்தும் என கணக்கிட்டு கூறியுள்ளன. இது 2010ஆம் ஆண்டில் செய்த செலவைவிட 1.2 மடங்கு அதிகமாகும். அதாவது செலவு ஐந்தே ஆண்டுகளில் 40 மில்லியன் அமெரிக்க டாலர் அதிகரித்துள்ளது.

*(ஆதாரம்: http://www.indiaenvironmentportal.org.in/files/file/the_true_cost_of_poor_sanitation_e.pdf)*

துப்புரவு மற்றும் ஆரோக்கியம் தொடர்பாக அதிகரித்துவரும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகமானது (MoHFW) பல்முனை செயல் உத்தியைக் கடைபிடித்து வருகிறது. துப்புரவையும், ஆரோக்கியத்தையும் மேம்படுத்த அமைச்சகம் பல செயல் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. 2015ஆம் ஆண்டு முதலே அமைச்சகமானது நமது குடிமக்களின் ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வை மேம்படுத்துவதற்கான தனது முயற்சிகளில் துப்புரவை மையக் கருத்தாகக் கொண்டுள்ளது. இத்தகைய தொடக்க செயல்பாடுகள் மருத்துவமனைகள் மற்றும் அதே போன்று சமுதாயத்தில் அமைச்சகத்தின் சொந்த செயல்திட்டங்கள் மூலமாக துப்புரவு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயல்கின்றன. மேலும் இந்தப் பிரச்சினைகளை முழுமையாகக் கையாள்வதற்கு பிற அமைச்சகங்களுடன் இணைந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் (MoHFW) காயகல்ப் நடவடிக்கையானது 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. நாட்டில் உள்ள அனைத்து 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் இருக்கின்ற மத்திய அரசின் சுகாதார நிறுவனங்கள், அரசு பொது மருத்துவமனைகள் ஆகியவற்றில் உள்கட்டமைப்பு வசதிகள், துப்புரவு, சுகாதாரம், நோய்த் தொற்று கட்டுப்பாட்டுச் செயல்முறைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதே காயகல்ப்பின் நோக்கமாகும். மருத்துவமனைகள் பல்வேறு அளவீடுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்டு தரவரிசைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் தரவரிசைப் பட்டியலில் அதிக மதிப்பெண் பெறும் மருத்துவமனைகள் ஒவ்வொரு நிலையிலும் விருதுகளைப் பெறுகின்றன. விருது பெறும் மருத்துவமனைகளுக்கு சான்றிதழோடு பணவிருதுகளும் வழங்கப்படுகின்றன. இந்த காயகல்ப் விருது திட்டமானது பொது சுகாதார நிலையங்களில் சுத்தம், சுகாதாரம், நோய்க் கட்டுப்பாட்டு செயல்முறைகள் ஆகிய நிலைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் சுகாதாரம், தூய்மை மற்றும் துப்புரவு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு, தொடர்ச்சியான தர மதிப்பீடு மற்றும் துறைசார் நிபுணர்களின் மதிப்பீடு ஆகியவற்றை

எதிர்கொள்ளும் பழக்கமும் உருவாகியுள்ளது. காயகல்ப் திட்டத்தின் சாதனைகளால் ஊக்கம் பெற்றுள்ள தனியார் துறைகள் அரசின் முயற்சிகளில் இணைந்து கொள்ள முன்வந்துள்ளன. காயகல்ப் திட்டத்தின் அளவீடுகளைப் போன்றே தனியார் துறையில் உள்ள மருத்துவமனைகளையும் மதிப்பீடு செய்ய மருத்துவமனை மற்றும் சுகாதாரச் சேவை வழங்கு பவர்களுக்கான தேசிய தரமதிப்பீட்டு வாரியம் (NABH) தீர்மானித்துள்ளது.

நகரப்பகுதியில் வசிக்கும் பாதிப் புக்கு உள்ளாகக்கூடிய சமுதாயத் தினரிடம் துப்புரவை மேம்படுத்தும் வகையில் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகமானது (MoHFW) தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கத்தின் (NUHM) கீழ் உள்ள மகளிர் ஆரோக்கிய குழுக்களையும் (MAS), தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் உள்ள கிராம சுகாதாரத் துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து கமிட்டிகளையும் (VHSNCs) பயன்படுத்திக் கொள்கிறது. பல்வேறு மாநிலங்கள் இத்தகைய கமிட்டிகளையும், குழுக்களையும் புதிய செயல்முறையில் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு வரு கின்றன. கழிப்பறையைக் கட்டிக் கொள்ளவும், அவற்றைப் பயன் படுத்தவும் சமுதாயத்தினரிடம் முனைப்பு ஏற்படுத்த சமுதாய சுகாதாரச் செயல்பாட்டாளர்கள் (ASHA) இந்த கிராம சுகாதாரத் துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து கமிட்டிகளுடன் (VHSNCs) இணைந்து செயல்படுகிறார்கள். மகளிர் ஆரோக்கிய குழுக்கள் (MAS) அண்மையில் நகர்ப்புறப் பகுதிகளில் ஏழை மற்றும் பாதிப் புக்கு உள்ளாகக்கூடிய மக்கள் பிரிவினரில் இருந்து சுமார் 12 முதல் 20 பெண்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. துப்புரவு உள்ளிட்ட பல்வேறு பிரச் சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக சமுதாய மக்களை ஒருங்கிணைக்கும் பணியில் இந்தக் குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன.

ஏனைய அமைச்சகங்களுடன் ஒருங்கிணைந்து எடுக்கப்படும் முயற்சிகள் மூலமாக துப்புரவு நிலையை மேம்படுத்துவதற்கும் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் (MoHFW) செயல்பட்டு வருகிறது. அத்தகைய ஒரு கூட்டு தொடக்க முயற்சியாக சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகமும் (MoHFW), குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகமும் இணைந்து மேற் கொண்டுள்ள ஸ்வச் ஸ்வஸ்த் சர்வாத்ரா திட்டத்தைக் (எங்கும் தூய்மை எப்போதும் தூய்மை) குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்தத் திட்டமானது தூய்மை இந்தியா இயக்கம் (SBM) மற்றும் காயகல்ப் திட்டம் இரண்டையும் ஒருங்கிணைத்து நடைமுறைப்படுத்த முயல்கிறது. அதாவது காயகல்ப் விருது பெறும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHC) மற்றும் சமுதாய சுகாதார நிலையங்கள் (CHC) உள்ள கிராம பஞ்சாயத்துகளை திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத பஞ்சாயத்துகளாக மாற்றுவதற்கான உதவிகளையும் நிதியையும் ஸ்வச் ஸ்வஸ்த் சர்வாத்ரா திட்டம் வழங்குகிறது.

துப்புரவு மற்றும் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் தேவையான முயற்சிகளின் ஒரு பகுதியாக தேசிய சுகாதார இயக்கம் (NHM) 2017ஆம் ஆண்டில் விஷ்வாஸ் (VISHWAS) (ஆரோக்கியம், நீர் மற்றும் துப்புரவு ஆகியவற்றை கிராம அளவில் ஒருங்கிணைக்கும் செயல்பாடு) என்ற ஒரு புதிய பிரச் சார இயக்கத்தைத் தொடங்கியது. இந்தப் பிரச்சாரத்தை கிராம சுகாதார துப்புரவு ஊட்டச்சத்து குழுக்கள் (VHSNCs) ஒரு ஆண்டு காலத்திற்கு மேற்கொள்ளும். சமுதாய மக்களிடையே விழிப்புணர்வு ஏற் படுத்தவும் நீர் துப்புரவு சுகா தாரம் ஆகியவற்றில் சிறப்பாகச் செயலாற்றவும், உள்ளூர் சாம் பியன்களை உருவாக்கவும், இந்தப் பிரச்சார இயக்கமானது தொடங்கப் பட்டது. மேலும் தூய்மை இந்தியா இயக்கம் (SBM) போன்ற பல்வேறு திட்டங்களுக்கு இடையில் ஒருங் கிணைப்பை உருவாக்கக்கூடிய ஒரு பொதுவெளியை உருவாக்குவதும் இந்தப் பிரச்சார இயக்கத்தின் நோக்கமாகும். இத்தகைய அடிப் படை நடவடிக்கைகளுக்காக மேற் கொள்ளப்பட்ட முக்கிய செயல் உத்திகள் கீழ்வரும் பிரிவுகளில் விரிவாகத் தரப்படுகின்றன.

### அ. மருத்துவமனைகளுக்கான காயகல்ப் திட்ட நடவடிக்கை:

சுகாதாரம், தூய்மை மற்றும் துப்புரவு தொடர்பான செயல்பாடு களை தொடர்ந்து மதிப்பீடு செய்ய வும், துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டைப் பெறவும் தேவையான ஒரு கலாச்சாரத்தை அரசு சார்ந்த மருத்துவமனைகளில் வளர்த் தெடுப்பதுவே காயகல்ப் திட்டத்தின் நோக்கமாகும். மேம்படுத்தப்பட்ட தூய்மை தொடர்பான நீடித்த செயல்முறைகளை உருவாக்குவதும் அவற்றைப் பகிர்ந்து கொள்வதும் கூட இதன் நோக்கமாகும். இந்த செயல்முறைகள் சாதகமான ஆரோக்கிய விளைவுகளைத் தரு

வதாக இருக்கவேண்டும் என்பது முக்கியமானதாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகள் தங்களைப் பற்றிய சுய தர மதிப்பீட்டைத் தாங்களாகவே மேற்கொள்கின்றன. மருத்துவமனையின் இருப்பை வெளிப்படுத்தும் செயல்பாடுகளை மேம்படுத்துதல், உயிர் மருத்துவக் கழிவுகள் தொடர்பான விதிகளை நடைமுறைப்படுத்துதல், நோய்த் தொற்று கட்டுப்பாட்டு செயல் முறைகளை வலுப்படுத்துதல், உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் (NGO) / சிவில் சமூக நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றுதல் ஆகியவனவும் இந்தத் திட்டத்தின் கீழ் அடங்கும். மருத்துவமனைக்குள் "ஸ்வச்சதா" என்பதன் ஒவ்வொரு பரிமாணத்துக்கும் முன்கூட்டியே நிர்மாணித்துள்ள தரமதிப்பீட்டு அளவுகோல்கள் உள்ளன. மேலும் எல்லைச் சுவர்களுக்கு அப்பாலும் அதாவது சமுதாய அளவிலான செயல்பாடுகளுக்குக் கூட அளவுகோல்கள் உள்ளன. இதன் விளைவாக மருத்துவமனைகள் துறைசார் நிபுணர் மதிப்பீடுகளில் முன்னேற்றத்தைப் பெற்றுள்ளன. மேலும் வெளியில் உள்ள நிபுணர்களின் மதிப்பீடு மூலம் காயகல்ப் மதிப்பெண்களையும் பெறுகின்றன. மருத்துவமனைகள் மேற்கொள்ளும் குறிப்பிடத்தக்க முயற்சிகள் காயகல்ப் விருதுகள் மூலம் அங்கீகரிக்கப்படுகின்றன. மருத்துவமனைகளின் ஒவ்வொரு நிலையிலும் இந்த அங்கீகாரம் வழங்கப்படுகிறது. மாவட்ட மருத்துவமனைகள் (DH), துணை மாவட்ட மருத்துவமனைகள் (SDH), சமுதாய சுகாதார நிலையங்கள் (CHC) ஆகியவற்றை மாநில அளவில் தேர்ந்தெடுப்பதற்கு உதவும் வகையில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. அதே போன்று ஆரம்ப சுகாதார நிலையங்களைத் (PHC) தேர்ந்தெடுக்கும் அதிகாரமானது மாவட்ட அளவில் தரப்பட்டுள்ளது.

நிர்ணயிக்கப்பட்டுள்ள தர அளவீடுகளின்படி வெற்றிபெறும் மருத்துவமனையானது பண விருதையும் பட்டயத்தையும் பெறும். அதனோடு காயகல்ப் தர அளவீடுகளின்படி, 70சதவிகிதத்திற்கு மேல் மதிப்பெண் பெறும் அனைத்து மருத்துவமனைகளுக்கும் பாராட்டுச் சான்றிதழும் பண விருதும் அளிக்கப்படும். இதனால் மற்ற மருத்துவமனைகளுக்கு தாங்களும் நன்றாகச் செயல்படவேண்டும் என்ற ஊக்கம் கிடைக்கும். இந்தத் திட்டத்தின் கீழ், மத்திய அரசு சுகாதார நிறுவனங்கள் ரூ.2.5 கோடி வரை பண விருதாகப் பெற முடியும். அதே சமயம் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மருத்துவமனைக்கு ரூ.50 இலட்சம் கிடைக்கும். சமுதாய சுகாதார நிலையத்திற்கு (CHC) ரூ.15 இலட்சமும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு (PHC) ரூ.2 இலட்சமும் கிடைக்கும்.

2017-18ஆம் நிதி ஆண்டில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் இந்தத் திட்டமானது நடைமுறைப்படுத்தப்பட்டது. மாவட்ட மருத்துவமனைகள், சமுதாய சுகாதார நிலையங்கள் (CHC) / எஸ்.டி.எச், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHC) மற்றும் நகர ஆரம்ப சுகாகதார நிலையங்கள் என மொத்தமாக 28,000 மருத்துவமனைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. இதில் 2970 மருத்துவமனைகளுக்கு விருதுகள் அளிக்கப்பட்டன 11 மத்திய அரசு சுகாதார நிலையங்கள், 289 மாவட்ட மருத்துவமனைகள், 760 சமுதாய சுகாதார நிலையங்கள் / எஸ்.டி.எச் மற்றும் 181 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் விருதுகளைப் பெற்றன.

தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் "காயகல்ப்" திட்டத்தை நடைமுறைப்படுத்த மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் தங்களின் முழுமையான ஆதரவை அளித்தன. விருதுகளுக்கான நிதி, பயிற்சிகள். மதிப்பீடு செய்தல், மருத்துவமனையை மேம்படுத்துதல், தொழில்நுட்ப உதவி என அனைத்தும் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டன. காயகல்ப் திட்டத்தின் பல்வேறு பரிமாணங்கள் குறித்த பயிற்சி வகுப்புகள் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் நடத்தப்பட்டன. மருத்துவமனைகளை மதிப்பீடு செய்தல் என்பது 7 விரிவான மையக்கருத்துகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது (ஒவ்வொரு கருத்துக்கும் குறிப்பிட்ட அளவீட்டுத்தொகுப்பும் பரிசோதனை முறைகளும் நிர்ணயிக்கப்பட்டிருந்தன).

அவை:

1. மருத்துவமனையை சிறப்பாகப் பராமரித்தல்
2. துப்புரவு மற்றும் சுகாதாரம்
3. கழிவு மேலாண்மை
4. நோய்த்தொற்றுக் கட்டுப்பாடு
5. ஆதரவு அளிக்கும் சேவைகள்
6. ஆரோக்கிய மேம்பாடு
7. காயகல்ப் திட்ட எல்லைக்கு வெளியில் சமுதாய மக்களிடையே

செயலாற்றுதல் ஆகியவை ஆகும். காயகல்ப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக் கைகள் சமூக ஊடகங்களிலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. https://www.facebook.com/pages/Kayakalp/586316831510706.

காயகல்ப் திட்டத்தின் தாக்கம் காயகல்ப் திட்டம் தொடங் கப்பட்ட பிறகு அரசு பொது மருத்துவமனைகளில் தூய்மைப் படுத்துதல், ஆரோக்கியம் மற்றும் நோய்த்தொற்றுக் கட்டுப்பாட்டுச் செயல்முறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் சுகாதாரம், தூய்மை மற்றும் துப்புரவு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான மதிப்பீட்டை தொடர்ந்து மேற்கொள்கின்ற பழக்கத்தையும், துறைசார் நிபுணர் களின் கருத்தை அளிக்கின்ற கலாச்சாரத்தையும் இந்தத் திட்டம் உருவாக்கியுள்ளது. சுகாதார அமைப்புகளை மேம்படுத்துவதற்காக பலதுறை சார்ந்த ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு களையும் ஊக்கத் தொகைகளையும் இந்தத் திட்டம் வழங்குகிறது.

### ஆ. ஸ்வச் ஸ்வஸ்த் சர்வாத்ரா:

மேம்படுத்தப்பட்ட துப்புரவு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகள் குறித்த விழிப்புணர்வு ஆகியவற்றின் மூலம் சிறப்பான சுகாதார பயன்களைப் பெறவேண்டும் என்பதற்காக சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகமும் குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சகமும் இணைந்து தொடங்கி உள்ள திட்டமே ஸ்வச் ஸ்வஸ்த் சர்வாத்ரா திட்டம் ஆகும். தூய்மை இந்தியா இயக்கம் மற்றும் காயகல்ப் திட்டம் ஆகிய இரண்டு இணைச் செயல் திட்டங்களுக்கு இடையில் கூடுதலான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதுவே ஸ்வச் ஸ்வஸ்த் சர்வாத்ரா திட்டத்தின் நோக்கம் ஆகும்.

### இந்தத் திட்டத்தின் விரிவான மூன்று குறிக்கோள்கள்:

1. காயகல்ப் விருது பெற்ற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ள கிராமப் பஞ்சாயத்தை, திறந்த வெளியில் மலம் கழிக்காத பஞ் சாயத்தாக மாற்ற உதவுதல்

2. திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத ஒன்றியங்களில் உள்ள சமுதாய நலவழி மையங்களை வலுப்படுத்துதல். காயகல்ப் தர அளவீடுகளை நிறைவு செய்யும் வகையில் தூய்மையை அதிக அளவில் பராமரிப்பதற்காக தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் ரூ.10 இலட்சம் நிதி அளித்தல்

3. அத்தகைய சமுதாய சுகாதார நிலையங்கள் (CHC), ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHC) ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் ஆகிய வற்றில் திறன்களை மேம்படுத்து வதற்காக பயிற்சி அளித்தல்.

இந்த நடவடிக்கைகளின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத ஒன்றியங்களில் உள்ள சமுதாய நலவழி மையங்களை வலுப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. ரூ.10 இலட்சம் ஆதார நிதி, தொழில்நுட்ப உதவி ஆகியவற்றைப் பயன் படுத்திக்கொண்டு அத்தகைய சமுதாய சுகாதார நிலையங்கள் தூய்மைக்கான தரமதிப்பீடுகளைக் கடைபிடித்து காயகல்ப் விருதைப் பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டும். மேலும் சமுதாய சுகாதார நிலையங்கள் சுகாதாரம் மற்றும் துப்புரவு குறித்த விழிப்புணர்வு உருவாக்கல் பணியையும் மேற் கொள்ள வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத தகுதி நிலையை அடைய பஞ்சாயத்துகள் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ளும்.

### இ. கிராம சுகாதாரத் துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழுக்கள் (VHSNC):

சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகமானது (MoHFW) துப்புரவு மற்றும் சுகாதார நடவடிக்கைகளுக்கு எப்போதும் ஆதரவாக இருப்பதோடு அவற்றை மேம்படுத்தவும் உதவி வருகிறது. இத்தகைய நடவடிக் கைகளை சமுதாய அளவிலான ஆரோக்கிய மேம்பாட்டு நடவடிக்கை களோடு இணைக்கவும் அமைச்சகம் முயற்சிகள் எடுக்கிறது. 2005ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதில் இருந்து தேசிய ஊரக சுகாதார இயக்கமானது (NRHM) அனைத்து மாநிலங்களிலும் கிராமச் சுகாதாரத் துப்புரவுக் குழுக்களை (VHSC) உருவாக்கியுள்ளது. “சுகாதாரத்துக்காக மேற்கொள்ளப் படும் சமுதாய செயல்பாட்டுக் கான பொதுவெளியாக இது உருவாக்கப்பட்டது. துப்புரவு நிலையை மேம்படுத்துவதிலும், சுகாதார நல்விளைவுகளைப் பெறுவதிலும் சமுதாயத்தினரை ஈடுபடுத்தும் முக்கிய பங்கிற்கு இந்தக் கமிட்டிகள் தெளிவாக அழுத்தம் கொடுக்கின்றன. இவற்றுக்கு ஓராண்டுக்கு ரூ.10,000/ தனித்த நிதியாகத் தரப்படுகிறது. ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியம்

தொடர்பான சமுதாயக் கடமைகளை நிறைவேற்றுவதோடு ஒருங்கிணைந்த செயல்பாடுகளை அந்தந்தச் சமுதாயத்தினர் தாங்களாகவே முன்னெடுத்துச் செய்யவும் இந்த நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தக் கமிட்டிகள் பிறகு கிராம சுகாதாரத் துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழுக்கள் (VHSNC) என்று பெயர் மாற்றப்பட்டன. ஊட்டச்சத்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்த கிராம சுகாதாரத் துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழுக்கள் (VHSNC), சமுதாய சுகாதாரப் பணியாளர்களுடன் (ASHA) இணைந்து செயல்படுவது என்பது தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் சமுதாயத்தை ஒருங்கிணைக்கும் உத்தியில் மிக முக்கியமான கூறாக உள்ளது. இதே அம்சம் திரும்பவும் தேசிய ஊரக சுகாதார இயக்கத்திலும் (NRHM) வலியுறுத்தப்படுகிறது. 2013ஆம் ஆண்டு இந்தக் கமிட்டிக்கான திருத்தப்பட்ட வழிமுறைகள் வெளியிடப்பட்டன. அதன்படி உள்ளூரின் கிராம பஞ்சாயத்து உறுப்பினரே கிராம சுகாதாரத் துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழுவிற்குத் (VHSNC) தலைவராக இருப்பார் (இதற்கு முன்பு கிராம பஞ்சாயத்துத் தலைவரே கமிட்டித் தலைவராக இருந்தார்). இந்த மாற்றத்தின் மூலம் சமுதாயத்தினரும் அதே போன்று பஞ்சாயத்து பிரதிநிதிகளும் செயலூக்கமாக பங்கேற்பது உறுதி செய்யப்படுகிறது.

தற்போது நாடு முழுவதிலும் சுமார் 5.2 இலட்சம் கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழுக்கள் (VHSNC) செயல்பாட்டில் உள்ளன (நிர்ணயிக்கப்பட்ட இலக்கு எண்ணிக்கையில் 92 சதவிகித கமிட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 97 சதவிகித கமிட்டிகள் வங்கிக் கணக்கு வைத்திருக்கின்றன). தங்கள் மாநிலத்தில் உள்ள இந்தக் கமிட்டிகளை அந்த மாநில அரசு புதிய நடைமுறைகள் மூலம் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்கிறது. உதாரணமாக சட்டீஸ்கர் மாநிலத்தில் சமுதாய சுகாதாரப் பணியாளர்கள் (ASHA) தீவிரமாக செயல்படுவதன் மூலம் இந்தக் கமிட்டிகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இவை ஸ்வஸ்த் கிராமப் பஞ்சாயத்துத் திட்டத்தின் ஒரு அங்கமாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் ஆண்டுதோறும் தரவரிசைப் படுத்தப்படுகிறது. ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியத்தை நிர்ணயிக்கும் சமுதாய நிலைமைகள் தொடர்பான அளவீடுகள் தொகுப்பின் அடிப்படையில் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு விருதுகள் அறிவிக்கப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள இத்தகைய கமிட்டிகள் உள்ளூர் அளவில் கூட்டமைப்புகளாக ஒருங்கிணைக்கப்படுவதன் மூலம் இந்தக் கமிட்டிகள் பிரச்சினைகளைத் திறம்பட விவாதிக்கவும் செயல்திட்டங்களை வகுக்கவும் முடிகிறது. ஒடிசா மாநிலத்தில் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் காலாண்டுக்கு ஒரு முறை கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழு (VHSNC) கூட்டத்தை நடத்த வேண்டும் என்பது கட்டாயமாகும். மேலும் இந்தக் கமிட்டிகளின் செயல்பாடுகளுக்கு உதவவும், அவற்றைக் கண்காணிக்கவும் பஞ்சாயத்துகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. மற்ற மாநிலங்களும் கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச்சத்துக் குழுக்களைத் (VHSNC) திறம்பட செயல்பட வைப்பதற்கு தங்களுக்கென தனித் தனி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழுக்களை (VHSNC) ஊக்கப்படுத்தி செயல்பட வைப்பதில் சமுதாய சுகாதாரப் பணியாளர்கள் (ASHA) முக்கியமான பங்காற்றுகின்றனர். இவர்கள் சமுதாய அளவில் விழிப்புணர்வை அதிகரித்தல், தங்களது கிராமங்களில் இந்த கமிட்டிகளின் நடவடிக்கைகளுக்கு உந்துதலாகவும் உதவியாகவும் இருத்தல் போன்ற செயல்பாடுகளோடு மட்டும் சமுதாய சுகாதாரப் பணியாளர்கள் (ASHA) இருந்து விடவில்லை. அதற்கும் மேலாக கழிப்பறை கட்டவும் அவற்றைப் பயன்படுத்தவும் சமுதாய சுகாதாரப் பணியாளர்கள் (ASHA) பொதுமக்களைத் தயார்படுத்தி செயல்பட வைக்கின்றனர். சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சம் (MoHFW), குடிநீர் விநியோக அமைச்சகம் ஆகியவற்றின் கூட்டு அறிவிப்பின் மூலம் சமுதாய சுகாதாரப் பணியாளர்களுக்கு (ASHA) இந்தப் பணியைச் செய்வதற்கான அதிகாரம் கிடைத்துள்ளது. (ஒரு கழிப்பறைக்கு ரூ.75 ஊக்கத்தொகை வழங்குதல் என்ற ஷரத்து மூலம்). இந்த ஊக்கத் தொகையானது சமுதாய சுகாதாரப்பணியாளர்களின் (ASHA) முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும்.

சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் (MoHFW), தேசிய சுகாதார இயக்கத்தின் (NHM) கீழ் மாநிலங்களுக்கான தனது வருடாந்திர திட்ட அனுமதிகளின் மூலம்

## விஷ்வாஸ் (VISHWAS) இயக்கத்தின் கீழ் 11 மாத பிரச்சார நாள்கள்

1. தூய்மை இந்தியா இயக்கத்துக்கான வருடாந்திர திட்டமிடல் நாள்
2. கிராம சுகாதார மற்றும் துப்புரவு நாள் (கிராமத்தைத் தூய்மைப்படுத்துதல் மற்றும் சுகாதாரம் துப்புரவு ஆரோக்கியம் ஆகியவற்றுக்கு இடையில் தொடர்பு ஏற்படுத்துதல் ஆகியன உள்ளடங்கியது).
3. திறந்த வெளியில் மலம் கழிக்காத கிராம நாள்
4. கைகளைக் கழுவும் தினம்
5. பள்ளி மற்றும் அங்கன்வாடி துப்புரவு நாள்
6. திட மற்றும் திரவக் கழிவுப்பொருள் மேலாண்மை நாள்
7. தனிநபர் மற்றும் வீட்டு சுத்தம் நாள் (சுத்தமான குடிநீர், உணவுப் பொருட்களைக் கையாளுதல், குடிநீரை சிறப்பான முறையில் பாதுகாத்தல்)
8. ஆரோக்கிய விழிப்புணர்வு நாள் / ஆரோக்கியமான வாழ்க்கை முறை நாள்
9. நோய்களைப் பரப்பும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் நாள்
10. தூய்மை பிரச்சார சாம்பியன்களைக் கொண்டாடும் நாள்
11. துப்புரவு மற்றும் தூய்மை குறித்த கிராம சபை நாள்

கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழுக்களின் (VHSNC) திறமையை வலுப்படுத்தவும், அந்தக் குழுக்களுக்கு வழிகாட்டவும் தொடர்ச்சியாக உதவிவருகிறது. கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழுக்களை (VHSNC) நடத்துவதற்காக மாநில அளவிலான பயிற்சியாளர்களுக்கு அவ்வப்போது தேசிய அளவில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தேசிய அளவிலான பயிற்சியாளர்களுக்கான பயிற்சி அண்மையில் 2016ஆம் ஆண்டிலும் 2017ஆம் ஆண்டிலும் நடைபெற்றது.

**ஈ. தேசிய நகர சுகாதார இயக்கத்தின் (NUHM) கீழ் மகளிர் ஆரோக்கிய குழுக்கள் (MAS):**

துப்புரவு மற்றும் சுகாதாரத்திற்கு தேசிய நகர சுகாதார இயக்கத்தின் (NUHM) கீழும் அதிக அளவிற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச் சத்துக் குழுக்களைப் (VHSNC) போலவே நகரப்பகுதிகளில் மகளிர் ஆரோக்கியக் குழுக்கள் (MAS) தேசிய நகர சுகாதார இயக்கத்தின் (NUHM) கீழ் உருவாக்கப்பட்டுள்ளன. நகரப்பகதிகளில் 12 முதல் 20 பெண்கள் சேர்ந்து உருவாக்கும் குழுவாக இந்த மகளிர் ஆரோக்கிய குழு உள்ளது. குறிப்பாக ஏழைகள் மற்றும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய மக்கள் பிரிவினர்களிடையே இந்தக் குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. தேசிய நகர சுகாதார இயக்கத்தின் கீழ் (NUHM) மகளிர் ஆரோக்கிய குழுக்களை (MAS) உருவாக்குவதும், பயிற்சி அளிப்பதும் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன. கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச்சத்துக் குழுக்களைப் (VHSNC) போலவே இந்த மகளிர் ஆரோக்கிய குழுக்களும் ஆண்டுக்கு ரூ.5,000 அளவிற்கு தனிப்பட்ட நிதியைப் பெறுகின்றன. தற்போது அனைத்து மாநிலங்களிலும் சுமார் 74,000 மகளிர் ஆரோக்கிய குழுக்கள் (MAS) உருவாக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் இன்னமும் வளர்ச்சி நிலையில்தான் உள்ளது. மகளிர் ஆரோக்கிய குழு என்பது அண்மைக் கால சமுதாயக்குழு என்றாலும்கூட, இந்தக்குழு குறிப்பாக சுகாதாரம் மற்றும் துப்புரவு தொடர்பான பிரச்சினைகளில் சமுதாயத்தினரை ஒருங்கிணைப்பதில் மிகவும் செயலூக்கமான பங்கினை ஆற்று கிறது.

**உ. விஷ்வாஸ் பிரச்சார இயக்கம் (VISHWAS) கிராம அளவில்**

**சுகாதாரம், குடிநீர் மற்றும் துப்புரவுப் பணிகளை ஒருங் கிணைப்பதற்கான தொடக்கச் செயல்பாடு:**

துப்புரவு மற்றும் சுகாதாரம் ஆகியவற்றை விரிவுபடுத்தவும், வலுப்படுத்தவும் தேவையான முயற்சிகளில் ஒன்றாக தேசிய சுகாதார இயக்கமானது (NHM) 2017ஆம் ஆண்டில் விஷ்வாஸ் (VISHWAS) என்ற புதிய பிரச்சார இயக்கத்தை (கிராம அளவில் சுகாதாரம், குடிநீர் மற்றும் துப் புரவுப்பணிகளை ஒருங்கிணைப் பதற்கான தொடக்கச் செயல்பாடு) ஆரம்பித்தது. இந்தப் பிரச்சாரத்தை கிராம சுகாதார மற்றும் ஊட்டச்சத்துக் குழுக்கள் தங்களது சொந்த ஊர்களில் மேற்கொள்கின்றன.

விஷ்வாஸ் (VISHWAS) இயக் கத்தின் கீழ் ஒவ்வொரு கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச் சத்து குழுக்களும் (VHSNC) தனது பகுதியில் ஒரு வருட காலத்திற்கான பிரச்சாரத்தை மேற் கொள்ளவேண்டும். விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சமுதாயத்தினரைத் திரட்டுதல், குடிநீர் துப்புரவு சுகாதாரம் ஆகியவற்றுக்கான செயல்பாடுகளில் சமுதாய சாம் பியன்களை உருவாக்குதல், பல் வேறு அரசுத் திட்டங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பை உருவாக்கும் ஒரு பொதுதளத்தை உருவாக்குதல் ஆகியவற்றுக்கு இந்தப் பிரச்சாரத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சார இயக்கமானது தூய்மை இந்தியா இயக்கத்துடன் (SBM) சேர்த்து மேற்கொள்ளப்படவேண்டும். பிரச்சார இயக்கம் நடைபெறும் 11 மாத பிரச்சார நாள்களில் ஒவ் வொன்றும் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மையக்கருத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும்.

விஷ்வாஸ் (VISHWAS) பிரச்சாரத் திற்கான பாடத்திட்ட மாதிரியை அமைச்சகம் தயாரித்து அதை ஜூலை 2017இல் மாநிலங்களுக்கு அனுப்பிவைத்தது. தொடங்கப்படும் பிரச்சாரத்திற்கான வழிகாட்டி குறிப்புடன் இது பகிரப்பட்டது. தேசிய அளவிலான பயிற்சியாளர் களுக்கான பயிற்சி புதுதில்லியிலும், கௌஹாத்தியிலும் முறையே ஜூன் 2017 மற்றும் செப்டம்பர் 2017லும் நடத்தப்பட்டது. இந்தப் பாடத்திட்ட மாதிரி ஊரகமேம்பாட்டு அமைச் சகத்துடனும் பகிர்ந்துகொள்ளப் பட்டது.

ஊரக மேம்பாட்டு அமைச்சகம் அக்டோபர் 2017இல் ஏற்பாடு செய்திருந்த தேசிய மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் சுமார் 5,000 பேர்களுக்கு இந்த மாதிரிப் பாடத்திட்டம் வழங்கப் பட்டது. சட்டீஸ்கர், ஒடிசா, பஞ் சாப், தெலுங்கானா, கோவா, மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களும் மேகாலயா, மணிப்பூர், அசாம், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் மிசோராம் ஆகிய வடகிழக்கு மாநிலங்களும் தங்களது மாவட்ட அளவிலான பயிற்றுநர்களுக்கு பயிற்சியளித்துள்ளன. இவற்றில் சில மாநிலங்கள் ஒன்றிய அளவில் பயிற்றுநர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளன. சட்டீஸ்கர் மற்றும் ஒடிசா போன்ற ஒரு சில மாநிலங்கள் இந்தப் பிரச்சாரத்தைத் தொடங்குவதற்காக கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச்சத்துக் குழு (VHSNC) உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்துள்ளன. உத்தரப்பிரதேச மாநிலமானது இந்த விஷ்வாஸ் (VISHWAS) பிரச்சார இயக்கத்தைத் தேர்ந்தெடுத்த ஐந்து மாவட்டங்களில் (வாரணாசி, கோரக்பூர், ஜான்சி, லக் னௌ, கான்பூர்) தொடங்கியுள்ளது. இந்த மாநிலம் மாநில அளவில் பயிற்றுநர்களுக்கான பயிற்சி வகுப்புகளையும் ஒன்றிய பயிற்றுநர் களுக்கான பயிற்சியையும் நடத்தி முடித்துவிட்டது. கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து கமிட்டிகளின் (VHSNC) உறுப் பினர்களுக்கான பயிற்சியை தொடங்கியுள்ளது.

கோரக்பூர் மாவட்டத்தில் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோயை நீக்கும் நடவடிக்கைகளில் சமுதாய அளவி லான செயல்பாடுகளில் விஷ்வாஸ் (VISHWAS) பிரச்சாரத்தை இந்த மாநிலம் ஒருங்கிணைத்து இருக்கிறது. ஜம்முகாஷ்மீர் மாநிலமானது விஷ்வாஸ் (VISHWAS) பாடத்திட்ட மாதிரியை கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழுக்களுக் கான (VHSNC) பயிற்சியுடன் ஒருங்கிணைத்துள்ளது. இந்த மாநிலம் ஜூலை மாதத்தில் மாவட்ட பயிற்றுநர்களுக்கான மூன்று நாள் பயிற்சி வகுப்பை நடத்தியது. இதில் விஷ்வாஸ் பிரச்சாரத்திற்கான அமர்வுகள் சேர்க்கப்பட்டிருந்தன.

**ஊ. தூய்மையே சேவை 2017 பிரச்சாரம் (Swachhta Hi Seva):**

இந்திய அரசு 15 செப்டம்பர் முதல் 2 அக்டோபர் 2017 வரை தூய்மையே சேவை என்ற இயக்கத்தைத் தொடங்கியது. இந்த இயக்கத்தின் மூலம் அனைத்து மாநிலங்களிலும் உள்ள அரசு மருத்துவமனைகள், மக்கள் வசிப்பிடங்களில் (ஊரகம் மற்றும் நகரம்) துப்புரவு மற்றும் சுகாதாரம் தொடர்பான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகமானது (MOHFW) மாநிலங்களின் உதவியுடன் 1.2 இலட்சத்திற்கும் அதிகமான பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டது. தூய்மையே சேவை இயக்கத்தை நடத்துவதில் இந்தியஅரசின் அனைத்து அமைச்சகங்களோடு ஒப்பிட சுகாதார அமைச்சகமே முதல் இடத்தில் இருந்தது. 2018ஆம் ஆண்டுக்கான தூய்மையே சேவை இயக்கம் இப்போது அனைத்து மாநிலங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**எ. இருவார தூய்மைப் பணி (Swachhta Pakhwada):**

சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் (MOHFW) முன் நின்று உருவாக்கிய செயல் திட்டமாக இந்த இருவார தூய்மைப் பணித்திட்டம் (Swachhta Pakhwada) உள்ளது. அரசு மருத்துவமனைகளிலும், மக்கள் வசிப்பிடங்களிலும் ஆண்டுதோறும் துப்புரவு மற்றும் சுகாதாரப்பணிகள் குறிப்பிட்ட காலத்தில் மேற் கொள்ளப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் கீழ் இந்திய அரசின் ஒவ்வொரு அமைச்சகமும் இரு வார தூய்மைப்பணித் திட்டத்தை அரசு ஒதுக்கிய வருடாந்திர கால அட்டவணைப்படி மேற்கொள்ள வேண்டும். இந்த ஆண்டு சுகாதார அமைச்சகத்திற்கு ஏப்ரல் 115, 2018 என்ற இருவார காலம் ஒதுக்கப்பட்டிருந்தது. அனைத்து மாநிலங்களிலும் இந்தத் தூய்மைப் பணி பெரிய அளவில் மேற் கொள்ளப்பட்டது.

**முடிவுரை:**

இதுவரை சுட்டிக்காட்டியவாறு சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் (MOHFW) மேற்கொண்ட பல்வேறுபட்ட நடவடிக்கைகள் அரசு மருத்துவமனைகள் என்ற நிலையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. மேலும் சமுதாய நிலையில் ஆதரவான மற்றும் சாதகமான சூழல் உருவாக்கப்பட்டது. தற்போதுள்ள திட்டங்களை எல்லாம் தாண்டி துப்புரவு மற்றும் சுகாதாரம் தொடர்பான நடத்தை மாற்றம் என்ற இலக்கை அடைய இந்த சாதகமான சூழல் உதவும். காயகல்ப் மற்றும் ஸ்வச் ஸ்வஸ்த் சர்வாத்ரா ஆகியன மருத்துவமனைகளின் தூய்மை நிலையை மேம்படுத்த உதவுவதோடு இந்தப் பிரச்சினைகள் குறித்து சமுதாயத்தினர் விழிப்புணர்வு பெறும் மையங்களாக இந்த மருத்துவமனைகள் பங்காற்றவும் உதவியுள்ளன. கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழுவின் (VHSNC) சமுதாய அடித்தளம், மகளிர் ஆரோக்கியக் குழுக்கள் மற்றும் விஷ்வாஸ் இயக்கம் ஆகியன துப்புரவு மற்றும் தூய்மைப் பணிகளுக்கான சமுதாயத்தினரின் கூட்டு முயற்சியில் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளன. இது தவிர, இவற்றின் இணைவால் உருவாகும் சுகாதார நல்விளைவுகள் குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்தி உள்ளன. நீடித்த நிலையான நடத்தை மாற்றத்தையும் உருவாக்கியுள்ளன. பரவலாக எல்லா இடத்திலும் இருக்கின்ற, அனைவரும் எளிதில் சந்திக்க முடிகின்ற, மக்களின் நம்பிக்கையைப் பெற்ற சுகாதாரத் துறையின் அடிமட்ட ஊழியர்களும் கிராம சுகாதார துப்புரவு மற்றும் ஊட்டச்சத்து குழு (VHSNC) மற்றும் மகளிர் ஆரோக்கிய குழுக்கள் போன்ற சமுதாயம் சார்ந்த நிறுவனங்களும் நாம் எதற்காக பணிபுரிகின்றோமோ அந்தத் தூய்மை இந்தியா மற்றும் ஆரோக்கிய இந்தியாவைக் கட்ட மைக்க உதவுகின்றன. ●

- **பிரீத்தி சூடன்**, செயலாளர், சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை, இந்திய அரசு

அடுத்த இதழில்

# மின்னணு இந்தியா

## (Digital India)

பற்றிய கட்டுரைகள் இடம்பெறும்.

# முழு சுகாதாரத் தமிழகம்
# முன்னோடித் தமிழகம்

- லட்சுமிபதி கோபாலகிருஷ்ணன்

"முழு சுகாதாரத் தமிழகம்" என்கிற இலக்கினை அடைவதன் மூலம் தமிழகத்தை "முன்னோடித் தமிழகமாக" மாற்றுவதற்கு தமிழக அரசு பல்வேறு முன்முயற்சிகளை பல்வேறு காலகட்டங்களில் எடுத்து வந்துள்ளது. பெண்களுக்கான சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக 2001 முதல் 2004 வரை அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம், தமிழக சுகாதார வரலாற்றில் தற்போதும் ஒரு மைல்கல் சாதனையாகவே கருதப்படுகிறது. இதைத் தொடர்ந்து தூய்மையான கிராம இயக்கம், ஆண்களுக்கான சுகாதார வளாகம், ஊரகப்பகுதிகளில் தூய்மைக்காவலர்கள் மூலம் திடக் கழிவு மேலாண்மைத்திட்டம், பள்ளிக் கழிப்பறைகளையும் பள்ளி வளாகங்களையும் தூய்மையாகப் பராமரித்தல் போன்ற தமிழக அரசின் பல்வேறு முன்னோடித் திட்டங்களுடன், மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் பல்வேறு முன்முயற்சிகள் என 'தூய்மைத் தமிழ்நாடு' என்கிற இலக்கில் ஒரு பரிணாம வளர்ச்சியை அடைந்து தமிழகம் சாதனை படைத்துள்ளது.



### அ. முழு சுகாதார நிலையை அடைவதற்கு தடையாக இருந்த சவால்கள்:

முழு சுகாதாரத் தமிழகம் - முன்னோடித் தமிழகம் என்கிற இலக்கினை அடைய பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதும் இதில் பல சவால்களை எதிர்கொள்ள நேரிட்டது. குறிப்பாக, சுகாதாரப் பழக்கம் குறித்து மக்களிடையே போதிய மனமாற்றமின்மை, கழிப்பறைத் தொழில்நுட்பம் குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாதது போன்றவை முக்கியமான சவால்களாக இருந்தன. கடந்த நான்கு ஆண்டுகளில் இந்த சவால்களை எதிர்கொண்டு பல்வேறு வழிமுறைகளை அறிமுகப்படுத்தியதின் மூலம் தற்பொழுது பெருவாரியான மக்கள் தங்கள் குடும்பங்களில் கழிப்பறை தேவையின் அவசியத்தை உணர்ந்துள்ளார்கள்,

சிலர் ஊக்கத்தொகையை மட்டுமே எதிர்பார்த்து கழிப்பறையைக் கட்டாமல் இருந்ததும் ஒரு தடையாக இருந்தது. ஒரு கழிப்பறைக்கு ரூ.12,000/ தொகை என்பது கழிப்பறை கட்டுவதற்கும் குடும்ப ஆரோக்கியத்தின் அவசியத்தை உணர்த்த அரசு தரும் ஒரு ஊக்கத்தொகை மட்டுமே என்ற முறையான தகவலை மக்களிடம் சேர்த்ததின் பயனாக, இந்த நிலை மாறி, கிராமப்புற மக்கள் தாமாக முன் வந்து கழிப்பறை கட்டும் சூழ்நிலையும் உருவானது. அது மட்டுமல்லாமல் தங்களின் முழு ஈடுபாட்டுடன் கட்டப்படும் கழிப்பறைகளை அவர்கள் தொடர்ந்து உபயோகிக்கவும் செய்கின்றனர்.

### நேரடித் தகவல் பரிமாற்றம் மூலம் மனமாற்றத்தை உண்டாக்குதல்:

#### அ. மகளிர் சுய உதவிக்குழுக்களின் பங்கு

தமிழகத்தின் சமுதாய மூலதனமாகக் கருதப்படும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் கழிப்பறைப் பழக்கத்தை ஊக்குவிப்பதில் பெரும் பங்காற்றி வருகின்றன. கிராமப்புறங்களில் மட்டும் சுமார் 4.48 இலட்சம் மகளிர் சுய உதவிக்குழுக்கள் உள்ளன. இதன் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் 67 இலட்சம். இந்த

மகத்தான எண்ணிக்கையுடன் கூடிய பெண்கள் சக்திதான் தூய்மை இந்தியா திட்டத்தை ஒரு மாபெரும் மக்கள் இயக்கமாக மாற்றியுள்ளது.

இந்த சமூக மூலதனத்தை, சுகாதார மேம்பாட்டில் முன்னிலைப் படுத்தி அதன் மூலம் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை மக்களிடம் உணர்த்திடவேண்டும் என தமிழக அரசு முடிவெடுத்து அதில் வெற்றியும் கண்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களும், கிராம ஊராட்சி அளவி லான அதன் கூட்டமைப்புகளும் கீழ்கண்ட பணிகளில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டன.

- வீடுவீடாகச் சென்று நேரடித் தகவல் மூலம் சுகாதாரத் தகவல்களை எடுத்துச் சொல்லி ஊக்குவித்தல்
- கழிப்பறை உபயோகம் இன்மையால் ஏற்படும் உடல் நலபாதிப்புகள் குறித்து எடுத்துரைத்தல்
- கழிப்பறைக் கட்டுமானம் மற்றும் அதன் பயன்பாடு குறித்து எடுத் துரைத்தல்
- கட்டுமானப் பொருட்கள் மற்றும் பயிற்சி பெற்ற கட்டுமானப் பணி யாளர்களைத் தேர்வு செய்தல் போன்றவற்றிற்கு உதவி செய்தல்
- கழிப்பறைப் பயனாளிகளுக்கு ஊக்கத்தொகை சென்றடைவதை உறுதிபடுத்துதல்

சமூக அக்கறையுடன் கூடிய மேற்கண்ட சுகாதார மேம்பாட்டு நட வடிக்கைகளில் இந்த அமைப்புகள் ஈடுபடுவதற்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கும் அரசுத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதைத் தவிர சிறப்பாக செயல் பட்டுவரும் ஊக்குநர்களை ஊக்கு விக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகளில் விருதுகளும், பாராட்டு சான்றிதழ்களும் மத்திய, மாநில அரசுகளாலும், மாவட்ட நிர்வாகத் தாலும், வழங்கப்பட்டு வருகிறது. மகளிர் சுய உதவிக்குழு மற்றும் அதன் கூட்டமைப்பைச் சார்ந்த திருமதி. மல்லிகா (நீலகிரி மாவட்டம்), திருமதி. இராஜலட்சுமி (திண்டுக்கல் மாவட்டம்) ஆகியோர் குஜராத்தில் உள்ள அகமதாபாத் மற்றும் பீகார் மாநிலத்தில் சம் பாரண்ஆகிய இடங்களில் சுகாதாரம் தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசிய அளவிலான விருதுகளை மாண்புமிகு பாரத பிரதமரிடம் பெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர். இதே போல் தமிழகத்தில் பல ஊக்குநர்கள் பாராட்டத்தக்க வகையில் சுகாதார மேம்பாடு பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

### ஆ. ஊக்குவிப்பாளர்களை (Motivators) ஈடுபடுத்துதல்:

சுய உதவிக்குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகிய வற்றிலிருந்து கண்டறியப்பட்ட ஊக்குவிப்பாளர்களுக்கு, சமூக அணுகு முறை (Community Approaches to Sanitation) பயிற்சியும், உரிய ஊக்க நிதியும் வழங்கப்பட்டு, தூண்டுதல் (Triggering) மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடையவும், கழிப் பறைப் பழக்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து, கிராம சமுதாயத்தில் அந்நிலையைத் தக்கவைக்கும் பணிகளை மேற்கொள்ளவும் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### இ. அங்கன்வாடி மையங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்:

பொதுவாக பெண்களுக்கு தங்கள் குழந்தைகளின் உடல்நலன் மீதும், உடல் வளர்ச்சியின் மீதும் அக்கறை அதிகம். தங்கள் குழந்தையின் நலனில் பாதிப்பு ஏற்படுவதை அறவே தவிர்க்கவும் செய்வார்கள். குழந்தைகளின் வளர்ச்சி சம்மந்தப்பட்டவற்றில் ஆர்வம் காட்டவும் செய்வார்கள். குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு என்பது பொதுவான ஒன்றாகக் காணப்பட்டாலும் அதற்கு முக்கிய காரணம் சுகாதாரமின்மை என்பது பல தாய்மார்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.



தங்கள் குழந்தைகளுக்கு அடிக்கடி உடல்நலம் பாதிக்கப்படுவதாலும், சரியாக உணவு உண்ணாததாலும் தான் ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்படுகிறது என்று எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் தான் அதிகம். இது மட்டுமே உண்மையில்லை என்பதையும், அதற்கான அடிப்படையான காரணத்தை தாய்மார்களுக்கு உணர்த்துவதில்தான் ஊக்குநர்களும், மகளிர் சுய உதவிக்குழுக்களும், கிராம செவிலியர்களும், அங்கன்வாடிப் பணியாளர்களும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இதை எளிதாகப் புரிய வைக்கும் வகையில் தமிழக அரசு அவர்களுக்குப் பயிற்சியும் வழங்கி வருகிறது.

திறந்த வெளியில் மலம் கழிப் பதினால் நீர்நிலைகள் மாசடைந்து அந்தத் தண்ணீரைப் பருகுவதாலும், அதில் சமைக்கப்பட்ட உணவை உண்ணுவதாலும் அதில் உள்ள பாக்டீரியா, வைரஸ் போன்ற கிருமிகள் உடலுக்குள் சென்று உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கின்றன. இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் குழந்தைகள் சீதபேதியினால் இறந்து போவதாக ஒரு கருத்துகணிப்பு கூறுகிறது. டைபாய்டு, மஞ்சள் காமாலை, போலியோ போன்ற கொடிய நோய்களும் சுத்தமின்மை மற்றும் கழிப்பறைப் பழக்கம் இல்லாத காரணத்தால் தான் ஏற்படுகின்றன. திறந்த வெளியில் கழிக்கப்பட்ட மலத்தின்மீது வெறுங்காலுடன் நடக்கும் குழந்தைகளுக்கு குடற்புழுக்கள் மூலம் ஏற்படும் பாதிப்புக்கள் ஏராளம். மேற்சொன்ன நோய்களினால் இரத்தசோகை மற்றும் ஊட்டச்சத்துக்குறைபாடு ஏற்பட்டு சில குழந்தைகள் இறக்கின்றன. பல குழந்தைகள் மனவளர்ச்சி குன்றியும், உடல் வளர்ச்சி குன்றியும் தங்களின் வாழ்நாள் முழுவதும் பாதிப்புக்குள்ளாகும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். எனவே தான் தன்சுத்தம் பற்றியும், கழிப்பறைப் பழக்கம் குறித்தும் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு, குறிப்பாக தாய்மார்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமாகிறது.

நேரடித் தகவல் பரிமாற்றம் (Inter Personal Communication) மூலம் ஊக்குநர்களும், செவிலியர்களும், அங்கன்வாடிப் பணியாளர்களும் தாய்மார்களிடம் இது பற்றி விழிப் புணர்வு ஏற்படுத்துவதுடன் அதனைத் தொடர்ந்து வலியுறுத்தியும், கழிப் பறைப் பழக்கத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கச் செய்யும் பெரும் பங்காற்றி வருகிறார்கள்.

**ஈ.பள்ளிக்கூடங்களில் சுகாதாரம்:**

நல்ல பழக்கவழக்கங்களை இள வயதில் கற்பித்தல் சாலச்சிறந்தது. பள்ளி மாணவர்களிடையே கழிப் பறைப் பயன்பாட்டின் அவசியத்தை உணர்த்துவதும், தன் சுத்தம் (Personal Hygienic) குறித்த அறிவு சார்ந்த விவரங்களைக் கற்பிப்பதும் சிறந்த குடிமகன்களாக அவர்கள் உருவாக வழிவகுக்கிறது. அந்த வகையில் அவர்களுக்கு எளிதாகப் புரியும் வகையிலான சுகாதாரம் குறித்த கருத்துப் படங்கள் அனைத்து வகுப்புகளின் புத்தக அட்டைப் படத்தில் அச்சிட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு பள்ளியிலும் தூய்மை மற்றும் சுகாதாரச்சங்கம் அமைக்கவும் உத்தரவிட்டுள்ளது.

பள்ளிகளில் குறைந்தபட்சம் வருடம் இருமுறை முக்கியத்துவம் வாய்ந்த தினங்களில் சுகாதாரம் குறித்த பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி ஆகியவற்றை நடத்தவும் தமிழக அரசு ஆணை யிட்டுள்ளது. இதில் மாவட்ட அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விருதுகள் வழங்கி மாணவர்களை ஊக்கப் படுத்தி வருகிறார்கள். இதைத் தவிர சுகாதாரத்துறையைச் சார்ந்த மருத்துவர்களும், செவிலியர்களும், பள்ளிகளுக்குச் சென்று சுகாதார முகாம் நடத்துவதுடன் தன்சுத்தம் குறித்த விழிப்புணர்வையும் மாணவர் களிடையே ஏற்படுத்தி வருகின்றனர். தமிழக அரசு கிராமப்புறங்களில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் போதுமான கழிப்பறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அது மட்டுமல்லாமல் சுகாதாரப் பணி யாளர் மூலம் அதனைத் தூய்மையாக பராமரிக்கவும் ஆண்டுக்கு சுமார் ரூ. 63 கோடி ஒதுக்கீடு செய்து வருகிறது. இது அகில இந்திய அளவில் ஒரு முன்னோடித் திட் டமாகக் கருதப்படுகிறது. மத்திய அரசு இந்த நடைமுறையைப் பாராட்டியதுடன் பிற மாநிலங்களும் இதைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. இதுபோன்ற அரசின் பல்வேறு நடவடிக்கைகளினால் நம் இளைய தலைமுறையினர் தாங்கள் மட்டுமல்லாது தங்கள் வீட்டில் உள்ள வர்களையும் சுகாதார குடிமக்களாக உருவாக்கும் அரும்பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

**உ.ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் விழிப்புணர்வு:**

மாசடைந்த நீர் மற்றும் சுற்றுப்புறச் சீர்கேடு ஆகியவற்றால் ஏற்படும் நோய்கள் தான் மிகவும் அதிகமாக உள்ளன. இதை உரிய முறையில் மருத்துவர்கள் எடுத்துச் சொல்லும் போது நோயாளிகள் தங்களுக்கு ஏற்பட்ட நோய்களுக்கான காரணத்தை உணர்ந்து அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். இந்த யுக்தியை அடிப்படையாகக் கொண்டு, ஆரம்ப சுகாதாரநிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் புறநோயாளிகளுக்கான மருந்துச்

சீட்டில் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு செய்திகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், கழிப்பறையைப் பயன்படுத்தவேண்டும் என்கிற மருத்துவரின் பரிந்துரையும் அதில் அச்சிடப்பட்டுள்ளது. இதைத் தவிர ஏற்கெனவே குறிப்பிட்டாற்போல், பள்ளி மாணவர்கள் அங்கன்வாடி மையத்திற்கு வருகை புரியும் குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள், வளர் இளம் பெண்கள் ஆகியோரிடம் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை மருத்துவர்களும், செவிலியர்களும், ஏற்படுத்திவருகின்றனர். யூனிசெப் நிறுவனத்தின் ஆய்வுகளின்படி கழிப்பறையைப் பயன்படுத்தி சுகாதாரம் பேணும் ஒவ்வொரு குடும்பமும் ஆண்டொன்றிற்கு குறைந்தபட்சம் ரூ. 50,000 வரை சேமிக்க இயலும் என கண்டறியப்பட்டுள்ளது. உலக சுகாதார அமைப்பு தனது அறிக்கையில் தூய்மை இந்தியா திட்டச் செயல்பாட்டின் மூலம் 2014 முதல் 2019 வரை சுமார் 3 இலட்சம் உயிர்கள் காக்கப்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கின்றது. உலக வங்கி தனது அறிக்கையில் மோசமான சுகாதாரத்தின் மூலம் இந்தியா இதுவரை ஆண்டிற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதம் வரை இழந்திருப்பதாகத் தெரிவிக்கிறது. இதுபோன்ற தகவல்களும் நேரடி தகவல் பரிமாற்றத்தின் போது மக்களிடையே கொண்டு சேர்க்கப்படுகிறது.

**ஊ. கழிப்பறைத் தொழில்நுட்பம் மற்றும் அதன் முக்கியத்துவம்:**

பொதுமக்களிடையே இரட்டை உறிஞ்சுகுழி கழிப்பறை குறித்த தொழில்நுட்ப விழிப்புணர்வு முன்பைவிட இப்பொழுது அதிகமாக உள்ளது. ஊரகப் பகுதிகளில் இரு உறிஞ்சுகுழியின் நன்மைகளை தெரிந்து கொள்ளாமல் இருந்த மக்கள், செரிமானத் தொட்டியுடன் கூடிய கழிப்பறை தொழில்நுட்பம் குறித்த முறையான தகவல்களைக் கொண்டு சேர்த்ததன் மூலம் இரட்டை உறிஞ்சுகுழி கழிப்பறையைக் கட்டுவதற்கு முன் வந்துள்ளனர். மேலும், குறைந்த செலவு, சுத்தம் செய்ய எளிதானது, உரமாக மாறுவது, வசதியான தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வடிவமைப்பு போன்றவை உறிஞ்சுகுழியுடன் கூடிய கழிப்பறையின் நன்மைகளாகும். இது குறித்த விழிப்புணர்வும், முறையான பயிற்சியும் வழங்கப்பட்டதின் பயனாக கழிப்பறைக் கட்டுமானம் மற்றும் கழிப்பறை பராமரித்தல் எளிதாக்கப்பட்டுள்ளது.

**ஊரகப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்:**

குப்பைகளை சேகரித்தல், தரம் பிரித்தல் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்தும் வசதிகளுடன் கூடிய திடக்கழிவு மேலாண்மைத் திட்ட அமைப்புகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை ஊரகப்பகுதிகளில் முழுமையாக செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழகம் தான் முதன்மை மாநிலம் ஆகும். திடக்கழிவு மேலாண்மைத் திட்ட செயல்பாடுகளில், 66,025 தூய்மைக் காவலர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இதற்கு மாநில அரசு ரூ.206.04 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் கிராமப்புறங்கள் தூய்மையாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

**முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம் கடந்து வந்த பாதை:**

கிராமப்புறங்களில் செயல்படுத்தப்படும் தூய்மை இந்தியா திட்டம் ஒரு மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது. மாநிலங்களின் சூழ்நிலைகளுக்கேற்ப இந்த இயக்கத்தின் தன்மை மாறுகிறது. தமிழ்நாட்டில் "முழு சுகாதாரத் தமிழகம்; முன்னோடித் தமிழகம்" என்ற சுகாதார முழக்கத்தின்படி மேற்கண்டவாறு தமிழக அரசு எடுத்த பல்வேறு முன்முயற்சிகளினால் 2013இல் 45 விழுக்காடாக இருந்த சுகாதார நிலை அக்டோபர் 2018இல் 100 விழுக்காடு என்ற முழு சுகாதார நிலையை அடைந்துள்ளது.

2013ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட சுகாதாரக் கணக்கெடுப்பின்படி கழிப்பறை வசதி இல்லாமல் இருந்த சுமார் 50 இலட்சம் குடும்பத்தினர்களுக்கு கழிப்பறை வசதி செய்து தரப்பட்டுள்ளது. இந்தக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் உள்ள 31 ஊரக மாவட்டங்களிலும் 12,524 கிராம ஊராட்சிகளிலும், திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நிலையை எட்டப்பட்டு தமிழக சுகாதார வரலாற்றில் ஒரு மாபெரும் சாதனை படைக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தப்பணி இத்துடன் நிறைவடையவில்லை. திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை தக்க வைத்தால் தான் சுகாதாரப் பயன்களை முழுமையாக அடையமுடியும். ஊட்டச்சத்துக் குறைபாடுகள் இல்லாத தமிழகத்தை உருவாக்க முடியும் என்பதை தமிழக அரசு நன்கு உணர்ந்திருப்பதால், கிராமப்புறங்களில் தூய்மையையும், சுகாதாரத்தையும் பேணிக் காக்கும் தூய்மைக் காவலர்களின் மூலம் திடக்கழிவு மேலாண்மை, பள்ளிகளில் சுகாதாரவசதி, சம்மந்தப்பட்ட அனைத்துத்துறை பங்கேற்பாளர்களையும் ஒருங்கிணைத்து சுகாதார விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல் போன்ற உன்னதப் பணிகளை மிகுந்த அக்கறையுடன் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

**- லட்சுமிபதி கோபாலகிருஷ்ணன்,**
கூடுதல் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்ககம், சென்னை.

# கண்ணியத்துடன் வாழவும், சுத்தமான மற்றும் பாதுகாப்பான சூழலில் குழந்தைகளை வளர்க்கவும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்

- ராகேஷ் ஸ்ரீவத்சவா


"சமுதாயத்தில் துப்புரவு என்பது சுதந்திரத்தைவிட மிகவும் முக்கியமானது ஆகும். நம்மைப் போன்ற ஒரு சமுதாயத்தில் துப்புரவு என்பது பொதுவான ஆன்மீக முயற்சி ஆகும். அதோடு கூட, இது ஒரு அடிப்படை மனித உரிமையும் ஆகும்." *- எம்.கே.காந்தி*

**ம**னித இனம் உயிர் வாழ்வதற்குத் துப்புரவு அவசியம் என்பதற்கு பாபுஜி எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுத்தார் என்பதை மேலே எடுத்துக்காட்டிய மேற்கோள் விளக்குகிறது. துப்புரவு என்பது சுத்தத்துக்கும் ஒரு படி மேலான நிலை ஆகும். மனிதக்கழிவு, திடக் கழிவு (தானாகவே மக்கும் கழிவுகள் மற்றும் தானாகவே மக்காத கழிவு கள் / பயன்படுத்தப்பட முடியாத பொருள்கள் / கூளங்கள்), கழிவுநீர், சாக்கடைநீர், தொழிலகக்கழிவுகள் மற்றும் ஆபத்தான கழிவுகள் (மருத்துவமனைக்கழிவுகள், வேதிப் பொருள்கள், கதிரியக்கப்பொருள்கள், பிளாஸ்டிக் அல்லது ஆபத்தை ஏற்படுத்தும் இதரப்பொருள்கள்) ஆகிய அனைத்துக்குமான திறம்பட்ட மேலாண்மையை (சேகரித்தல், சுத்திகரிப்பு, அகற்றிமுடித்தல் / மீளப் பெறுதல், மறுபயன்பாடு அல்லது மறுசுழற்சி) உள்ளடக்கிய விரிவான ஒன்றாக "துப்புரவு" என்ற கருத்தாக்கம் இருக்கிறது. ஒரு சமூகத்தில் துப்புரவின் தரநிலைகள் எவ்வாறு உள்ளன என்பது அந்த சமூகத்தின் சுத்தம் மற்றும் பொது சுகாதாரம் ஆகியவற்றின் நிலைமைகளோடு நெருங்கிய தொடர்புடையது ஆகும். இதில் நோய்களின் நிலைமை, ஆயுள் கால நீட்டிப்பு மற்றும் சமூகத்தின் உற்பத்தி நிலைகள் ஆகியவையும் உள்ளடங்கும். சுத்தம் இல்லாதது, அழுக்கு, கூளம் மற்றும் மாசு போன்றவற்றை ஏற்படுத்தும் துப்புரவு நிலையின் போதாமையால் முக்கியமான பொருளாதார விளைவு கள் ஏற்படுவதோடு துப்புரவற்ற சூழலானது சமூகரீதியான விளைவு ளையும் ஏற்படுத்தும். இந்தச் சூழ லானது சமுதாய நிலை மற்றும் பொருளாதார நிலை என இரண்டு நிலைகளிலும் வாழ்வை செயலற்ற தாக்கி விடும்.

2. மகாத்மா காந்தி தனது தொடக்ககால பொதுவாழ்விலேயே துப்புரவு குறித்த பிரச்சினையை உணர்ந்தார். அவரின் காலத்தில் இந்தியாவில் இருந்த துப்புரவு மற்றும் தூய்மை ஆகியவற்றின் மோசமான நிலைமை, அதிலும் குறிப்பாக போதுமான கழிப் பறைகள் இல்லாத நிலைமையை மாற்ற சுயராஜ்ஜியம் அடைவதற்கு செலுத்தப்படும் அதே அளவு அக்கறையை இதற்கும் செலுத்த வேண்டும் என்று காந்தி கருதினார். இந்தியாவின் சுதந்திரத்துக்காக மேற் கொண்ட போராட்டத்தைப் போன்றே துப்புரவுக்கும், தூய்மைக்கும் காந்தி தொடர்ந்து போராடினார். மேலும், தனது பொதுவாழ்வில் அனைத்து வகையான கழிவுகளையும் திறம்படக் கையாள்வதற்கும் அவர் முக்கியத்துவம் அளித்தார். தொழில்நுட்பம், சமூகம் மற்றும் பொருளாதாரம் என்ற துப்புரவின் அனைத்து அம்சங்களோடு தனிநபர், வீடு மற்றும் நிறுவனம் என்ற பல்வேறுபட்ட அம்சங்களையும் அவர் கவனத்தில் எடுத்துக் கொண்டார். சுதந்திரத்திற்குப் பிறகும் கூட துப்புரவு என்ற பிரச் சினையானது அரசின் கவனத்தை அவ்வப்போது ஆக்கிரமித்தது (டாக்டர் ஒய்.பி.ஆனந்த், "சுத்தமும் துப்புரவும்: காந்திய இயக்கமும் தூய்மை இந்தியா இயக்கமும்", பம்பாய் சர்வோதய மண்டல் மற்றும் காந்தி ஆராய்ச்சி அறக்கட்டளை).

3. மகாத்மா காந்தியின் கருத் தாக்கத்தைப் பின்பற்றி இந்தியாவின் பிரதமமந்திரி திரு.நரேந்திர மோடி அவர்கள் அக்டோபர் 2, 2014

அன்று நாடு முழுவதற்குமான துப்புரவு இயக்கத்தை, அதாவது ஸ்வச் பாரத் அபியான் (தூய்மை இந்தியா இயக்கம்) என்ற இயக்கத்தைத் தொடங்கினார். ஒவ்வொரு இந்தியருக்கும் துப்புரவு வசதிகளை ஏற்படுத்தித் தருவதே தூய்மை இந்தியா இயக்கத்தின் நோக்கம் ஆகும். கழிப்பறைகள், திட மற்றும் திரவக் கழிவுகளை அகற்றும் அமைப்புகள், கிராமப்புறத் துப்புரவு, தூய்மையான மற்றும் போதுமான அளவு குடிநீர் விநியோகம் ஆகியவற்றை அக்டோபர் 2, 2019க்குள் அனைவருக்கும் வழங்கவேண்டும், அதாவது மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்த நாளில் இந்த வசதிகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் செய்தாக வேண்டும் என்பதுவே இந்தத் திட்டத்தின் செயல் இலக்காகும்.



4. வளர்ந்து வரும் துறையின் பிரிவைச் சித்தரிக்கும் வகையில் தண்ணீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் ஆகிய மூன்று முக்கிய பிரச்சினைகளும் ஒன்று சேர்க்கப்பட்டு உள்ளன. இந்தப் பிரச்சினைகள் ஒவ்வொன்றும் தனித்தனி செயல்பாட்டுக் களமாக இருந்தாலும், இவை ஒவ்வொன்றும் மற்றதைச் சார்ந்தே இருக்கின்றன. உதாரணமாக கழிப்பறைகள் இல்லாவிட்டால் நீர்நிலைகள் அசுத்தமாக்கப்பட்டு விடுகின்றன; குடிநீர் சுத்தமாக இல்லாமல் போனால் அடிப்படை சுகாதாரச் செயல்பாடுகள் இல்லாமல் போய்விடும். சுத்தமான நீர், அடிப்படையாகத் தேவைப்படும் கழிப்பறைகள் மற்றும் சிறப்பான சுகாதார நடைமுறைகள் ஆகிய மூன்றும் குழந்தைகள் உயிர் வாழ்வதற்கும் அவர்களின் வளர்ச்சிக்கும் இன்றியமையாதவை ஆகும். இன்று தோராயமாக 2.4 பில்லியன் மக்கள் மேம்படுத்தப்பட்ட துப்புரவு வசதிகளைப் பயன்படுத்தும் நிலையில் இல்லை. அதே போன்று 663 மில்லியன் மக்கள் மேம்படுத்த நீர் ஆதாரங்களைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். இந்த அடிப்படைத்தேவைகள் நிறைவேறாத நிலையில் கோடிக்கணக்கான குழந்தைகளின் வாழ்க்கை நிலையானது ஆபத்தான முறையில்தான் உள்ளது. ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் மரணத்திற்கான முதன்மைக் காரணங்களில் ஒன்றாக தண்ணீர் மற்றும் துப்புரவுப் பிரச்சினைகளால் ஏற்படும் நோய்களே உள்ளன. ஒவ்வொரு நாளும் மோசமான குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் ஆகியவற்றின் போதாமை போன்ற காரணங்கள் உருவாக்கும் தடுக்கப்படக்கூடிய நோய்களால் 800க்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்து போகின்றனர். சுமார் 564 மில்லியன் மக்கள், அதாவது இந்திய மக்கள் தொகையில் பாதிபேர் திறந்த வெளியில் மலம் கழிக்கின்றனர். தெற்காசியாவில் திறந்த வெளியில் மலம் கழிப்பவர்களில் 90 சதவிகிதம் பேர் இந்தியாவில்தான் உள்ளனர். அதே போன்று உலக அளவில் திறந்த வெளியில் மலம் கழிப்பவர்களாக உள்ள 1.1 பில்லியன் நபர்களில் 59 சதவிகிதம் பேர் இந்தியர்கள் ஆவர்.

5. ஸ்வச்சத இயக்கத்தை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லும் முன்னோடி அமைச்சகமாக பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் உள்ளது. இந்திய அரசின் தூய்மை இந்தியா இயக்கத்தின் செயல்பாடுகளைத் தானே முன்வந்து நடைமுறைப்படுத்தும் அமைச்சகங்களில் ஒன்றாக எங்களது அமைச்சகமும் உள்ளது. எங்கள் அமைச்சகமானது மாநிலங்கள், மாவட்டங்கள் மற்றும் கிராம நிலையிலான குழுக்களுடன் இணைந்து திறந்த வெளியில் மலம் கழிப்பதைத் தடுக்கும் திட்டங்களைச் (ODEP) செயல்படுத்திவருகிறது. அதாவது எல்லா வீடுகளிலும் கழிப்பறை என்ப

தோடு நின்று விடாமல் சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், பஞ்சாயத்து கட்டிடங்கள், சந்தை செயல்படும் இடங்கள் ஆகிய இடங்களிலும் பாதுகாப்பான துப்புரவு மற்றும் சுகாதாரவசதிகள் கிடைக்கவும் முக்கியத்துவம் தருகிறது. அதேபோன்று திட மற்றும் திரவக் கழிவுகளின் மேலாண்மைக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் திறந்த வெளியில் மலம் கழிக்காத நாடாக மாறுவதற்கு இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த இலக்கை அடைய உள்கட்டமைப்பு வசதிகள், நடத்தை மாற்றம் மற்றும் விரிவான கூட்டு முயற்சிகள் ஆகியவற்றின் மூலம் எதிர்கொண்டு நிறைவு செய்தாக வேண்டும்.

6. அங்கன்வாடி மையங்கள் அனைத்திலும் துப்புரவு மற்றும் சுகாதாரத்தைச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளன. மேலும் 2014ஆம் ஆண்டில் நவம்பர் 14 முதல் 19 வரை தூய்மை இந்தியா இயக்கம் மற்றும் குழந்தைகள் மைய தூய்மை இயக்கம் ஆகியவற்றின் கீழ் தூய்மையான அங்கன்வாடி மையங்கள், தூய்மையான சுற்றுப்புறம் போன்ற மையக்கருத்துகளில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அங்கன்வாடி மையங்கள் அறிவுறுத்தப்பட்டன. அதாவது விளையாட்டு மைதானங்கள், சுயதூய்மை (தனிநபர் சுகாதாரம் / குழந்தை நலம்), தூய்மையான உணவு, சுத்தமான குடிநீர், தூய்மையான கழிப்பறைகள் போன்றவை மையக்கருத்துகளாக இருக்குமாறு வலியுறுத்தப்பட்டன.

7. தூய்மை மற்றும் துப்புரவு குறித்தும் அங்கன்வாடி மையங்களில் சுத்தமான குடிநீரைப் பயன் படுத்துவது குறித்தும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள குழந்தைகள் தூய்மை இயக்கம் குறித்த சிறுபிரசுரமானது மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் வெளியிடப்பட்டது.

8. அதே சமயம், 2016ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டத்தின் கீழ் (MGNREGA) 4 இலட்சம் அங்கன்வாடி மையக்கட்டிடங்கள் கட்டுவதற்கு ஊரக மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ஆகியவற்றுடன் இணைந்து கூட்டுமுயற்சிகளும் எடுக்கப்பட்டன.

9. அமைச்சகமானது 2016ஆம் ஆண்டில் கழிப்பறை மற்றும் குடிநீர் வசதி தேவைப்படும் அங்கன்வாடி மையங்களை அடையாளம் காணும் நடவடிக்கையைத் தொடங்கியது. இதில் தோராயமாக 24 இலட்சம் அங்கன்வாடி மையங்கள் அடையாளம் காணப்பட்டன. அங்கன்வாடி மையங்களிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தூய்மை மற்றும் சுகாதாரத்தைப் பராமரிப்பதில் 3.86 கோடி பெண்களும் சிறுமிகளும் முக்கிய பங்காற்றுகின்றனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் 2017ஆம் ஆண்டில் மார்ச் 1 முதல் 15ஆம் தேதி வரை தூய்மை இருவார முகாமைக் கடைபிடித்தது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குத் தூய்மை இந்தியா இயக்கம் குறித்த விழிப் புணர்வை ஏற்படுத்த இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அனைவருக்கும் துப்புரவு மற்றும் சுகாதார வசதிகள் வழங்குவதற்கும், 2019இல் இந்தியாவை திறந்த வெளியில் மலம் கழிக்காத நாடாக (ODF) அறிவிப்பதற்கும், இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இந்த இருவார நிகழ்வில், அமைச்சகம் மற்றும் அமைச்சகம் சார்ந்த அலுவலகங்களில் உள்ள அனைத்து மூத்த அதிகாரிகளும் மாநில அரசுகளில் உள்ள தங்களது துறை சார்ந்த அதிகாரிகளுடன் இணைந்து நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்கத்தின் களப்பணிகளைப் பார்வையிட்டனர். இந்த அதிகாரிகள் கள அளவில் வேலைசெய்யும் அங்கன்வாடிப் பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், குழந்தை வளர்ச்சித் திட்டஅலுவலர்கள் ஆகியோருக்கு தூய்மை, துப்புரவு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர். அங்கன்வாடி மையங்கள், குழந்தை பராமரிப்பு மையங்கள், ஸ்வாதார் இல்லங்கள், ஒன்ஸ்டாப் மையங்கள், பணி புரியும் மகளிருக்கான இல்லங்கள் முதலான அமைச்சகத்தின் கள அலுவலகங்களில் பல்வேறு தூய்மை தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. உள்ளூர் மக்களின் பங்கேற்புடன் அங்கன்வாடி மையக் கட்டிடங்களுக்கு வெள்ளை அடித்தல், படங்கள் வரைதல், மக்கள் பங்கேற்புடன் இலவசமாக சுவர்களில் அடையாளச் சின்னம் (லோகோ) வரைதல், அங்கன்

வாடிமையங்களையும் அதனைச் சுற்றி உள்ள இடங்களையும் தூய்மை செய்தல் போன்ற நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டன. அமைச்சகமானது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட கழிப் பறைகளை ஆய்வு செய்ததோடு மாற்றுத்திறனாளிகள் கழிப்பறைகளை உபயோகப்படுத்துவது குறித்தும் ஆய்வு செய்தது. இத்தகைய தூய்மைப் பணிகளுக்கு நிறுவனச் சமூகப் பொறுப்புடைமை (CSR) மூலம் தனியார் நிறுவனங்களும் ஈடுபடுத்தப்பட்டன. தூய்மை என்ற மையப்பொருளில் பல்வேறு போட்டி கள் நடத்தப்பட்டன. குழந்தை களுக்கு சிறுவயதில் இருந்தே தூய்மைப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அந்தந்தத் தலைப்புகளில் ஓவியம் வரையும் போட்டிகள் நடத்தப்பட்டன.

10.2017-18ஆம் ஆண்டு கணக் கெடுப்பின்படி 70,000 கழிப்பறைகள் அங்கன்வாடி மையங்களில் கட்டப் பட்டுள்ளன. அதே போன்று 20,000 அங்கன்வாடி மையங்களில் சுத்தமான குடிநீர் வசதிகள் ஏற் படுத்தப்பட்டுள்ளன. குழந்தை பராமரிப்பு மையங்கள் சுத்தப் படுத்தப்பட்டு அங்கும் கழிப் பறை வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. இதே போன்று 2018-19ஆம் ஆண்டில் கூடுதலாக 70,000 கழிப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன மற்றும் 20,000 சுத்தமான குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன. அமைச்சகத்தில் உள்ள புள்ளிவிவரத்தின்படி 2018ஆம் ஆண்டில் 9,29,339 அங்கன்வாடி மையங்களில் கழிப்பறை வசதிகள் உள்ளன.

11. தூய்மை இந்தியா திட்டத் திலேயே பெண் குழந்தைகளுக்கான செயல்பாடுகளும் உள்ளன. இதன் கீழ் சுகாதாரமாக சமையல் செய்யும் முறைகள் மற்றும் நடத்தை குறித்து செயல் விளக்கம் தரப்பட்டது. நாடு முழுவதும் உள்ள குழந்தை பராமரிப்பு மையங்களில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் ஆரோக்கியம், சுத்தம் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும் என்ற தனது இலக்கினை பல்வேறுபட்ட நிகழ்ச்சி களை ஏற்பாடு செய்து அதன் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம் நிறைவு செய்துள்ளது.

12. 15 செப்டம்பர் 2018 முதல் 2 அக்டோபர் 2018 வரை பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது "தூய்மையே சேவை" என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டது. தூய்மை இருவார முகாமில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் போன்றே தூய்மை சார்ந்த நடவடிக்கைகள் இப்போதும் மேற்கொள்ளப்பட்டன. அமைச்சகத்தின் கீழ் உள்ள அமைப்புகள் / நிறுவனங்கள் / இதர களஅலுவலகங்கள் என அனைத்திலும் தூய்மையையும், சுத்தத்தையும் ஏற்படுத்துவதே நோக்கம் ஆகும். கிராமப்புற இந்தியப் பகுதிகளில் உள்ள குழந்தை பராமரிப்பு மையங்களும் அங்கன்வாடி மையங்களும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் தினந்தோறும் கூடும் சந்திப்பு இடமாக உள்ளன. எனவே இந்த மையங்கள் தூய்மை குறித்த விழிப்புணர்வையும், துப்புரவு குறித்த தகவல்களையும் எடுத்துச்சொல்லும் மையங்களாகச் செயல்படுகின்றன. கிராமப்புறப் பெண்கள் நீண்ட காலமாக மாதவிடாய் காலங்களில் சுகாதாரமற்ற நடைமுறைகளையே கடைபிடித்து வருகின்றனர். இதை மாற்றும் வகையில் மாதவிடாய் குறித்த விழிப்புணர்வும், மாதவிடாய் காலத்திற்குத் தேவையான நாப்கின் போன்ற பொருள்களும் இந்த மையங்களின் மூலமாகத் தரப் படுகின்றன. சுகாதாரமற்ற மாதவிடாய் நடவடிக்கைகள் பெண்களின் உடல் மற்றும் உள்ளம் ஆகிய இரண்டின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பெண்களுக்கு சுகாதாரமான மாத விடாய் குறித்து விழிப்புணர்வு முகாம்கள் நடத்த அமைச்சகமானது தனிப்பட்ட முறையில் அக்கறை காட்டுகிறது. 2018இல் மேற் கொள்ளப்பட்ட தூய்மையே சேவை முகாமில் அனைத்து அங்கன் வாடிப்பணியாளர்களும், ஐ.சி.டி.எஸ் பணியாளர்களும் கிராம அளவில் தன்னார்வத் தூய்மைப்பணிகளில் ஈடுபட்டனர். "துப்புரவு என்பது ஒவ்வொருவரின் பொறுப்பு" என்ற கருத்தாக்கத்தை அமைச்சகம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியது. இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனும் தூய்மை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதை உறுதி செய்யும் வகையில் "தன்னார்வச் சேவை" அல்லது உழைப்பை வழங்குதல் என்பது ஊக்கப்படுத்தப்பட்டது. "தன்னார்வச் சேவை" என்பது அமைச்சர் முதல் அங்கன்வாடிப் பணியாளர் வரை தன்னார்வமாக தூய்மைப்பணிகளைச் செய்வது ஆகும். இதனை அமைச்சகம் புத்தாக்க முறையில் முன்னெடுத்து வீடுகள், சுற்றுப்புறங்கள், அலு வலகம் போன்ற இடங்களில் இவர்கள் தூய்மைப்பணியை

மேற்கொண்டனர். அமைச்சகத்தின் அலுவலர்கள் கூட இந்தப் பணிகளில் ஈடுபட்டனர். சகபணியாளர்களையும் பொதுமக்களையும் தன்னார்வச் சேவையில் ஈடுபட அவர்கள் ஊக்குவித்தார்கள்.

13. மையக்கருத்துக்கு ஏற்ப குழந்தைகளுக்கு பொம்மலாட்ட நிகழ்ச்சிகள், சுவர் சித்திரங்கள் வரைதல், வீதிநாடகங்கள் போன்றவை ஏற்பாடு செய்யப்பட்டன. இதனால் தூய்மை குறித்த கருத்தானது பொழுதுபோக்கு என்ற அம்சத்தோடு சேர்ந்து குழந்தைகளுக்கு எடுத்துச்சொல்லப்பட்டது. இத்தகைய கலை நிகழ்ச்சிகளானது குழந்தைகளிடையே தூய்மை குறித்த ஆர்வத்தை அதிகரித்தன மற்றம் அவர்கள் ஞாபகப்படுத்திக் கொள்வதற்கு எளிதாகவும் இருந்தன.

14. திறந்தவெளியில் மலம் கழிக்கும் பழக்கத்திற்கு முடிவு கட்ட அரசாங்கம், மக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகள், ஊடகத்தினர் போன்ற செல்வாக்கு மிக்க கருத்துருவாக்கத் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து திறந்தவெளியில் மலம் கழிக்காத நாடு என்ற இலக்கை அடைய இவர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும். நாடு மற்றும் மாநிலத்தில் உள்ள துப்புரவு சவாலை எதிர்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை அதிகரிக்கக் கூடிய சக்தி வாய்ந்த மையங்களாக இந்த அங்கன்வாடி மையங்கள் உள்ளன. இவை தனிநபர் நிலையிலும் முக்கிய சக்திகளாக உள்ளன. திறந்த வெளியில் மலம் கழிப்பதை நீக்கும் திட்டங்களில் மாநில மற்றும் மாவட்டக்குழுக்களுடன் சேர்ந்து அமைச்சகமானது செயல்படுகிறது. சரியான கழிப்பறை வசதி இல்லாத வாடகைக் கட்டிடத்தில் செயல்படுகின்ற அங்கன்வாடி மையங்களை அருகில் உள்ள பள்ளிக்கூடங்களுக்கு மாற்ற அமைச்சகம் முயற்சிகள் எடுத்து வருகிறது. இதனால் அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதிகள் கிடைக்கும். பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு துப்புரவு மற்றும் சுகாதாரம் குறித்த செயல்விளக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சகம் தீவிர நடவடிக்கைகள் எடுத்துவருகிறது. ஊட்டச்சத்துவிழா, தூய்மையே சேவைமுகாம் மற்றும் இருவார தூய்மை முகாம் போன்ற நிகழ்ச்சிகளில் உலக சுகாதார நிறுவனம் முன்வைத்துள்ள சரியான முறையில் கைகழுவும் முறையானது விளக்கிக்காட்டப்படுகிறது.

15. வறுமையும் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையும் பச்சிளம் குழந்தைகள் மற்றும் குழந்தைகளிடையே வயிற்றுப்போக்கு, நிமோனியா போன்ற தொற்றுநோய்கள் பரவும் வாய்ப்பை அதிகரிக்கின்றன. மேலும் குறைந்த எடையுடன் பிறந்த குழந்தைகள் இறக்கக்கூடிய சூழலையும் அதிகப்படுத்துகின்றன. வீட்டில் நிலவும் மோசமான பொருளாதார நிலை, பெண்களின் எழுத்தறிவு விகிதம் குறைவாக இருத்தல், குழந்தைத் திருமணம், அதிக அளவில் குழந்தைகள் இருக்கும் குடும்பம், பெண்கள் தனித்த இயங்க முடியாத நிலை, சுகாதாரச் சேவைகளைப் பெறுவதில் பற்றாக்குறை போன்ற அம்சங்கள் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கிய நிலையில் அதிக ஆபத்துக் காரணிகளை உருவாக்குகின்றன என்று குடிமையியல் மற்றும் நோயியல் ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதேபோன்று பல்வேறு சமூகப் பொருளாதார நிலைகளிலும் பல வேறு மாநிலங்களுக்கு இடையிலும் பேறுகால மற்றும் குழந்தை நல நிலைமையில் பாகுபாடுகள் இருப்பதையும் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இந்தியாவில் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளிடம் அதிக அளவு வயிற்றுப்போக்கு மரணம் ஏற்படுகிறது என்று இந்தியா தனது அறிக்கையில் தெரிவிக்க முதன்மை காரணமாக இருப்பது திறந்த வெளியில் மலம் கழிக்கும் நடைமுறைதான் என்பது பரவலாக உணரப்பட்டுள்ளது. அடிக்கடி வயிற்றுப்போக்கால் பாதிக்கப்படும் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாடுகள், குள்ளமாக வளர்தல், நிமோனியா போன்ற நோய்களுக்கு ஆளாகக் கூடியவர்களாக உள்ளனர். ஊரக இந்தியாவில் உள்ள குழந்தைகளிடம் ஊட்டச்சத்துக் குறைபாடு என்பது பொதுவான பிரச்சினையாகவே உள்ளது. அதிலும் குறிப்பாக சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ள பிரிவினரின் குழந்தைகளிடம் இந்த நிலைமை சாதாரணமாக உள்ளது. குழந்தைகளிடம உள்ள ஊட்டச்சத்துப் பற்றாக் குறையைக் குறைப்பதற்காக அமைச்சகமானது ஊட்டச்சத்து இயக்கம் (POSHAN ABHIYAN) என்பதைத் தொடங்கியுள்ளது. ஊட்டச்சத்து ஆதாரங்களை உருவாக்குதல், ஒருங்கிணைத்தல், ஒன்றாக்குதல் மூலம் இந்த இயக்கம் நடைமுறைப்படுத்தப்படும். இந்தியாவில் பேறுகாலத் தாய்மார்கள்

மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதன் மூலம் ஊட்டச்சத்து இயக்கத்தின் இலக்கை அடைவதற்கு அமைச்சகம் தீவிர மாகச் செயல்பட்டு வருகிறது. குள்ளமாக வளர்தல், ஊட்டச்சத்துக் குறைபாடு, இரத்தசோகை மற்றும் எடை குறைவு போன்ற பிரச்சினைகளோடு குழந்தைகள் பிறப்பதைக் குறைக்க அமைச்சகம் முயற்சிகள் எடுத்துவருகிறது. இதற்காக அமைச்சகமானது துறைகளுக்கு இடையில் ஒருங் கிணைப்பை செய்துள்ளது. சிறப் பான கண்காணிப்பு, சரியான நேரத்தில் நடவடிக்கை எடுக்க எச்சரிக்கை விடுத்தல், ஒத்த அமைச்சகங்களுடன் இணைந்து செயல்பட, வழிகாட்ட மற்றும் கண் காணிக்க மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களை ஊக்குவித்தல் போன்ற செயல்பாடுகளையும் அமைச்சகம் மேற்கொள்கிறது. மேலும் மாநிலங்கள் / யூனியன் பிரசேதங்கள் இலக்குகளை அடையவும் அமைச்சகமானது உந்து சக்தியாக இருக்கிறது. குழந்தைகளுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் ஊட்டச்சத்தின் தேவை எவ்வளவு முக்கியம் என்பதை சமுதாய சுகாதாரச் செயல்பாட்டாளர்கள் (ASHA), துணைதாதியர்கள் (ANM) மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் எடுத்துரைத்து வருகின்றனர்.

16. மாண்புமிகு பிரதம மந்திரி மற்றும் குடிநீர், துப்புரவு அமைச் சகத்தின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது தனது செயல் நடவடிக்கைகளில் ஒன்றாக துப்புரவை இணைத்துக் கொண்டுள்ளது. மேலும் உள்ளேயும் வெளியேயும் துப்புரவுக்காக தீவிர மாகச் செயல்படும் அமைப்பாகவும் அமைச்சகம் மாறியுள்ளது. துப்புரவு என்பது பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்தின் மீது நேரடியான தாக்கத்தை ஏற் படுத்துகிறது. எனவேதான் பச்சிளங் குழந்தை மற்றும் பெண்களின் இறப்பால் ஏற்படும் பிரச்சினைகள் உருவாகின்றன. இதைக் கருத்தில் கொண்டு அமைச்சகமானது பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு சுத்தம் மற்றும் பாதுகாப்பான சூழல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் சிறப்பான ஆரோக்கியம் மற்றும் சுத்தத்தை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

17. சமூகத்தில் நடத்தை மாற்றங் களைக் கொண்டு வருவதில் பெண்கள் செயலூக்கமாகப் பங்காற்ற முடியும். மேலும் குழந்தைகளைச் சமூக வயமாக்கு வதில் பெண்கள் மிக முக்கியமான பங்கை ஆற்றுகிறார்கள். கலாச் சாரம், பாரம்பரியம் மற்றும் வரலாற்றைச் சுமப்பவர்களாக பெண் களும், தங்களது குழந்தைகளின் நடத்தையை உருவாக்குபவர்களாக தாய்மார்களும் கருதப்படுகிறார்கள். அதாவது அவர்கள் குழந்தைகளிடம் கலாச்சாரத்தை உருவாக்கும் திறனைப் பெற்றுள்ளார்கள். எனவே தாய்மார்களுக்கும் குழந்தை களுக்கும் சிறப்பான ஆரோக்கியம் மற்றும் சுகாதாரமான சூழலை கட்டமைத்து தருவதற்கு அமைச்சகம் தீவிரமாகச் செயல்படுகிறது.

18. கலாச்சாரப் பன்முகத்தன்மை கொண்ட நாடாக இந்தியா இருக்கிறது. ஆனால் பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் கருத்துருவாக்கங்கள் கொண்ட மக்கள் ஒத்திசைவாகவும் அமைதியாகவும் வாழ்கின்றனர். இந்தியச் சமுதாயத்தில் அனைத்துப் பகுதிகளிலும் அனைத்துக் கலாச் சாரங்களிலும் பலவகையான புராணக் கதைகளும் கற்பனைக் கதைகளும் உள்ளன. பெரும்பான்மையான விதிமுறைகள் பெண்களுக்கு எதிரான தாகவோ அல்லது பெண்களுக்கு ஆதரவானதாகவோ உள்ளன. எனவே பெண்களும், பெண் குழந்தைகளும் பாதிப்புக்கு ஆளாகிறார்கள். எனவே கொள்கை சார்ந்த நடவடிக்கைகளை உண்மையில் நடைமுறைப்படுத்துவது என்பது இந்தியாவில் ஒரு சவாலாகவே உள்ளது. அதிக அளவு மக்கள் தொகை, பல வகையான கலாச் சாரங்கள் மற்றும் கருத்துரு வாக்கங்களின் பின்னணியில் ஒவ்வொருவரையும் சென்றடைந்து அவர்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்துவது என்பது அமைச் சகத்துக்கு ஒரு சவாலாகவே உள்ளது. பச்சிளங்குழந்தை மற்றும் பெண்கள் இறப்பு விகிதத்தைக் குறைக்கவேண்டும் என்ற இலக்கை அடைவதற்காக அமைச்சகமானது மாநில மற்றும் மாவட்டக் குழுக் களுடன் இணைந்து கவனமாகச் செயலாற்றுகிறது. மேலும் பெண் களுக்கும், குழந்தைகளுக்கும் ஆரோக்கியமான, பாதுகாப்பான, ஆபத்தில்லாத சூழலை உருவாக்கி வழங்குவதிலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் கவனம் செலுத்துகிறது. ●

---

- **ராகேஷ் ஸ்ரீவத்சவா**, செயலாளர், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், புதுதில்லி.

# மகாத்மா காந்தியும் துப்புரவும்: ஒரு மறுபார்வை

- சுதர்சன் ஐயங்கார்

**நா**ன்கு ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவின் 15ஆவது பிரதமராகப் பதவியேற்ற நரேந்திர மோதி, 15.08.2015 அன்று செங்கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியேற்றி தமது முதல் சுதந்திர தின உரை யாற்றிய போது, மகாத்மா காந்திக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இப்படிக் கூறினார்:

“சகோதர சகோதரிகளே 2019ஆம் ஆண்டில் மகாத்மா காந்தியின் 150வது பிறந்தநாள் கொண்டாடப்படும். மகாத்மா காந்திக்கு தூய்மையும், துப் புரவும் மிகவும் பிடித்தமான ஒன் றாகத் திகழ்ந்தன. அதனால், தூய்மை இந்தியா இயக்கத்தை இந்த ஆண்டு அக்டோபர் 2ம் தேதியன்று நான் தொடங்கி வைக் கவுள்ளேன். அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு இந்த இயக்கத்தை இந்தியா முன்னெடுத்துச் செல்லும். அதற்கு முன்பாக இன்றே ஒரு நல்ல தொடக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன். இந்தியாவில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் மாணவிகளுக்காக தனி கழிப்பறைகள் உள்ளிட்ட கழிப்பிட வசதிகள் உரு வாக்கித்தரப்படும் என்பது தான் நான் கூற விரும்பும் செய்தியாகும். இவ்வாறு செய்தால்தான் நமது பெண் குழந்தைகள் பள்ளிப் படிப்பை பாதியில் விட்டு வெளியேற மாட்டார்கள்.

இந்தியக் குடிமகனாகிய நான், 1950ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் தேதி குடியரசு நாளன்று இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டி ருப்பதற்கு ஏற்ப, அனைத்து குடிமக்களுக்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பெற்றுத்தருவதாக ஏற்றுக்கொண்ட உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு செய்யவேண்டிய பணிகள் இன்னும் ஏராளமாக உள் ளன. இந்தியாவில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும், குடிப்பதற்கு ஏற்ற தூய்மையான குடிநீர், போதிய துப்புரவு வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தித்தராத வரையில் நீதி யற்ற, விடுதலை பெறாத, சமத்து வமற்ற சமுதாயமாகவே நாம் தொடர்ந்து பார்க்கப்படுவோம். குடிநீரும், துப்புரவுப்பணிகளும் தான் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகவும் முக்கியமானதாகும். அதற்காக தூய்மை இந்தியாவை நோக்கி முன்னேற வேண்டியது நமது கூட்டுப்பொறுப்பு ஆகும்.

### தூய்மை இந்தியா குறித்த இந்தியா வின் சிந்தனை:

காந்தியடிகள் கனவு கண்ட தூய்மை இந்தியா என்பது கழிப்பறைகளைக் கட்டுவதும், திறந்தவெளியில் மலம் கழிக்காத நாட்டை உருவாக்குவதும் மட்டுமல்ல, காந்தியடிகள் கனவு கண்ட தூய்மை இந்தியாவின் இலட்சி யங்கள் இதைவிடப் பெரியவை என்றாலும், இதுதான் அதற்கான முதல்படி. தூய்மையான, சுத்தமான உடலும், ஆன்மாவும் நிறைந்த தூய்மை இந்தியாவைக் காண மகாத்மா காந்தியடிகள் விரும்பினார். நாம் வாழும் விதத்தையும், நமது சுற்றுப்புறங்களைப் பராமரிக்கும் விதத்தையும் பார்த்து மகாத்மா காந்தி வேதனைபட்டார். மனித மலத்தையும், கழிவுகளையும் அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்ட சமுதாயங்களை நாம் எவ்வாறு கையாண்டோம் என்பதைக்கண்டு காந்தியடிகள் வேதனையடைந்தார். துப்புரவு மற்றும் சுகாதாரம் சார்ந்த விசயங்களில் இந்தியா அறிவியல்பூர்வமற்ற வகையில் முன் னேறி இருப்பதை அவர் உணர்ந்து கொண்டார். இந்தியர்களின் இத்தகைய மனநிலைதான் ஒரு குறிப்பிட்ட பிரிவினரை மலம் மற்றும் கழிவுகளை அகற்றும் கட்டாயத் திற்குத் தள்ளியது என்பது அவரது எண்ணமாகும். இத்தகைய கட்டாயத் திற்குத் தள்ளப்பட்ட சமூகத்தினர் அந்தக் காலத்தில் மக்கள் வாழும் பகுதிகளுக்கு வெளியில் தனியாக வாழும் சூழலுக்குத் தள்ளப்பட்டனர். அங்கு கடுமையான வறுமையிலும், ஆதரவற்ற சூழலிலும், மிகமோசமான உடல்நிலையிலும், மனநிலையிலும் அவர்கள் உழன்று வந்தனர். தூய்மை, துப்புரவு

இவை குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்குடன், மகாத்மா காந்தி துடைப்பத்தை எடுத்துக்கொண்டு வீடு, ஆசிரமம், அதைச் சுற்றியுள்ள பகுதிகள், தெரு, கழிப்பறைகள் ஆகியவற்றைத் தூய்மைப்படுத்தினார். துப்புரவையும், சுகாதாரத்தையும் மேம்படுத்த வேண்டும் என்று குரல்கொடுத்த மகாத்மா காந்தி, அதுவரை மலம் அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சமுதாயத்தினருக்கும் எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளும், பாரபட்சமும், அவமதிக்கும் போக்குகளும் இல்லாமல் மற்ற பிரிவு மக்களுடன் சமத்துவமாக வாழும் நிலையை ஏற்படுத்த வேண்டும் என்ற செயல்திட்டத்தையும் கொண்டிருந்தார். புறத்தூய்மைக்கான அடையாளமாக மட்டுமில்லாமல் நலிவடைந்த மக்களின் அடையாளமாகவும் துடைப்பத்தை காந்தி பயன்படுத்தினார். நலிவடைந்த நிலையிலிருந்த மக்களை முன்னேறிய மக்களாக மாற்றவேண்டும் என்று அறிவுறுத்திய மகாத்மா காந்தி, அதற்கான பயணத்தை தாமே தலைமையேற்று நடத்தினார்.

தூய்மையாக்குவதும், சுத்திகரிப்பதும் மனித உடலையும், சுற்றுச்சூழலையும் மட்டுமே சார்ந்தது அல்ல. மகாத்மா காந்தியடிகளைப் பொறுத்தவரை, ஆன்மாவை சுத்திகரிப்பதுதான் எந்தவொரு மனிதனுக்கும் உயரிய இலட்சியமாக இருக்கவேண்டும் என்று கருதினார். ஓய்வின்றி உண்மையைத் தேடும் வகையில் ஒருவரின் குணாதிசயத்தை கட்டமைப்பதுதான் வாழ்க்கையின் இலட்சியம் என்று காந்தியடிகள் நம்பினார்.

அகிம்சையை ஒரு சக்தியாக மகாத்மா காந்தி வளர்த்தெடுத்தற்குக் காரணமே ஆன்மாவைத் தூய்மைப் படுத்தும் நடைமுறைதான் என்பது குறிப்பிடத்தக்கது. நமது மக்களிடையே கடுமையான நெருக்கடி நிலவுவதை காந்தியடிகள் உணர்ந்தார். மக்களிடையே நிலவிய நெருக்கடி என்பது நம்பிக்கையின்மை தான். நாம் நமது உண்மையான குணத்தை இழந்துவிட்டு, வெள்ளையர்களின் அடிமைகளாக முகஸ்துதி செய்பவர்களாக மாறிவிட்டோம் என்பதுதான் காந்தியடிகளின் எண்ணமாக இருந்தது. மகாத்மா காந்தி தமது வாழ்க்கை முழுவதையும், தம்மையும், தமது ஆன்மாவையும் தூய்மைபடுத்துவதில் மட்டுமே செலவிட்டார். பொதுச்சேவையிலும், சமூக சேவையிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டதன் மூலம் அவர் இதைச் செய்தார். இவ்வாறாக, இந்தியாவை ஒவ்வொரு மனிதரும் உடல்ரீதியாகவும், சமூகரீதியாகவும், இதயரீதியாகவும் தூய்மையுடன் வாழும் தூய்மை நாடாக மாற்றவேண்டும் என்பதுதான் காந்தியடிகளின் எண்ணமாக இருந்தது.



**தென்னாப்பிரிக்காவில் துப்புரவு, சுகாதாரம் சார்ந்த காந்தியடிகளின் பணிகள்:**

மகாத்மா காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தாதா அப்துல்லாவின் தொழில் மற்றும் வணிக நிறுவனத்தில் பணியாற்றுவதற்காகத்தான் இந்தியாவிலிருந்து சென்றார். அங்கு சென்ற சில நாட்களிலேயே வெள்ளையர்கள் உள்ளிட்ட ஐரோப்பிய மக்கள் இந்தியர்களிடம் திமிராகவும், அவமதிக்கும் எண்ணத்துடனும் நடந்துகொள்வதைக் கண்டார். இதை அவரும் அனுபவித்தார். தென்னாப்பிரிக்காவில் முதல் வகுப்பு தொடர் வண்டிப் பெட்டியிலிருந்து அவர் கீழே தள்ளிவிடப்பட்ட நிகழ்வின்போது, இந்தியாவில் தீண்டாமையின் பெயரால் புறக்கணிக்கப்படுவது போன்ற உணர்வை அவர் அனுபவித்தார். இந்தியர்கள் தூய்மையற்ற சூழலில்தான் வாழ்கின்றனர். அவர்களுக்கு சுகாதாரத்தைக் கடைபிடிக்கத் தெரியாது என்று வெள்ளையர்கள் வெளிப்படையாகவே குற்றம்சாட்டினார்கள். அதேபோல் இந்தியர்களும் தங்களது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளவோ

அல்லது தூய்மையும் சுகாதாரமும் நிறைந்த வாழ்க்கை முறைக்கு மாறவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் அவர் உணர்ந்துகொண்டார்.

அதன் பின்னர் தென்னாப்பிரிக்கா வின் நகரங்களிலும், மாநகரங்களிலும் தூய்மையற்ற சூழலில் வாழும் இந்திய மக்களின் மனங்களைக் கவர்வதுதான் காந்தியடிகளின் முதன்மை நோக்கமாக இருந்தது. அவர்களின் மனங்களை வெல்வதன் மூலம் அவர்களைத் துப்புரவும், சுகா தாரமும் நிலவக்கூடிய சூழலுக்கு மாற்றிவிடலாம் என்று காந்தியடிகள் நம்பினார். இந்திய மக்களின் துப்புரவு நடைமுறைகளை மாற்று வதற்காக மகாத்மா காந்தியடிகள் சில உத்திகளை வகுத்து இந்திய மக்களுடன் இணைந்து பணி யாற்றினார். பின்னர் இந்த விசயத்தை உள்ளாட்சி அதிகாரிகளின் கவனத் திற்குக் கொண்டு சென்ற அவர், இந்திய மக்கள் வாழும் பகுதிகளில் துப்புரவு, சுகாதாரக் கட்டமைப்புகளை மேம்படுத்தவேண்டும்; அவற்றை சிறப்பாகப் பராமரிக்கவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தினார். பின்னர் மாநிலஅரசுகள், ஆப்பிரிக்காவில் உள்ள காலனிகளின் செயலாளர் அலுவலகங்கள், இந்தியஅரசு ஆகியவற்றைத் தொடர்புகொண்ட மகாத்மா காந்தியடிகள், இந்தியர்கள் வாழும் பகுதிகளில் துப்புரவு வசதி போதிய அளவில் செய்துதரப்படாதது குறித்து உள்ளாட்சி அதிகாரிகளிடம் பேசும்படி கேட்டுக்கொண்டார். இதன் மூலம், மகாத்மா காந்தி பொது வாழ்வில் தனித்துவமான தலைவராக திகழ்ந்தார்.

### இந்தியாவில் துப்புரவற்ற சூழலை காந்தியடிகள் கண்டார்:

தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பிய மகாத்மா காந்தியடிகள், இந்தியாவில் குறுக்கும் நெடுக்குமாக பயணம் செய்தார். இந்தியாவின் பல பகுதிகளில் துப்புரவற்ற சூழல், தூய்மைக் குறைபாடு, ஆரோக்கியமற்ற செயல்பாடுகள், குப்பைக்கூளங்கள் ஆகியவை நிறைந்திருந்ததை அவர் கண்டார். மகாத்மா காந்தியடிகளும், அவரது குழுவினரும் முதலில் ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதன் வளாகத்தில் தங்கியிருந்தனர். அப்போது பிராமண சமுதாயத்தைச் சேர்ந்த சமையல்காரர்கள், தூய்மை மற்றும் மாசுக் கொள்கையைக் கடைபிடித்ததை அவர் பார்த்தார். அதே நேரத்தில், அவர்கள் துப்புரவற்ற பழக்கவழக்கங்களைக் கடைபிடித்துவந்தனர். அங்கு துப்புரவு ஏற்பாடுகள் மிகவும் மோசமாக இருந்தன. அதைப் பார்த்த காந்தியடிகளும், அவரது குழுவினரும் சாந்திநிகேதனில் உள்ளவர்களைத் தூய்மைப் பணியிலும், உணவு சமைக்கும் பணியிலும் ஈடுபடுத்தினார்கள். மகாத்மா காந்தி ரயில்களில் பயணம் செய்யும்போது மூன்றாம் வகுப்பிலும், கப்பல்களில் பயணம் செய்யும்போது டெக் பகுதியிலும் சாதாரண மக்களுடன் பயணிக்கத் தீர் மானித்தார். ஒருமுறை கப்பலில் டெக் பகுதியில் பயணம் செய்யும்போது, அங்கிருந்த குளியலறை தாங்கிக் கொள்ள முடியாத அளவுக்கு அழுக் காகவும், கழிப்பறைகள் மூக்கைப் பிடித்துக்கொள்ளும் அளவுக்கு நாற்றமடிக்கும் வகையிலும் இருந்ததைப் பதிவு செய்திருக்கிறார். கழிப்பறையைப் பயன்படுத்துவதற்கு சிறுநீர் குளங்களையும், மனிதக் கழிவு மலைகளையும் தாண்டிச் செல்ல வேண்டியிருந்தது. அப்பகுதிகள் கழிவுகளாலும், அவற்றின் துர்நாற்றத்தாலும் நிரம்பியிருந்தன. இதற்குக்காரணம் பயணிகளின் பொறுப்பற்ற பழக்க வழக்கங்கள்தான். அவர்கள் எங்கு அமர்ந்திருந்தார்களோ அங்கேயே எச்சில் துப்பினர். தங்களது சுற்றுப்புறங்களை அசுத்தமாக்கினார்கள். அதேபோல், தொடர்வண்டிப் பயணங்களின் போது நடந்த நிகழ்வுகள் குறித்துப் பதிவுசெய்யும்போது, ''தூய்மை சார்ந்த அடிப்படை சட்டங்கள் கூட நமக்குத் தெரிவதில்லை. தொடர்வண்டியின் தரைத்தளங்கள் பல நேரங்களில் உறங்குவதற்கான இடமாகப் பயன்படுத்தப்படும் என்பதைக்கூட உணராமல், ஆங்காங்கே நாம் எச்சில் துப்பி வைக்கிறோம். தொடர்வண்டி தரைத்தளத்தை நாம் எவ்வாறு பயன் படுத்துகிறோம் என்பதைப் பற்றி யெல்லாம் சிந்திப்பதில்லை. அதன் விளைவு, தொடர்வண்டிப் பெட்டி தாங்க முடியாத அளவுக்கு அசுத்த மாக மாறுகிறது. உயர்வகுப்புப் பயணிகளில் மாணவர்களும் இருந் ததை நான் பார்த்திருக்கிறேன். சில நேரங்களில் அவர்களும் மற்றவர் களைப்போலத்தான் நடந்துகொள் வார்கள். அவர்கள் ஆங்கிலத்தில் பேசுவார்கள். நார்ஃபோக் ஜாக் கெட்டுகளை அணிவார்கள். அதன் மூலம் தாங்கள் பெரிய மனிதர் கள் என்றும், தங்களுக்கு அமர இடம் தரவேண்டியது கட்டாயம் என்றும் கூறி ஆதிக்கம் செலுத்து வார்கள். உங்களிடம் உரையாற்ற எனக்கு வாய்ப்பு கொடுத்ததால் இதுபற்றியெல்லாம் உங்களிடம் தெரிவிக்கிறேன். எனது இதயத்தை நான் திறந்தே வைத்திருக்கிறேன். சுயாட்சியை நோக்கிய நமது பயணத் தின்போது இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் நாம் சரி செய்ய வேண்டும்'' என்று மகாத்மா காந்தி யடிகள் கூறியிருக்கிறார்.

மகாத்மா காந்தி பயணம் செய்த கோயில்களிலும் இதேபோன்ற சூழல்தான் நிலவியது. ஹரித் துவார், ரிஷிகேஷ் கோயில்களுக்குச் சென்றபோது பொதுமக்கள் கங்கை ஆற்றின் கரைகளையும், சாலை களையும் அசுத்தப்படுத்தியிருந்ததை மகாத்மா காந்தி பார்வையிட்டுப் பதிவு செய்திருக்கிறார். கங்கை ஆற்றின் புனித நீரை அசுத்தப் படுத்துவதற்கு கூட அவர்கள் தயங்கியதில்லை. கங்கை ஆற்றின் கரைகளிலும் நடைபாதைகளிலும் பொதுமக்கள் மலம் கழிப்பதைப் பார்த்து மகாத்மா காந்தியடிகள் வேதனையடைந்திருக்கிறார். மதுரா நகரில் உள்ள பிருந்தாவன், பனாரஸில் உள்ள விஸ்வநாதர் ஆலயம், குஜராத்தில் உள்ள தகோர் ஆலயம் ஆகியவற்றிலும் இத்தகைய நிலைமைதான் காணப்படுகிறது. மகாத்மா காந்தியடிகள் பயணம் செய்த மாநகரங்கள், நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றிலும் துப்புரவு, சுகாதாரம் சார்ந்த சூழல் சற்றும் மேம்பட்டதாகத் தெரியவில்லை. அங்கும் இதே போல மோசமாகத்தான் இருந்தது.

குடியிருப்புப் பகுதிகளிலும் நிலைமை அப்படியே தான் இருந் தது. 1916ஆம் ஆண்டு பனாரஸ் நகருக்கு மகாத்மா காந்தியடிகள் சென்றபோது, பழமையான அந்த நகரம் துர்நாற்றம் வீசும் பகுதியாக மரியிருப்பதை உணர்ந்தார். அங் குள்ள குடியிருப்புகளில் வாழும் மக்கள் துப்புரவுச் சட்டங்கள், தூய்மைப் பாரம்பரியங்கள் ஆகிய வற்றை மதிக்காமல் அசுத்தம் செய்வது தான் இதற்குக் காரணம் என்று தெரியவந்தது. அங்குள்ள குடியிருப்புகள் வழியாகச் செல்லும் போது அங்குள்ள கட்டடங்களில் இருந்து சாலையில் செல்பவர்கள் மீது எச்சில் துப்பப்படுவது சாதாரணமான நிகழ்வாக இருந்தது. அப்போதைய மதராஸ் மாநகரத்தில் காணப்பட்ட சுகாதாரமற்ற நடைமுறைகள் குறித் தும், தூய்மைப்பணியில் ஈடுபடும் மக்கள் மீது உயர்சாதியினர் காட்டிய திமிரான போக்கு குறித்தும் மகாத்மா காந்தி குறிப்பிட்டிருக்கிறார். பிகார் மாநிலத்தில் உள்ள புனித நகரமான கயாவில் தான் அவர் மிக மோசமான துப்புரவு, தூய்மைச்சூழலை எதிர் கொண்டார்.

கல்வி நிறுவனங்களிலும், மாநாடுகள் போன்ற பொது நிகழ்ச்சிகளிலும் முதன்முறையாக தூய்மை, துப்புரவு குறித்து மகாத்மா காந்தி பேசத் தொடங்கினார். காந்தியடிகள் இந்தியா திரும்பியதும், அவர் பங்கேற்ற அனைத்து நிகழ்வுகளிலும் முதல் நிகழ்வாக துப்புரவுக்குழுவைத் தான் முதலில் கூட்டுவார். அதில் பங்கேற்கும் அனைத்துத் தலைவர்களும் தற்காலிகக் கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்துவது உட்பட அன்றாடத் துப்புரவுப்பணிகளில் ஈடுபடவேண்டும். பின்னாளில், இந்தியா விடுதலை அடைந்தது வரை அனைத்து காங்கிரஸ் மாநாடு களிலும், காந்தியடிகள் பங்கேற் றாலும், பங்கேற்காவிட்டாலும் இது ஒரு நடைமுறையாகவே மரியது. காந்தியடிகள் வாழ்ந்த ஆசிரமங்களிலும், காந்தியடிகள் நிறுவிய கல்வி நிறுவனங்களிலும் தூய்மைப்பணி என்பது அங்குள்ள அனைவருக்குமான வழக்கமாக மாறியது.

## துப்புரவுப்பணிகளில் காந்தியின் செயல்பாடுகள்:

தூய்மைக்காக சரியான அறிவியலும், பொருத்தமான தொழில் நுட்பமும் தேவைப்பட்டது. அதைத் தான் மகாத்மா காந்தியடிகளும், அவரது ஆசிரம உறுப்பினர்களும் கடைபிடித்தனர். அகமதாபாதில் உள்ள ஆசிரமத்திற்காக மகாத்மா காந்தி உருவாக்கிய விதிகளில், துப்புரவுப் பணிகள் மிகவும் அத்தி யாவசியமானவை மட்டுமின்றி புனிதமான சேவையும் கூட என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், இதை நமது சமுதாயங்கள் செய்ததன் விளைவாக தூய்மைப்பணிகள் பொதுவாக புறக்கணிக்கப்பட்டன. அதனால் தூய்மைச் சூழலை மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளது. எனவே, ஆசிரமத்தின் துப்புரவுப்பணிகளில் வெளியாட்களை சேர்த்துக் கொள்ளக்கூடாது என்பதில் ஆசிரமம் உறுதியாக இருந்தது. ஆசிரம உறுப்பினர்களே தங்களுக் குள் முறைவைத்து துப்புரவுப் பணி முழுவதையும் கவனித்துக் கொண்டனர். ஆசிரமத்தில் புதிதாகச் சேருபவர்களுக்கு முதலில் இந்தப்பணி வழங்கப்பட்டது. காந்தியடிகள் மிகவும் சுறுசுறுப்பான மனிதர்; அவர் வாழ்க்கையின் அனைத்து நிமிடங்களிலும் ஏதேனும் ஒரு பொதுப்பணியைச் செய்தவர். இருந்தபோதிலும், தாம் தங்கியுள்ள இடத்தில் துப்புரவுப் பணிகளில் அவர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். இது தான் நம் அனைவருக்கும் பாடமாகும். நம்மில் பலரும் கழிப்பறையையும், அருகிலுள்ள இடங்களையும் சுத்தப்படுத்தி விட்டு மீதமுள்ள பணிகளை மற்றவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்று கூறி ஒதுங்கி விடுகின்றனர்.

1930களில் வார்தாவில் உள்ள சேவாகரம் ஆசிரமத்தில் இருந்த போதும் கூட, துப்புரவு மீதான அவரது ஆர்வம் தணியவில்லை. அதை ஆசிரம உறுப்பினர்களுக்கான அறி வுரை என்ற பெயரில் பின்வருமாறு விவரித்துள்ளார்:

''ஒவ்வொருவரும் தங்களுக்குரிய பாத்திரங்களைக் கழுவி அவற்றுக்கான இடத்தில் வைக்க வேண்டும். ஆசிரமத்திற்கு வரும் விருந்தினர்களும், பார்வையாளர்களும் தங்களுக்கான தட்டுகள், தண்ணீர் குடிப்பதற்கான குவளைகள், ஸ்பூன்கள், விளக்குகள், படுக்கைவிரிப்புகள், கொசுவலைகள், நாப்கின்கள் ஆகியவற்றை தாங்களே கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவை அனைத்தையும் அவற்றுக்குரிய இடங்களில் வைத்துப் பாதுகாக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தேவைப்படாத குப்பைகள் அனைத்தும் குப்பைத்தொட்டியில் போடப்பட வேண்டும். குடிப்பதற்காக சுடுநீர் பயன்படுத்தப்பட வேண்டும். பானைகளும், சட்டிகளும் இறுதியாக சுடுநீரால் கழுவப்பட வேண்டும். ஆசிரமக் கிணற்றில் உள்ள குடிநீர் குடிப்பதற்குப் பாதுகாப்பானதல்ல. சாலைகளில் எச்சில் துப்புவதோ, முகம் கழுவுவதோ கூடாது. எவரும் நடப்பதற்கு வாய்ப்பில்லாத பகுதிகளில் வேண்டுமானால் முகம் கழுவலாம்.

இயற்கையின் அழைப்புகள் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் தான் கழிக்கப்படவேண்டும். இருவகையான இயற்கையின் அழைப்புகளையும் கழித்த பிறகு சுத்தம் செய்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும். கழிப்பறைகளில் திடக்கழிவை அகற்றுவதற்கான கருவி திரவக்கழிவை அகற்றுவதற்கான கருவியிலிருந்து மாறுபட்டிருக்கவேண்டும். நாம் நமது கைகளை நீரால் கழுவி துணிகளில் துடைக்கவேண்டும். இரவு நேரங்களில் சிறுநீர் கழிக்கும் போது அதன் மீது ஈக்கள் அமருவதைத் தடுக்க அதன் மீது மண் போட்டு மூடவேண்டும். வெளியிலிருந்து பார்க்கும் போது மண்ணைத் தவிர வேறு எதுவும் தெரியாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். கழிப்பறை இருக்கைகளில் அமரும் போது, அது அழுக்காகி விடாமல் தவிர்க்கும் வகையில் கவனமாக அமரவேண்டும். இருட்டாக இருந்தால் அரிக்கேன் விளக்கை எடுத்துச் செல்லவேண்டும். ஈக்களை ஈர்க்கக்கூடிய அனைத்தும் கவனமாக மூடப்படவேண்டும்.

மகாத்மா காந்தி தமது இறுதி மூச்சு வரை இந்த வழக்கத்தைக் கைவிடவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். 1947ஆம் ஆண்டின் இறுதியிலும், 1948ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் மகாத்மா காந்தி கலந்துகொண்ட வழிபாட்டுக்கூட்டங்களில் தூய்மையைக் கடைபிடிக்கவேண்டும், தாங்கள் வாழும் இடங்களைத் துப்புரவாக வைத்துக்கொள்ளவேண்டும்; தனிநபர் தூய்மையைப் பராமரிக்க வேண்டும் என்று பல தருணங்களில் கூறியிருக்கிறார்.

### இந்தியாவில் துப்புரவின் இன்றைய நிலை:

இந்தியாவில் கழிப்பறைகள் கட்டுவது தொடர்பான சூழல் மேம்பட்டிருக்கிறது. அண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய பிரதமர், இந்தியாவில் 2014ஆம் ஆண்டில் 40 விழுக்காடாக இருந்த கழிப்பறைகளின் விகிதம் இப்போது 90 விழுக்காட்டுக்கும் கூடுதலாக அதிகரித்திருக்கிறது என்று கூறினார். 4.5 இலட்சம் கிராமங்களில் கழிப்பறைகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இது குறிப்பிடத்தக்க ஒன்று தான் என்றாலும் தூய்மை, துப்புரவு சார்ந்த பயணத்தில் இது முதல் அடி தான். நமது துப்புரவு இயக்கத்தில் வீடுகளுக்கு கழிப்பறைகளைக் கட்டித்தருதல், ஊரகப் பள்ளிகளுக்கு கழிப்பறைகள் கட்டித் தருதல், திடக்கழிவு மேலாண்மை ஆகியவையும் அடங்கும். இவற்றில் கடைசி இரு அம்சங்களில் நாம் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

தூய்மை இயக்கத்திற்கு அரசு இன்னும் விரிவான வகையில் செயல்படவேண்டும். இந்தியாவில் கழிவுகளைக் கைகளால் அகற்ற தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும், 2017ஆம் ஆண்டில் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டதால் மட்டும் 300க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இந்தியாவில் கழிவுகளை அகற்றும் தொழிலில் 53,236 பேர் ஈடுபட்டிருப்பதாக பல்துறை அமைச்சர்கள் குழு தெரிவித்திருக்கிறது. 2017ஆம் ஆண்டில் 13,000 ஆக இருந்த இந்த எண்ணிக்கை இப்போது நான்கு மடங்கு அதிகரித்துள்ளது. இந்தியாவிலுள்ள 600 மாவட்டங்களில் 121 மாவட்டங்களில் கழிவைக் கைகளால் அகற்றும் பணிகளில் தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர். கைகளால் கழிவுகளை அகற்றும் தொழிலாளர்களை அதிகமாகக் கொண்டிருப்பது தொடர்வண்டித் துறையாகும். ஆனால், தொடர்வண்டித்துறையில் கழிவு நீர்த் தொட்டிகள், கழிவுநீர்க் கால்வாய்கள் ஆகியவற்றைத் தூய்மை செய்யும் தொழிலாளர்கள் இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை. இந்த விஷயத்தில் இந்தியா கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்; கைகளால் கழிவுகளை அகற்றும் வழக்கத்திற்கு முடிவு கட்ட நாம் நம்மை மறுஅர்ப்பணிப்பு செய்து கொள்ளவேண்டும். முழுமையான துப்புரவு இயக்கம் அரசின், சமூகத்தின், குடிமக்களின் இலட்சியமாக இருக்கவேண்டும்.

**தேடலை நம்மை நோக்கி திருப்பு வோம்:**

துப்புரவுத்தன்மையை மேம்படுத்து வதற்காகவும், தீண்டாமையை ஒழிப்பதற்காகவும் மகாத்மா காந்தி மேற்கொண்ட பணிகள், அவர் தனித்தும் சமூகத்துடனும் இணைந்து மேற்கொண்ட சத்தியா கிரகத்தின் அத்தியாவசிய அம்ச மாகும். சத்தியாகிரகம் என்பது சுய சுத்திகரிப்பைக் குறிக்கும். காந்தியடிகளைப் பொறுத்தவரை தெய்வீகப்பயணம் மேற்கொள் வதற்குக் கூட தூய்மையும், துப்புரவும் மிகவும் முக்கியமானவையாகும். சத்தியத்தை நோக்கிய காந்தி யடிகளின் தேடல் அவருக்கு ஒரு புரிதலை ஏற்படுத்தியது. காந்தியடிகளுக்கு ஏற்பட்ட புரிதல் அனைத்து மனிதர்களும், இன்னும் கேட்டால் அனைத்து உயிரினங்களும் கடவுள் என்று அவரால் அழைக் கப்பட்ட உச்சபட்ச உண்மைக்குச் சமம் ஆகும். தம்மையும், சுற்றுச் சூழலையும் தூய்மைப்படுத்துவது தான் சுயசுத்திகரிப்பின் முதல்படி என்று காந்தியடிகள் கருதினார். சுயசுத்திகரிப்பின் இரண்டாம்கட்டம் என்பது, சமுதாயத்தில் தூய்மைப் பணியாளர்களாக அவதிப்பட்டுவரும் தலித்துகளுக்கு எதிராக காலம் காலமாகக் கடைபிடிக்கப்பட்டுவரும் பாகுபாடுகளை விட்டொழிப்பது ஆகும். பல நூற்றாண்டுகளாக தலித்துகளுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதியை ஒவ்வொரு சாதி இந்துவும் முதலில் உணரவேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினார். அடுத்தக்கட்டமாக தலித்துகளுக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஒப்புக் கொண்டு, அதற்காக வருந்துவது ஆகும். நிறைவாக தீண்டாமையை ஒழித்து, தலித்துகளின் நலன்களை மேம்படுத்துவதற்கு அனைத்து சாதி இந்துகளும் உதவவேண்டும் என்று மகாத்மா காந்தி வலியுறுத்தினார்.

மகாத்மா காந்தி தான் தனிநபர் சுகாதாரம், கிராம மற்றும் நகர்ப்புற துப்புரவு ஆகியவற்றை ஆக்கப் பூர்வமான திட்டமாக அறிமுகப் படுத்தினார். தீண்டாமை ஒழிப்பு என்பது ஆக்கப்பூர்வமான திட்டம் மட்டுமின்றி, அனைத்து சத்தியாகிரகிகளும் கடைபிடிக்க வேண்டிய 11 சபதங்களுள் ஒன்றாகும். இந்தியாவில் தூய்மை மற்றும் துப்புரவுச் சூழல் இன்னும் பல சீர்திருத்தங்களையும், மேம்பாட்டையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. காந்தியின் அழைப்புகளுக்கு நாம் முழுமையாக முகம் கொடுக்கவில்லை. சமூகவியலை நன்றாக அறிந்திருந்த காந்தியடிகள், துப்புரவுத்தன்மையில் கண்ணியத்தை உருவாக்கி, அதன் மூலம் காலம் காலமாக துப்புரவுப்பணியில் ஈடுபட்டுள்ள பாரம்பரிய துப்புரவுப் பணி யாளர்களுக்கு கண்ணியத்தை ஏற்படுத்த முயன்றார். இந்திய விடுதலைக்குப் பிறகு தனிநபர் மீதான கவனத்தையும், தனிநபர் குறித்த விழிப்புணர்வுக் கல்வியையும் நாம் மறந்துவிட்டோம். அதற்கு மாறாக, அனைத்துப் பொறுப்புகளையும் அரசுகள் ஏற்றுக்கொண்டு, தூய்மைப் பிரச்சாரங்களை திட்டங்களாக மாற்றிவிட்டன. அந்தத் திட்டங்கள் இலக்குகளாகவும், அமைப்புகளாகவும், எண்களாகவும் மாறிவிட்டன. காந்தியடிகள் துப்புரவுக்கல்வியை வலியுறுத் தினார். இந்தியாவிலுள்ள பெரும் பான்மையான நமது மக்களுக்கு கழிப்பறைப் பயிற்சியும், தூய்மை மற்றும் துப்புரவுக் கல்வியுமே தேவைப்படுகின்றன.

மக்களாகிய நாம் கூடுதல் பொறுப்புடன் செயல்பட இன்னும் தொடங்கவில்லை. அறியாமையும், பொறுப்பற்ற தன்மை கொண்டவர்களாகவும், அசுத்தம் மற்றும் அழுக்கான பழக்கவழக்கங்களைக் கொண்டவர் களாகவும் மக்கள் தொடர்ந்து இருந்து வருகின்றனர். நாம் நமது கழிப்பறைகளை அசுத்தமாகவும், சுற்றுப்புறங்களை நாற்றமெடுக்கும் வகையிலும், பேருந்து, தொடர் வண்டிகள், கப்பல்கள் உள்ளிட்ட பொது இடங்களில் குப்பைகளைப் போட்டு, அசுத்தமாக வைத்திருப் பவர்களாகவும் தான் இருக்கிறோம். தூய்மையான இந்தியா என்பது நமக்கு இன்னும் கனவாகவே உள் ளது. அதை எட்ட நாம் இன்னும் கடுமையாக உழைத்தாக வேண்டும்.

ஒரு சமுதாயம் என்ற முறையில் நாம் தொடந்து பாகுபாடுகளைக் காட்டுவதுடன் நுட்பமான வழிகளில் தீண்டாமையையும் கடைபிடித்துக் கொண்டு தான் இருக்கிறோம். சாதி என்ற சாபம் இன்னும் விலகவில்லை. நமது மனங்கள் இன்னும் தூய்மை அடையவில்லை. சுய ஒழுங்கு, ஆட்சிநிர்வாகம் ஆகியவற்றை நாம் இன்னும் முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. அரசியல் மற்றும் பொதுவாழ்க்கையில் உள்ளவர்கள் தூய்மையாக இல்லை.

தேடலை நமது மனதுக்குள் செலுத்தி மேம்படுத்துவதன் மூலம் மகாத்மா காந்திக்கு மரியாதை செலுத்தவும், தங்களுக்கும், சமுதா யத்துக்கும் பொறுப்புள்ளவராகவும் நடந்து கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. ●

---

**சுதர்சன் ஐயங்கார்**, முன்னாள் துணை வேந்தர், குஜராத் வித்யா பீடம், அகமதாபாத்.

# இந்திய ரயில்வேயில் சுகாதாரத்தை மேம்படுத்தல் எண்ணமும் நிகழ்வும்

- அலோக்குமார் திவாரி

பெரும்பாலான மக்கள் பயணிப்பதிலும், பொருள்களை ஏற்றிச் செல்வதிலும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ப மிகவும் திறமையானதாக இருப்பது ரயில் போக்குவரத்து. வேகமாக வளர்ந்துவரும் மிகப்பெரிய அளவிலான மக்கள் தொகையும் நாட்டின் பல்வேறு பகுதிகளை இணைக்க வேண்டிய கட்டாயமும் கொண்டிருக்கும் இந்திய ரயில்வே சுற்றுச்சூழலுக்கு மாசு அதிகம் ஏற்படுத்தாத வகையில் செயல்பட்டு வருகிறது.

அக்டோபர் 2, 2019இல் மகாத்மா காந்தியின் 150வது பிறந்த ஆண்டு விழா கொண்டாடும் நேரத்தில் முற்றிலும் சுத்தமான இந்தியா என்ற நிலைமையை நாம் அடைவதற்காக, அன்னாரின் 145வது பிறந்த ஆண்டுவிழா கொண்டாடப்பட்ட அக்டோபர் 2, 2014இல் இந்திய அரசு "சுத்தமான இந்தியா இயக்கம்" என்ற திட்டத்தைத் துவக்கியது. இதன் அடிப்படையில், ரயில்வே அமைச்சகம், எல்லா ரயில் நிலையங்களிலும், தொடர் வண்டிகளிலும் சுத்தத்தை மேம்படுத்த "சுத்தமான ரயில்வே, சுத்தமான பாரதம்" என்ற திட்டத்தைத் துவக்கியது.

இந்திய ரயில்வேயில் 8700க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்கள் உள்ளன. தினமும் 13000க்கும் மேற்பட்ட ரயில்கள் ஓடுகின்றன. இவ்வளவு பெரிய அளவிலான ரயில்நிலையங்களையும், தொடர்வண்டிகளையும் சுத்தமாக வைத்திருந்து பராமரிப்பது மிகப்பெரிய பணியாகும் ரயில் நிலையங்களில் மிக அதிக அளவிலான மக்கள் நடமாட்டமும் கட்டுக்கடங்காத பயன்பாடும், பயணிகளின் தனிப்பட்ட பழக்கவழக்கங்களும், குறிப்பாக தொடர்வண்டிகளிலும், மிகப்பெரிய ரயில் நிலையங்களில் பல மணி நேரம் மக்கள் காத்திருப்பதும் சுத்தம் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படக் காரணமாகின்றன..

"சுத்தமான ரயில்வே, சுத்தமான பாரதம்" என்ற இயக்கத்தின் கீழ் ரயில்வே அமைச்சகம், கீழ்க்கண்ட பணிகளைத்தவிர மேலும் பலவற்றையும் மேற்கொண்டுள்ளது: (1) பெரிய ரயில் நிலையங்களை சுத்தப்படுத்துவதற்கு வெளி நிறுவனங்களைப் பயன்படுத்துதல். (2) எல்லா நடைமேடைகளையும் மேம்படுத்தி, அவற்றை இயந்திரங்கள் மூலம் சுத்தப்படுத்துதல். (3) ஒவ்வொரு கழிவுக்கும் ஏற்ற வகையில் தனித்தனியாக குப்பைத் தொட்டிகளை வைத்தல். (4) சுத்தப்படுத்துவதைக் கண்காணிக்க கண்காணிப்பு காமிராக்களை அமைத்தல். (5) பயணிகள் தொடர் வண்டியில் உயிரிக் கழிவறைகளை அமைத்தல். (6) வலைதளங்கள் மூலமும், கைபேசிச் சேவைகள் மூலமாகவும் மக்களிடமிருந்து குறைகளையும், கருத்துக்களையும் பெறுவது. (7) ரயில்நிலையங்களில் காசு கொடுத்து பயன்படுத்தும் கழிவறைகளை அமைத்தல். (8) குறிப்பிட்ட சில தொடர் வண்டிகளில் சுத்தம் செய்யும் குழு அமைக்கப்பட்டுள்ளது. "எங்கள் பெட்டியை சுத்தம் செய்யுங்கள், பெட்டியின் நண்பன்" ஆகிய செயலிகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. (9) டுவிட்டர் மூலம் பொதுமக்கள் குறைதீர்க்கும் செயல்முறை முதன்முறையாக 24 மணி நேரமும் வழங்கப்பட்டு, பயணிகளுக்கு மருத்துவ, பாதுகாப்பு மற்றும் பிற அவசர உதவிகள் வழங்கப்பட்டுவருகிறது.

தொடர்வண்டியை சுத்தப் படுத்தும் ரயில்நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் வழியே செல்லும் தொடர்வண்டிகளை சுத்தப்படுத்தும் முறை சில ரயில்நிலையங்களில் அமைக்கப் பட்டுள்ளது. தற்போது இப்படிப்பட்ட சேவை 39 ரயில் நிலையங்களில் உள்ளன.

இது அல்லாமல், தொடர்வண்டிகளிலும், ரயில்நிலையங்களிலும் தூய்மை எப்போதும் நிலவக்கூடிய துப்புரவு மேம்பாட்டை அடைவதற்கு பயணிகளிடையே விழிப்புணர்வு அளிக்கப்பட்டுள்ளது.

துப்புரவு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதன் பலன்களைக் கண்டறிய 407 பெரிய ரயில் நிலையங்களில்

வெளிநிறுவனங்கள் மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பிட்டுள்ள தர மற்றும் பிற செயல்பாடுகளின் அளவுகளைச் சார்ந்து இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்படிப்பட்ட சேவைகளை வழங்கும் வெளிநிறுவனங்களைத் தேர்ந்தெடுக்க வெளிப்படையான நேர்மையான போட்டிமிகு ஏல முறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. சில பெரிய ரயில்நிலையங்களில் இயந்திரங்களைக் கொண்டு சுத்தம் செய்வதற்கும், தரமான பொருள்களைப் பயன்படுத்துவதற்கும் ஒருங்கிணைந்த துப்புரவு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. சேவை ஒப்பந்தங்களை திறம்பட செயல்படுத்துவதற்கு ஏதுவான பொது நடைமுறைகள் உருவாக்கப்பட்டு எல்லா ரயில் வட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. முன்பு இருந்த பொதுவான ஒப்பந்த செயல் முறைகள், ரயில்வே சார்ந்த சொத்துக்களை உருவாக்கி அவைகளை செயல்படுத்துவதற்கான அமைப்பாக இருந்தது. ஆகவே, சுத்தம் சாா்ந்த சேவை ஒப்பந்தங்களை செயல்படுத்துவதற்கு அது போதுமானதாக இல்லை.

### ஜான்சி ரயில் நிலைய நடைமேடையும், வரவேற்பு முகப்புத் தோற்றமும்

ரயில்நிலையங்கள், தொடர்வண்டிகள் நிறுத்துமனைகள் மற்றும் தொடர்வண்டிகள் ஆகியவற்றைத் துப்புரவு செய்யும் ஒப்பந்தங்கள் பெறும் விண்ணப்பங்களில் 10 சதவிகித மதிப்பு அவர்கள் பயன்படுத்தும் கருவிகளுக்கும், பொருள்களுக்கும் அளிக்கப்பட்டு ஒப்பந்ததாரர்களின் செயல்பாடு மதிப்பிடப்பட்டு, அவர்களுக்கு மாதத்தவணையில் பணம் வழங்கப்படுகிறது.

ஒப்பந்தம் வழங்குமுறையில் இப்போது இரண்டுகட்ட ஏலம் நடைபெறுகிறது. குறைந்தபட்ச தகுதிகள் அடிப்படை மட்டுமல்லாமல், தொழில்நுட்ப மதிப்பீட்டில் 70 சதவிகிதம் மதிப்பெண் பெறுபவர்களின் தொகை சம்மந்தப்பட்ட ஏலப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும். மின்னணு வருகைப்பதிவேடு பயனீட்டாளர்கள் கருத்துக்கு ஏற்ற பணப்பட்டுவாடா மற்றும் துப்புரவுப்பணி செய்பவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்கும் கட்டாயம் ஆகியவை இந்தப் புதிய ஒப்பந்தங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தத் தரமதிப்பீட்டிலான படிவத்தின்படி வட்டார ரயில்வே அமைப்புகள் ஏலத்தை நடத்துகின்றன. சேவைத்தேவைகளுக்கு ஏற்ப திறன் வளர்க்க களப்பணியாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இது அல்லாமல், பயணிகளிடமிருந்து துப்புரவு சேவை சிறப்பாக இல்லாதது பற்றி புகார் வரும்போது ஒப்பந்தக்காரருக்கு அபராதங்கள் விதிக்கப்படுகின்றன.

ரயில்வே நிலையங்களில் காசு கொடுத்துப் பயன்படுத்தும் கழிவறைகள் அதிக அளவில் கட்டப்பட்டுள்ளன. இந்திய ரயில்வே அமைப்புகளில் துப்புரவை மாசுபடுத்துபவர்களுக்கு விதிகள், அபராதம், செயல்முறைகள் 2018இன்படி நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. பெரிய ரயில் நிலையங்களில் துப்புரவுப் பணிகளைக் கண்காணிக்க, கேமிராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டார ரயில் அமைப்புகளிலும் துப்புரவு வாரங்கள் அனுசரிக்கப்பட்டு தூய்மை பராமரிக்கப்படுகிறது. ரயில்வே நிர்வாகத்தின் பல அமைப்புகளிலும் இந்தத் தூய்மை வாரங்கள் கடைபிடிக்கப்படுகின்றன. தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளும் இந்த இயக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. எல்லா ரயில் பயணிகளிடமும் சுத்தம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்த சமூக வலைதளங்கள், ஒலி ஒளிபரப்பு அமைப்புகள் மற்றும் பொது அறிவிப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. 2017-18ஆம் ஆண்டில் சுத்தம் மற்றும் சுகாதார வசதிகளுக்காக ரூ.2522 கோடி செலவிடப்பட்டது. பயனாளிகளோடு சிறப்பான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள ரயில்வே அமைச்சகத்தின் டுவிட்டர் முகவரியான Ministry of Railways @ RailMinIndia முகநூல் முகவரியான "Ministry of Railways – India", வட்டார மற்றும் டிவிஷனல் ரயில்வே மேனேஜர்களின் டுவிட்டர் மூலமாகவும் தொடர்பு கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதனால், பயணிகள் உடனுக்குடன் தங்களுடைய குறைகளை அதிகாரிகளுக்குத் தெரிவிக்க முடிகிறது.

பயணிகள் தற்போது டுவிட்டர் முகநூல் வழியாக தங்களுடைய குறைகளையும், பிரச்சினைகளையும் பெருமளவு பயன்படுத்துவதால் சமூக ஊடகங்களின் பயன்களை அவர்கள் முழுவதுமாகப் பெறுகிறார்கள். பயணிகள் பயணிக்கும்போது உடனடியாக அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளமுடிகிறது. இந்த வசதி முன்பு இருந்ததில்லை.

பயணிகளுடனான இந்தத் தொடர்பு கீழ்க்கண்ட முறையில் செய்யப்படுகிறது.

- டுவிட்டர், முகநூலில் வரும் பதிவுகளைக் கண்காணிக்கும்



ஜான்சி ரயில் நிலைய நடைமேடையும், வரவேற்பு முகப்புத் தோற்றமும்.

அதிகாரி உடனடியாக அவற்றை சம்மந்தப்பட்ட பகுதி, வட்டார அல்லது ரயில்வே தலைமை இயக்குநரகத்துக்கு அனுப்புவார்.

- குறைகள் சார்ந்த பதிவுகளைப் பெறும் அலுவலர் உடனடியாக குறைசார்ந்த நிவாரணப்பணிகளை செய்வதற்கு முடுக்கிவிடுகிறார். குறைதீர்க்கப்பட்டவுடன் இந்த அதிகாரி குறை தெரிவித்தவருக்கு தகவல் அனுப்புகிறார்.
- இந்த நடவடிக்கைகள் உடனுக்கு டன் செய்யப்படுகின்றன.

இது அல்லாமல் "என் பெட்டியை சுத்தம் செய்" முறையின்கீழ் 138 என்ற சேவைக்கும் தெரிவிக்கலாம் அல்லது பயணியின் பிஎன்ஆர் எண்ணை 58888 என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் செய்யலாம்.

இது அல்லாமல், வலைதளம் மூல மாகவும், பயணிகள் தங்களுடைய குறைகளைத் தெரிவிக்கலாம்.

25.9.16இல் துவக்கப்பட்ட வெட்ட வெளியில் மலஜலம் கழிப்பதற்கு எதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரங் களிலும் இந்திய ரயில்வே தீவிரமாகக் கலந்துகொண்டுள்ளது. உயிரிக் கழிவறைத் தொழில்நுட்பத்தை இந்தியன் ரயில்வே மற்றும் பாது காப்புத்துறை ஆய்வு மற்றும் மேம்பாட்டுத்துறைகள் இணைந்து உருவாக்கியுள்ளன. சுற்றுச் சுழலுக்கு உகந்த இந்த மலி வான சிறந்த தொழில்நுட்பம் உலக ரயில்வே நிறுவனங்களில் இந்தியாவில்தான் முதன்முறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் பயன்படுத்தப்படும் உயிரியின் தன்மை பற்றி பாதுகாப்புத்துறை ஆய்வு மற்றும் மேம்பாட்டு நிறுவனம், சியாச்சின் பனியாறு உள்ளிட்ட பலவகையான பருவ நிலைகளில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொழில்நுட்பத்தின் மிகப்பெரிய பயன் உயிரி, மனிதக் கழிவுகளை நீராகவும், உயிரி எரிவாயுவாயாகவும் பிரிக்கிறது. வாயு வளிமண்டலத்தில் கலக்கிறது. மருந்து கலந்த தண்ணீர் ரயில்பாதையில் விடப்படுகிறது. மனிதக்கழிவுகள் ரயில் பாதையில் விழாததால் பாதையும், ரயில் நிலை யங்களும் சுத்தமாக இருக்கும். இந்த உயிரிக்கழிவறைகளை சரியாகப் பயன்படுத்த வட்டார ரயில் நிர்வாகங்கள் ரயில் பெட்டிகளில் ஸ்டிக்கர்களை ஒட்டியும், ஒலி, ஒளி விளம்பரங்கள் செய்தும், மாதிரி உயிரிக்கழிவறையை காட்சி யாக வைத்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

ஜனவரி 2011இல் இந்தியாவில் முதல் முறையாக குவாலியர் வாரணாசிபுந்தேல்கன்டு விரைவு ரயில்வண்டியில் இந்த உயிரிக் கழிவறை அறிமுகப்படுத்தப்பட்டது. பயணிகளிடமிருந்து கிடைத்த நல்ல வரவேற்பை அடுத்து இது பல தொடர்வண்டிகளில் அமைக்கப் பட்டது. 2014க்கு பிறகு, இதன் வேகம், அதிகரித்து மார்ச் 2019க்குள் எல்லா ரயில் பெட்டிகளிலும் உயிரிக்கழிவறை பொருத்தப்பட உள்ளது. 27 ரயில் வழித்தடங்களில் தொடர்வண்டியிலிருந்து மனிதக் கழிவு விழாத நிலையில் அவை பசுமை ரயில்பகுதியாக அறி விக்கப் பட்டுள்ளன. இந்த வழித்தடங்களில் செல்லும் எல்லா தொடர்வண்டிகளிலும் 100 சதவிகிதம் உயிரிக்கழிவறைகள் பொருத்தப்பட்டுள்ளன.

ரயில் வண்டிகளில் உள்ள கழிவறைகள் சுத்தமாகவும், சிறப்

பாகவும் செயல்படவும் தண்ணீர்ப் பயன்பாட்டைக் குறைக்கவும், இவைகளில் உயிரி உறிஞ்சு கழி வறைகள் சோதனை அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. இது, விமா னங்களில் உள்ள கழிவறைகளைப் போல இருக்கும். கழிவறைக்குக் கீழே கழிவுகளை உருமாற்றும் உயிரித்தொட்டியும் இருக்கும். மனிதக்கழிவு இந்த தொட்டிகளிலேயே உருமாறுகிறது.

இது அல்லாமல், ரயில் நிலை யங்களில் இயந்திரங்கள் மூலம் சுத்தம் செய்யும் வசதியும், தொடர் வண்டிகளிலேயே சுத்தம் செய்யும் உள்கட்டமைப்பும் 1000 வண்டிகளில் அமைக்கப்பட்டுள்ளன. ஏசி மற்றும் உயர்தர வகுப்புகளில் அளிக்கப்படும் படுக்கை விரிப்புகளை சலவை செய்ய, சலவை இயந்திரக்கூடங்கள் அமைக்கப்படுகின்றன.

சுத்தம் சார்ந்த பெரிய மாற்றங் களை ஏற்படுத்த திடக்கழிவு மேலாண்மை மிக முக்கியமான தாகும். திடக்கழிவு மேலாண்மையில் கழிவுகளை உயிரி மாற்றம் அடைபவை (ஈரக்கழிவுகள்), உயிரி மாற்றம் அடையாதவை (காய்ந்த கழிவுகள்), ஆபத்தான கழிவுகள் என்று மூன்றாக பிரிக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில், ரயில் முனையங்களில் பெறப் படும் திடக்கழிவுகளை சுற்று சூழலுக்கு உகந்தவாறு மாற்றவும் அவற்றிலிருந்து எரிசக்தியை உற்பத்தி செய்யவும் ஒரு முன்மாதிரித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை, ஜெய்பூர் மற்றும் புதுடெல்லியில் நிறுவப்பட்டு, உயிரி மாற்றம் அடையும் திடக் கழிவுகள் மூலம் எரிசக்தியை உற்பத்தி செய்யும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு, உற்பத்தி செய்யப்படும் எரிசக்தி ரயில் முனையங்களிலும், அந்தப் பகுதியிலும் பயன்படுத்தப்படும்.

2016இல் முதன்முறையாக 407 யு1 மற்றும் யு பிரிவு ரயில் நிலையங்களில் சுத்தம் சார்ந்த தணிக்கை வெளிநிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வுகள், 2017 மற்றும் 2018லும் மேற்கொள்ளப்பட்டன. இதைப்போலவே, 210 முக்கியமான தொடர்வண்டிகளின் சுத்தம் சார்ந்த நிலையும் தற்போது தணிக்கை செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட "சுத்தமான ரயில்வே, சுத்தமான பாரதம்" எந்த அளவு செயல்படுகிறது என்ற தணிக்கையின் மூலம் ரயில் நிலையங்களில் மிகச்சிறந்த அளவில் சுத்தமான சூழ்நிலை நிலவுவது அறியப்பட்டுள்ளது. இது ரயில்வே பணியாளர்கள் மற்றும் பயணிகளின் கூட்டு ஒத்துழைப்பால் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. பயணிகள் நடந்துகொள்ளும் முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் சுத்தமான இந்தியா என்ற நம் கனவு நனவாகும் நிலைமை மிகுந்துள்ளது. 2017இல் இருந்ததைவிட இந்த ஆண்டு, மேற்சொல்லப்பட்ட 407, யு1 மற்றும் யு பிரிவு ரயில் நிலையங்களில் சுத்தத்தின் நிலைமை 17.6 சதவிகிதம் உயர்ந்ததைக் காணமுடிகிறது. சுத்தம் சார்ந்த இந்த நிலைமைக்கான வெற்றி கரமான காரணங்கள் பின்வருமாறு :

1. பிளாஸ்டிக் பாட்டில்களை நசுக்கும் கழிவுகளால் பிளாஸ்டிக்கழிவுகள் குறைக்கப்பட்டுள்ளன.
2. ரயில் நிலையங்களில் சானிடரி நாப்கின்கள் வழங்கு இயந்திரங்கள் மூலம் தனிநபர் சுகாதாரம் உயர்ந்துள்ளது.
3. பெரிய ரயில்நிலையங்களில் வெளிநிறுவனங்கள் மூலம் சுத்தம் செய்யும் ஏற்பாடு அமைக்கப் பட்டுள்ளது.
4. பள்ளிகள், தனியார் தொண்டு நிறுவனங்கள், சமூகஅமைப்புகள் மூலம் விழிப்புணர்வு இயக்கம் துவக்கப்பட்டுள்ளது.

ரயில் பெட்டிகளில் கரப்பான் பூச்சிகள் மற்றும் பிற பூச்சிகளை ஒழிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட நிறு வனங்கள் மூலம் தெளிப்பான் சுத்தம் கீழ்க்கண்ட முறையில் மேற்கொள்ளப்படுகிறது:

- ஏசி பெட்டிகள் மற்றும் உணவு தயாரிப்பு வழங்குபெட்டிகள் : 15 நாட்களுக்கு ஒருமுறை.
- பதிவு செய்யப்பட்ட ஏசி அல்லாத பெட்டிகள் 30 நாட்களுக்கு ஒரு முறை.
- பதிவு செய்யப்படாத ஏசி அல்லாத பெட்டிகள் - 60 நாட்களுக்கு ஒரு முறை.

பயணிகளுக்கு பாதுகாப்பான, சுத்தமான, சுகாதாரமான போக்கு வரத்தை அளிப்பது தன்னுடைய கடமை என்று ரயில்வே நிர்வாகம் உணருகிறது. இதை மேற்கொள்ள பயணிகளின் முழு ஒத்துழைப்பு தேவை.

ரயில்வே பொருள்களைப் பாழ் செய்வதும், தவறாகப் பயன்படுத்து வதும் நடைபெறுகிறது. அவற்றைப் புதுப்பிக்க பெரும்பணமும், முயற்சி களும் தேவைப்படுகின்றன. ஆகவே "சுத்தமான ரயில்வே சுத்தமான பாரதம்" இதனை உருவாக்க ரயில்வே நிர்வாகம் எல்லோருடைய ஒத்துழைப்பையும் நாடுகிறது. ●

– **அலோக்குமார் திவாரி,** முதன்மை செயல் இயக்குநர், ரயில்வே வாரியம்.

# தூய்மை இந்தியா இயக்கத்தை நனவாக்கும் முயற்சியில் கேந்திரிய வித்யாலயா சங்கதன்

- சந்தோஷ்குமார் மால்

பகவத் கீதையின் 13ஆவது அத்தியாயத்தில், ஒரு மனிதன் பரிணாம வளர்ச்சியடைய வேண்டுமென்றால், அதற்காக அவன் கடைபிடிக்க வேண்டிய மாண்புகளில் ஒன்று தூய்மை என்று விளக்கப்பட்டிருக்கிறது. மனதிற்குள் தூய்மை, போதும் என்ற உணர்வு, புலன்களை அடக்கி ஆள்வதில் வெற்றி, தற்சார்பை அடைவதற்கான திறன் ஆகியவற்றை தூய்மை என்பது வழங்குகிறது. உடல்நலன், மனநலன், ஆன்ம நலன் ஆகியவற்றை அடைவதற்கு அவசியமான அகத்தூய்மை, புறத் தூய்மைக்கான அழுத்தத்தை நமது வளமான கலாச்சாரமும், மாண்புகளும் சேர்ந்த அமைப்பு உருவாக்கியுள்ளது. நாட்டு மக்களின் ஆரோக்கியம்தான் நாட்டின் ஆரோக்கியத்தைத் தீர்மானிக்கிறது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. தனி நபர்களின் ஆரோக்கியத்திற்குப் பங்களிக்கும் முக்கியமான அம்சங்களில் ஒன்று தூய்மை என்பது உண்மையாகும். அரசால் ஏற்படுத்தப்படும் தூய்மை இயக்கங்களில் மக்கள் பங்கேற்று அதை ஒரு உன்னதமான இயக்கமாக மாற்றாத பட்சத்தில், அந்த இயக்கம் எதிர்பார்த்த பயன்களை அளிக்காது. இந்தியப் பிரதமரால் 2.10.2014 அன்று அனைவருக்குமான இயக்கமாக அறிவிக்கப்பட்ட தூய்மை இந்தியா இயக்கம், இப்போது அனைத்து வயதுப் பிரிவினர், அனைத்து விதமான பின்னணிகள் மற்றும் சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் மிகப்பெரிய பங்களிப்புடன் நனவாக மாறி வருகிறது.

வேலைவாய்ப்பு தவிர, இந்தியக் கல்வி முறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று ஒவ்வொரு குழந்தையும் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களுடனும், நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கான முழுத் திறனை அடைவதுதான். நிகழ் கால உலகிற்கு ஏற்ற வகையில் தங்களை மாற்றிக்கொள்வதற்கு மட்டுமின்றி, எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளும் அளவுக்கு தயாராவதற்கும் கல்வி மாணவச் செல்வங்களுக்கு உதவுகிறது. வளரும் வயதில் நமது வளமான கலாச்சார, மாண்பு அமைப்புகளை குழந்தைகள் அறிந்துகொள்வதன் மூலம், அவர்கள் நமது பண்பாட்டின் வேர்களுடன் தொடர்புகொள்ள முடிகிறது. அது மட்டுமின்றி, கற்றுத்தர முடியாத அதே நேரத்தில், அறிந்துகொள்ளக்கூடிய மாண்புகளை அவர்களால் அறிந்து கொள்ளமுடிகிறது. அத்தகைய மாண்புகள் கடைபிடிக்கப்படும் சூழல் மற்றும் சுற்றுப்புறங்களை அனுபவிப்பதன் மூலமும், கலந்துரையாடுவதன் மூலமும்தான் மாணவர்களின் மனதில் ஆரோக்கியமான, சமநிலையான சமூக மயமாக்கலை ஏற்படுத்த முடியும்.

இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் 1,190க்கும் அதிகமான பள்ளிகளைக் கொண்டுள்ள கேந்திரிய வித்யாலயா சங்கதன் அமைப்பு அனைத்துத் தரப்பைச் சேர்ந்த குழந்தைகளுக்கும், 1 முதல் 12 வரையிலான வகுப்புகளில் தரமான கல்வி வழங்கும் அமைப்பாகத் திகழ்கிறது. குழந்தைகளின் ஆரோக்கியமான, சமநிலையான வளர்ச்சிக்காக அவர்களை நமது வளமிக்க மாண்பமைப்புடன் இணைப்பதற்கு கேந்திரிய வித்யாலயா சங்கதன் எப்போதும் முக்கியத்துவம் அளிக்கிறது. பேரணிகள், போட்டிகள், பாரத சாரணர் சங்க நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் தூய்மை மற்றும் தனிநபர் தூய்மை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான பல்வேறு சமூக நடவடிக்கைகளை கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் மேற்கொண்டு வருகின்றன. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரின் ஈடுபாட்டுடன் பல்வேறு தளங்கள், திட்டங்கள் ஆகியவற்றின் மூலமாக சமூகத்தின் தூய்மைத்தூதர்களாக குழந்தைகளை கேந்திரிய வித்யாலயா சங்கதன் உருவாக்கியுள்ளது.

தூய்மை இயக்கத்தைப் பள்ளியின் அடிப்படை செயல்பாடுகளில் ஒன்றாக மாற்றியிருப்பதன் மூலம், அதை ஒரு கற்றல் நடவடிக்கையாக கேந்திரிய வித்யாலயா சங்கதன் மாற்றியிருக்கிறது. அதன் விவரங்கள் வருமாறு:

- தூய்மை என்பது பள்ளி சார்ந்த உணர்வுகளில் ஒன்றாக மாற்றப்பட்டிருக்கிறது.

- பல்வேறு வகையான நிகழ்ச்சிகளை நடத்துதல், திரைக்காட்சிகள், ஓவியம் வரைதல், கட்டுரை எழுதும் போட்டிகள், நாடகங்கள், பரப்புரைகள் போன்றவற்றின் ஓர் அங்கமாக தூய்மை இயக்கத்தை பள்ளிகள் அன்றாடம் கற்பிக் கின்றன. இது ஒருநாள் மட்டும் நடைபெறும் நிகழ்வாக அல்லாமல், தொடர்ந்து நடைபெறும் நிகழ்வாக மாறியிருக்கிறது.

- சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை தங்களது குடும்பத் தினருக்கும் அக்கம் பக்கத் தினருக்கும் மாணவர்கள் கொண்டு செல்கின்றனர். அதன் பயனாக பள்ளிகளின் சார்பில் நடத்தப்படும் தூய்மைத் திட்டங்களில் உள்ளூர் சமுதாயத்தின் பங்களிப்பையும் காணமுடிகிறது.

- தூய்மை இயக்கத்தில் அங்கம் வகிக்கும் மாணவர்களுக்கும், குடும்பத்தினருக்கும், அக்கம் பக்கத்தினருக்கும் தூய்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது மட்டுமின்றி, தூய்மையின் தூதர் களாகவும் அவர்கள் செயல்படு கின்றனர்.

- 2016ஆம் ஆண்டுக்கான அரசுப் பள்ளிகளுக்கான தேசிய தூய்மை விருது டேராடூனில் உள்ள வன ஆராய்ச்சி நிறுவனத்தால் நடத்தப் பட்டுவரும் கேந்திரிய வித்யாலயா பள்ளிக்கு பாரதப் பிரதமர் அவர் களால் வழங்கப்பட்டிருக்கிறது.

கேந்திரிய வித்யாலா பள்ளிகளில் தூய்மை இந்தியா இயக்கம் முழுமையான உறுதிப்பாட்டுடன் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. 2014ஆம் ஆண்டு தூய்மை இந்தியா இயக்கம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பைவிட இப்போது அனைத்து கேந்திரிய வித்யாலயா பள்ளிகளும்



படக்குறிப்பு: அசாம் மாநிலம் போர்ஜார் விமானப்படை நிலைய கேந்திரிய வித்யாலயா பள்ளியில் தூய்மைக் கழிப்பறை இயக்கம். கழிப்பறை சுவர்களில் மாணவர்களின் கைவண்ணம்.

தூய்மையாக மட்டுமின்றி, பசுமை யாகவும் காட்சியளிக்கின்றன.

பள்ளிகளையும், அதன் சுற்றுப் புறத்தையும் தூய்மையாக வைத் திருப்பது மட்டுமின்றி, சுற்றுச்சூழல் அறிவை போதிக்கும் வகையில், பள்ளிகளை பசுமையாக மாற்று வதும் கேந்திரிய வித்யாலயா சங்கதன் அமைப்பின் பணிகளில் குறிப்பிடத்தக்கதாகும்.

- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையத்தின் சார்பில் செயல் படுத்தப்படும் பசுமைப்பள்ளிகள் திட்டம் என்பது பள்ளிகள் பாட நூல்களில் இடம்பெற்றுள்ள பசுமைப்பாடங்களைக் கடந்து, அவற்றை செயல்பாட்டில் கொண்டு வருவதற்கான கற்பித்தல் திட்ட மாகும். இந்தத்திட்டம் இயற்கை வளங்களின் பயன்பாட்டை தணிக்கை செய்வதற்கு பள்ளி களுக்கு உதவுவதுடன் சுற்றுச்சூழல் மேலாளர்களாக தாங்கள் எவ்வாறு செயல்படுகிறோம் என்பதை பள்ளி மாணவர்கள் அளவிடுவதற்கான வழிமுறைகளையும் வழங்குகிறது. தணிக்கை மூலம் கண்டறியப்படும் குறைகளைக் களையவும் இந்தத் திட்டம் உதவுகிறது.

- பசுமைப்பாதைகள் திட்டத்தில் ஒவ்வொரு பள்ளியும் எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்து அந்தப் பள்ளிகளே அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் பள்ளிகள் மதிப்பிடப்பட்டு சான்ற ளிக்கப்படும். இவை அனைத்தும் பள்ளிகள் வழங்கியுள்ள தகவல் களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும்.

- 2015ஆம் ஆண்டில் ஆன்லைன் தணிக்கை தொடங்கப்பட்ட திலிருந்து, அத்தகைய தணிக் கையில் பங்கேற்பதற்காக பதிவு செய்துகொள்ளும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளின் எண் ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதுகுறித்த புள்ளி விவரங்கள் வருமாறு:

2015ஆம் ஆண்டில் 329 பள்ளிகள் பதிவு செய்து கொண்டன. இது 2016ஆம் ஆண்டில் 736 பள்ளி களாகவும், 2017ஆம் ஆண்டில் 858 பள்ளிகளாகவும் அதிகரித்தது.

நாடு முழுவதும் உள்ள 54 பசுமைப் பள்ளிகளில் 18 சதவீதப்பள்ளிகள் கேந்திரிய வித்யாலயாக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஆண்டும் பசுமைப் பள்ளித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விருதுகளில் குறைந்தபட்சம் ஒரு விருதை கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் வென்று வருகின்றன.

ஒட்டப்பாலம் கேந்திரிய வித்யாலயா, பங்கோடு கேந்திரிய வித்யாலயா ஆகியவை மாற்றத்தை உருவாக்கும் பள்ளிகள் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த இரு பள்ளிகளும் தங்களின் சுற்றுச்சூழல் தன்மையை குறிப்பிடத்தக்க அளவில் மேம்படுத்தியதற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் மொத்தம் 4 பள்ளிகள்தான் இந்தப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றில் இரு பள்ளிகள் கேந்திரிய வித்யாலயாக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 2017 18ஆம் ஆண்டில் இதற்கான விருதுகளை வென்ற இந்த இரு கேந்திரிய வித்யாலயா பள்ளிகளின் சில குறிப்பிடத்தக்க சாதனைகள் வருமாறு:

கேந்திரிய வித்யாலயா, ராணுவ கண்டோன்மென்ட், பங்கோடு, கேரளா:

- பசுமைவெளி: ஒட்டுமொத்த பள்ளி வளாகத்தில் 50சதவீதத்திற்கும் அதிகமான பரப்பு பசுமைவெளியாக மாற்றப்பட்டுள்ளது.
- காற்று: 71 சதவீத பள்ளி மாணவர்கள் நீடித்த போக்குவரத்து வழிகளைப் பயன்படுத்துகின்றனர். 8 சதவீத மாணவர்கள் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் மிதிவண்டிகள் மூலமாகவும், நடந்தும் பள்ளிகளுக்கு வருகின்றனர்.
- கழிவு: பள்ளிகளில் உருவாகும் கழிவுகள், அங்குள்ள உயிர்வளி தயாரிப்பு மையத்திற்கான எரிபொருளாகப் பயன்படுத்தப் படுகின்றன. இந்த உயிர்வளி தயாரிப்பு மையத்தில் இருந்து பள்ளிக்குத் தேவையான எரிவாயு வழங்கப்படுகிறது. பள்ளி வளாகத்தில் பிளாஸ்டிக் முற்றிலுமாக தடைசெய்யப் பட்டுள்ளது.
- நீர்: பள்ளி வளாகத்தில் பெய்யும் மழைநீர், பல்வேறு வழிகளில் பள்ளியின் நிலத்தடி நீர்மட்டத்தை நிரப்ப பயன்படுத்தப்படுகிறது. மழைநீரின் ஒரு பகுதி அருகில் உள்ள காடுகள் வழியாக கரமனா ஆற்றில் சேரும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



**கேந்திரிய வித்யாலயா, ஒட்டப் பாலம், கேரளா:**

- எரிசக்தி: கடந்த ஓராண்டில் இந்தப் பள்ளியின் மின்கட்டணம் பெருமளவில் மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. பள்ளியின் நிர்வாகப் பிரிவுக்கு சூரிய ஒளி மின்சாரம் வழங்கப் படுகிறது. பள்ளி வளாகத்தில் உள்ள உயிர்வளி தயாரிப்பு மையத்தில் 50 கிலோ கழிவுகளை சேமிக்கமுடியும். இந்த மையம் மூலம் 10 கிலோ எரிவாயு உற்பத்தி செய்யப்படுகிறது.
- காற்று: பள்ளி மாணவர்களில் 1 சதவீதத்தினர் மட்டுமே தனியார் வாகனங்களைப் பயன்படுத்து கின்றனர்.
- கழிவுகள்: ‘உங்கள் கழிவுகளைக் குறையுங்கள்’ என்ற தத்துவத்தை இந்தப்பள்ளி கடைபிடித்து வரு கிறது. தொடக்கப்பள்ளி வகுப்பு களில் 2 குப்பைத் தொட்டி முறை கடைபிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு நாளும் கடைசிப் பாடவேளையில் 5 நிமிடம் குப்பை களை சேகரிப்பதற்காக ஒதுக்கப் படுகிறது.
- தண்ணீர்: பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த பழைய மழைநீர் சேமிப்புக் கட்டமைப்பு புதுப்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டிடங்களில் இருந்து வெளியேறும் மழைநீர், பூமிக்கு அடியில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேமிப்பு அமைப்பில் சேரும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சேகரிக்கப்படும் மழைநீர் பள்ளிகளின் கழிப்பறைகள், தோட்டப்பாசனம், வகுப்பறை களைத் துடைத்தல் ஆகிய வற்றுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இந்தியப் பசுமைக்கட்டிடங்கள் குழுவின் ‘உங்கள் பள்ளிகளைப்

பசுமையாக்குங்கள்' போட்டி நடத்தப்படுகிறது.

- இந்தியப் பசுமைக்கட்டிடங்கள் குழு சார்பில் நடத்தப்படும் போட்டிகளில் கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் கலந்துகொள்கின்றன. இந்தப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் பள்ளிகளுக்கு முறையே வெற்றிக் கோப்பையுடன் ரூ.3.5 இலட்சம், ரூ.2.5 இலட்சம், ரூ.2 இலட்சம் என பரிசுகள் வழங்கப்படுகின்றன.

2015ஆம் ஆண்டில் தெலங்கானா மாநிலம் ஹைதராபாத் பேகம்பெட் இந்திய விமானப்படை நிலைய கேந்திரிய வித்யாலயா பள்ளி முதலிடத்தை வென்றது.

2016ஆம் ஆண்டில் நாடு முழுவதிலுமிருந்து பங்கேற்ற 307 பள்ளிகளில் டெல்லி ஆர்.கே.புரம் 2வது செக்டர் கேந்திரிய வித்யாலயா பள்ளி முதலிடத்தைப் பிடித்தது.

2017ஆம் ஆண்டில் கான்பூர் ஐ.ஐ.டி. கேந்திரிய வித்யாலயா பள்ளி முதலிடத்தைக் கைப்பற்றியது.

தூய்மை, துப்புரவு, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியம் குறித்த விரிவான பார்வையை ஏற்படுத்துவதற்காக கேந்திரிய வித்யாலயா பள்ளி வளாகங்களின் உள்ளேயும், வெளியேயும் ஏராளமான நடவடிக்கைகளும், திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. அனைவரின் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் அன்றாடப் பள்ளிச் செயல்பாடுகளின் ஓர் அங்கமாக இந்த நடவடிக்கைகளும், திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. இதன் முக்கியமான சில நடவடிக்கைகள் வருமாறு:

- குப்பை அகற்றுதல் குறித்த விழிப்புணர்வு ஒவ்வொரு பள்ளியிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பள்ளிகளில் சேகரிக்கப்படும் மக்கும் தன்மை கொண்ட குப்பைகள் பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள குழிகளிலும், கால்வாய்களிலும் சேகரிக்கப்பட்டு, மக்கிய உரமாக மாற்றப்படுவதும், அந்த உரம் பள்ளித் தோட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுவதும் உறுதி செய்யப்படுகிறது.
- உணவுப்பொருள்களை வீணடிக்கக் கூடாது; மிஞ்சிய உணவுகளை அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் கொட்டவேண்டும் என்று மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
- மாணவிகளின் தனிநபர் சுகாதாரத்திற்குப் போதிய கவனம் செலுத்தப்படுகிறது. ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம் குறித்து மாணவிகளுக்கு வல்லுநர்களைக் கொண்டு சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
- பிளாஸ்டிக் பயன்பாடு குறைக்கப்பட்டுள்ளது. பல பள்ளிகள் பிளாஸ்டிக் இல்லா பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- மூத்த மாணவர்கள் தங்களின் பாடநூல்களை இளைய மாணவர்களுக்கு வழங்கும் படி ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்த நடைமுறை காரணமாக மாணவர்கள் தங்களது புத்தகங்களை இளைய மாணவர்களுக்கு வழங்குவதற்காக அழகாகவும், தூய்மையாகவும் வைத்துக்கொள்ளும் கலையை வளர்த்துக்கொள்கிறார்கள். இந்த நடைமுறையில் புத்தகங்கள் வீணடிக்கப்படாமல் அடுத்தடுத்த மாணவர்களுக்கு வழங்கப்படுவதால், புத்தகங்களை அச்சிடுவதற்காக மரங்களை அழிப்பது குறைக்கப்படுகிறது.

2016 - 17ஆம் ஆண்டில் மூத்த வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் 2,58,385 பாடநூல்களை இளைய மாணவர்களுக்கும், நூலகங்களுக்கும் வழங்கினார்கள். இதன் மூலம் சுமார் 51.677 டன் காகிதம் சேமிக்கப்பட்டுள்ளது. 874 மரங்கள் வெட்டப்படுவது தடுக்கப்பட்டுள்ளது.

2017 - 18ஆம் ஆண்டிலும் இத்தகைய நடைமுறை தொடர்ந்தது. அந்த ஆண்டில் 5,04,679 புத்தகங்களை மூத்த மாணவர்கள், இளைய மாணவர்களுக்குப் பரிசாக வழங்கினார்கள். இதன் மூலம் 100.935 டன் காகிதம் சேமிக்கப்பட்டது. 1,716 மரங்கள் பாதுகாக்கப்பட்டன.

பள்ளியில் பயிலும் மாணவர்கள், அவர்களின் பிறந்தநாளுக்காக ஒரு மரக்கன்றை நடும்படி ஊக்குவிக்கப்படுகிறார்கள். பள்ளிக்கு வரும் விருந்தினர்களுக்கு பறிக்கப்பட்ட மலர்களையும், மலர்க்கொத்துகளையும் கொடுப்பதற்கு பதிலாக, உயிருடன் உள்ள பசுமைச்செடிகள் பரிசாக வழங்கப்படுகின்றன.

- மாணவர்களிடையே சிறந்த குடிமக்களுக்கான குணங்களை மேம்படுத்தும் நோக்குடன் பள்ளிகளில் மின்சாரத்தைச் சேமிப்பதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த முயற்சிகள் முழு வேகம் பெற்றுள்ளன.
- வகுப்புகள் நடைபெறாதபோது மின்விளக்குகளையும், மின்விசிறிகளையும் அணைக்கும் வழக்கம் மாணவர்களிடையே ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- மரபு சார்ந்த மின்சாரத்தைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதன் மூலம் மின்சாரத்தைச் சேமித்து, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்குடன் டெல்லி, பீகார்,

அசாம், திரிபுரா, கர்நாடகா, மராட்டியம், உத்தரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள 273 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் சூரிய ஒளி மின்சாரக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. டெல்லியில் உள்ள 12 கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் சூரியஒளி மின்சாரக் கட்டமைப்புகளை அமைக்கும் பணிகள் நிறைவடைந்துவிட்டன. பல்வேறு கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் இதுவரை 54,419 பாரம்பரிய மின்சார விளக்குகள் / குழல் விளக்குகள் அகற்றப்பட்டு, எல்.இ.டி. விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளன. 948 சூரிய ஒளி விளக்கு களும் பொருத்தப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- கேந்திரிய வித்யாலயா பள்ளிக் கட்டிடங்களில் மழைநீர் சேமிப்புக் கட்டமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மொத்தம் உள்ள 755 நிரந்தரப் பள்ளிக் கட்டிடங்களில் 231 கட்டிடங்களில் மழைநீர் சேமிப்புக் கட்டமைப்புகளை ஏற்படுத்தும் பணி முடிவடைந்துவிட்டது. மீதமுள்ள கட்டிடங்களில் இந்தப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த நடைமுறையும் தொடர்கிறது. புதிதாகக் கட்டப்படும் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் மழைநீர் கட்டமைப்பு வசதியை ஏற்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் கடந்த 4 ஆண்டுகளில் பல்வேறு கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் வருமாறு:

கேந்திரிய வித்யாலயா சங்கதன் அமைப்பின் அதிகாரிகள், பணியாளர் கள், மாணவர்கள் ஆகியோருக்கு தூய்மை உறுதிமொழி செய்து வைக்கப்படுகிறது.

பள்ளி வளாகங்களும், சுற்றுப்புறங் களும் தூய்மைபடுத்தப்படுகின்றன.

புகழ்பெற்ற வல்லுநர்களால் தூய்மை குறித்த ஊக்க உரைகள் நிகழ்த்தப்படுகின்றன.

காலை நேர வழிபாட்டின்போது மாணவர்களின் தனிநபர் சுகாதாரம் சரிபார்க்கப்படுவதுடன், ஊக்கு விப்புகளும் வழங்கப்படுகின்றன.

பள்ளிகளின் கழிப்பறைகளைத் தூய்மையாகப் பராமரிப்பதும், மாண வர்கள் மற்றும் பணியாளர்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதும் உறுதி செய்யப்படுவதுடன் அது ஒரு சிறப்பு இயக்கமாகவே நடத்தப் படுகிறது.

கேந்திரிய வித்யாலயா பள்ளிகள், மண்டல அலுவலகங்கள், தலைமை அலுவலகங்களில் தூய்மை இருவாரம் கடைபிடிக்கப்படுகிறது.

கேந்திரிய வித்யாலயாக்களில் தூய்மையான, பசுமையான சூழலை வலி யுறுத்தும் நோக்குடன், தூய்மை வித்யாலயா விருதுகளும், ஹரித் வித்யாலயா விருதுகளும் 2016-17ஆம் ஆண்டு முதல் வழங்கப் பட்டு வருகின்றன. பிராந்திய அளவிலான இந்த விருதுகளுடன் கோப்பைகளும் ரொக்கப்பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

துப்புரவு தொடர்பான வினாடி வினா போட்டிகள் நடத்தப்படுகின்றன.

பூமிநாள் கொண்டாடப்படுவதுடன், பருவநிலை மாற்றம் குறித்த நிகழ்ச்சி களில் மாணவர்கள் பங்கேற்பதும் ஊக்குவிக்கப்படுகிறது.

தூய்மை என்ற தலைப்பில் ஓவியம் மற்றும் வண்ணம் தீட்டும் போட்டி கள் நடத்தப்படுகின்றன.

பசுமை தீபஒளி, தூய்மை தீபஒளி இயக்கங்கள் நடத்தப்படுகின்றன.

15.09.2018 அன்று தொடங்கப்பட்ட தூய்மை சேவையில் அனைத்து நிலை களிலும் அதிக எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்கின்றனர். தூய்மைப் பிரச்சாரத்தை தூய்மை அமைப்பில் இடம்பெற்றுள்ள அனைத்துத் தரப்பினருக்குமான இயக்கமாக மாற்றுவதன் மூலம், தூய்மை உணர்வை கேந்திரிய வித்யாலயா சங்கதன் முன்னெடுத்துச் செல்கிறது. இது ஒரு குறிப்பிட்ட நாளில் தொடங்கப்படும் இயக்கமோ அல்லது குறிப்பிட்ட வாரத்தில் கொண்டாடப்படும் நிகழ்வோ அல்ல. மாறாக, தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டிய திட்டமாகும். இந்தத் தூய்மை இயக்கம் பள்ளிகள் அமைப்பின் ஓர் அங்கமாக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக, தூய்மை இயக்கம் இப்போது பள்ளிகளின் வழக்கமான பணியாகிவிட்டது. குழந்தைகள் வளரும் காலத்தில் பல்வேறு நடவடிக்கைகளிலும், திட்டங்களிலும் அவர்களைப் பங்கேற்கச் செய்வதன் மூலம் அவர்களுக்கு ஊட்டப்படும் தூய்மை குறித்த மாண்புகள் அவர்களின் மனங்களில் முழுமை யாக பதிந்துவிடுகின்றன. அதன் பயனாக, அவர்கள் தூய்மை இந்தியா இயக்கத்தின் உண்மை யான பங்குதாரர்களாகச் செயல் படுவார்கள். ●

---

- **சந்தோஷ்குமார் மால்**, ஆணையர், கேந்திரிய வித்யாலயா சங்கதன்

# உங்களுக்குத் தெரியுமா?

**அ**ஸ்ஸாமில் வசிக்கும் இந்தியக் குடிமக்களின் விவரங்களைக் கொண்டதுதான் குடிமக்கள் தேசியப் பதிவேடு (National Register of Citizens) எனப்படுகிறது. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களிலிருந்து அஸ்ஸாம் மாநிலத்தின் குடியுரிமைச் சட்டம் மாறுபட்டதன்மை கொண்டது. வங்காள மொழி பேசும் மக்கள் சட்டவிரோதமாக அஸ்ஸாமில் வந்து குடியேறியிருப்பதாகவும், இதனால் அஸ்ஸாம் மக்களுக்கு உரிய முதன்மை கிடைக்கவில்லை என்றும் அனைத்து அஸ்ஸாம் மாணவர் சங்கம் 1980களில் மிகத் தீவிரமான போராட்டங்களை நடத்தியது. இந்த வன்முறைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அப்போதைய பிரதமர் ராஜீவ்காந்தியும், அஸ்ஸாம் அரசாங்கமும் 1985இல் அஸ்ஸாம் உடன்படிக்கையை ஏற்படுத்தினர். 1971ஆம் ஆண்டு மார்ச், 21ஆம் நாளிற்குப் பிறகு அஸ்ஸாமில் குடியேறியவர்களின் விவரங்களைப் பதிவு செய்வது என்று முடிவானது. இப்படி உருவானது தான் குடிமக்கள் தேசியப்பதிவேடு. அஸ்ஸாமிற்கு அருகில் இருக்கும் கிழக்கு வங்காளம் 1971ஆம் ஆண்டில்தான் பாகிஸ்தானில் இருந்து பிரிந்து தனி தேசமானது. அந்த சமயத்தில் அங்கிருந்து ஏராளமானோர் வெளியேறி அஸ்ஸாமிற்கு வந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

1951ஆம் ஆண்டில் நடைபெற்ற மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வரைவு குடிமக்கள் தேசியப் பதிவேடு வெளியிடப்பட்டது. பிறகு, உச்சநீதி மன்றத்தின் வழிகாட்டுதலின்படி மே 2015 முதல் குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு குடிமக்கள் தேசியப் பதிவேடு மேம்படுத்தப்பட்டது. 2017, டிசம்பர் 31 அன்று மற்றுமொரு வரைவு குடிமக்கள் தேசியப்பதிவேடு வெளியிடப்பட்டது. 1951 மக்கள் தொகைப் பதிவேடு, வாக்காளர் பட்டியல் ஆகியவற்றில் பெயர் இருப்பது, நில ஆவணங்கள், கடவுச்சீட்டு, பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் அடிப்படையில் சரிபார்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இப்போது அஸ்ஸாமில் வசிப்பவர்கள், இவற்றில் ஏதேனும் ஒரு ஆவணத்தின் துணையுடன் தங்களது மூதாதையர் அஸ்ஸாமில் வசித்து வந்தனர் என்பதை நிரூபணம் செய்ய வேண்டும்.

இத்தகைய அடிப்படையில் இறுதி வரைவு குடிமக்கள் தேசியப் பதிவேடு 2018, ஜூலை 30ஆம் நாள் வெளியிடப்பட்டது. பெறப்பட்ட 3 கோடியே 29 இலட்சம் விண்ணப்பங்களில் 40 இலட்சத்து 7000 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. இவற்றில் இரண்டு இலட்சத்து 48 ஆயிரம் விண்ணப்பங்கள் நிறுத்தி வைக்கப்படுள்ளன. வரைவு குடிமக்கள் தேசியப் பதிவேட்டில் பெயர்கள் இடம் பெறாதவர்கள் மீது இப்போதைக்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்ககூடாது என்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

அகதிகள் பாதுகாப்பிற்காக தேசிய அளவிலான கட்டமைப்பு எதுவும் இல்லாத நிலையிலும் அண்டை நாடுகளில் இருந்து வரும் அகதிகளுக்கு இந்தியா தொடர்ந்து புகலிடம் அளித்து வருகிறது. 1951ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் மநாட்டிலும், 1967ஆம் ஆண்டு ஐ.நா. அகதிகள் உடன்படிக்கையிலும் இந்தியா கையெழுத்திடவில்லை.

ஆயினும், வெளிநாட்டவர் பதிவு சட்டம், 1939, வெளிநாட்டவர் சட்டம், 1946, கடவுச்சீட்டு சட்டம், 1967 ஆகிய சில சட்டங்கள் இந்தியாவில் இருக்கின்றன. இந்தியக் குடியுரிமை சட்டம், 1955இல் சில திருத்தங்கள் செய்யப்பட்டு, ஆப்கானிஸ்தான், வங்காள தேசம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் மத சிறுபான்மையினரான இருந்து வெளியேறி வரும் இந்துக்கள், சீக்கியர், புத்த ஜைன மதத்தவர், பார்சிகள் ஆகியோருக்கு குடியுரிமை வழங்குவதற்கு மத்திய அரசுமுயற்சித்து வருகிறது. ●

- **உலகில் எந்தெந்த நாடுகளில் இருந்து அகதிகள் அதிகமாக வெளியேறி வருகிறார்கள்?**
  ஆப்கானிஸ்தான், திபேத் (சீனா), மியான்மார், இலங்கை.
- **உலகிலேயே அதிகமான அகதிகளைக் கொண்டிருக்கும் நாடு எது?**
  துருக்கி.

# ‘சுயராஜ்யத்திற்கான படிக்கட்டு’ துப்புரவு பற்றி காந்தி

- டி.ஜான் செல்லதுரை

**ஐ.**சி.எஸ் தொடக்கநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்த மத்திய மகராஷ்டிரா பகுதியைச் சேர்ந்த ஒரு இளைஞன் காந்தியின் ஆசி வேண்டி அவரது சேவாகிராம் ஆசிரமத்திற்கு வந்தான். ‘நீ ஏன் ஐ.சி.எஸ் ஆக வேண்டும் என்று நினைக்கிறாய்?’ என்று காந்தி அவனிடம் கேட்டார். ‘இந்தியாவிற்கு சேவை செய்வதற்கு’ என்று அந்த இளைஞன் பதில் சொன்னான். ‘இந்தியாவில் உள்ள கிராமங்களுக்குச் சென்று துப்புரவு சேவை செய்வதுதான் இந்தியாவிற்கு செய்யக்கூடிய சிறப்பான சேவை’ என்று காந்தி அவனிடம் கூறினார். ஐ.சி.எஸ் ஆக வேண்டும் என்று ஆசைப்பட்ட ‘அப்பா பட்வர்தன்’ என்ற அந்த இளைஞன் அதன் பிறகு மிகச் சிறந்த சுதந்திரப் போராட்ட வீரனாகவும், துப்புரவுப் பணிகளை மேற்கொள்வதில் திறம் பெற்றவனாகவும் ஆனான்.

சுதந்திரப் போராட்டப் பள்ளியில் தேர்ச்சி பெறுவதற்கு துப்புரவும், தூய்மையும் தேர்வுகள். வினோபா பவே, தக்கர் பாபா, ஜே.சி.குமரப்பா போன்ற எண்ணற்ற அறிவார்ந்த இளைஞர்கள் சுதந்திரப் போராட்டத்தில் இணைந்தனர். துப்புரவு, தூய்மை இரண்டையும் சுதந்திரத்திற்கான அடிப்படையாகக் கைக்கொண்டனர்.

உண்மையை நாடும் காந்தி தூய்மைக்கு முதலிடம் தந்து கவனம் மிகுந்த உன்னிப்பான வாழ்க்கை முறையைக் கடைபிடித்தார். தூய்மைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தார். ‘தூய்மை, கடவுள் தன்மைக்கு அடுத்த நிலை’ என்றார்.

### வளர்ச்சிக்கான முன்தேவை

மனித நாகரிகத்தின் மெய்யான தோழன் வளர்ச்சி என்பதாகும். மனிதன் வேட்டையாடி வாழ்ந்து வந்த வரலாற்றுக்கு முந்தைய காலம் தொடங்கி, அதிநவீன நகர்ப்புற மனிதன் வரையிலுமான காலகட்டத்தில் வாழ்க்கையை நாம் மிகவும் அதிகமான அளவில் மேம்படுத்திக்கொண்டு விட்டோம். மனித வளர்ச்சி என்பது தனி நபர்களின் நலன்கள் பற்றிய அனைத்து கூறுகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. உணவுப் பாதுகாப்பு, தூய்மையான காற்று, பாதுகாப்பான குடிநீர், சுகாதாரமும் துப்புரவும், அடிப்படை வளங்கள், தரமான கல்வி, தெரிந்தெடுக்கும் உரிமை ஆகியவை இவற்றில் அடங்கும்.

இவற்றில் பலவற்றை உடலியல் தேவைகள் என்று குறிப்பிடலாம். வளரும் சமுதாயம் என்ற நிலையில் உடலியல் தேவைகளை அடைவதற்கு மிகவும் கஷ்டப்பட்டு பல்வேறு முயற்சிகளைச் செய்து நுட்பமான ஏற்பாடுகளை நாம் செய்து வைத்திருக்கிறோம். ஆனால் மறு பக்கத்தில், வேண்டாத கழிவுகளை ஒதுக்கித்தள்ளுவது தொடர்பாக வளர்ச்சி செயல்திட்டத்தில் நாம் மிகுந்த புறக்கணிப்பையே செய்திருக்கிறோம்.

ஆனாலும் நல்லதொரு தொடக்கம் என்பதே பாதி வெற்றியாகும். மறு பாதியைப் பொறுத்தவரையில் நாம் எப்படி ஆரம்பிக்கிறோம் என்பது முக்கியமல்ல. எப்படி முடிக்கிறோம் என்பதே முக்கியம்.

மனித குலம் சமையல் கலையில் கைதேர்ந்ததாக இருக்கிறது. கழிவுகளைக் கையாளுவதிலும் மனித குலம் திறம் படைத்ததாக ஆக வேண்டும்.

மனிதக் கழிவாகட்டும், தொழிலகக் கழிவாகட்டும், நுகர்வோர் கழித்துக்கட்டும் பொருள்களாகட்டும், வளர்ச்சியின் காரணமாக உருவாகும் கழிவுகளாகட்டும் இவை அனைத்தின் மீதும் மிகவும் அலட்சியமான கவனமே இருந்து வந்திருக்கிறது.

### மூர்க்கத்தனம்

நம்முடைய பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், சந்தைகள், ஏன் கோயில் வளாகங்கள் ஆகியவை குப்பை கொட்டும் இடங்களைப் போல தோற்றம் அளிக்கின்றன. ஈக்களும், கொசுக்களும், எலிகளும் அங்கெல்லாம் கணக்கில்லாமல் பெருகி இருக்கின்றன. ‘முடை

நாற்றம் அடிக்கும் குகைகள்' என்று காந்தி இவற்றைப் பற்றிக் கூறினார். புதிதமான கங்கை நதியையும் கூட நாம் பிரமாண்டமான கழிவு நீரோடையாக ஆக்கிவிட்டோம்.

பொது இடங்களில் துப்புரவு பற்றி நகர்ப்புற மக்களிடம் நிலவும் அலட்சிய மனப்பான்மை பற்றி காந்தி இப்படி தெரிவித்தார்: "அடுக்குமாடிக் கட்டிடங்களில் வசிப்பவர்கள் எந்த நேரத்தில் தங்கள் தலையின் மீது எச்சில் துப்புவார்களோ என்ற அச்சத்துடன் நகரத்து வீதிகளில் நடந்து செல்வது தேறுதல் அளிக்கும் சிந்தனையாக இருக்கமுடியாது." திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் அநாகரீகமானது என்று அவர் குறிப்பிட்டார். அப்படி செய்யும் சமயத்தில் தங்களைக் கடந்து செல்லும் எவரையும் அவர்களால் ஏறிட்டுப் பார்க்க முடியாது. மனதைக் கூசச் செய்யும் செயலாகும் அது.

## மெய்யறிதல்

காந்தியடிகளுக்கு துப்புரவு என்பது வெறும் உடலியல் தேவை மட்டுமல்ல. அது ஒரு வாழ்க்கை நெறியுமாகும். இது மெய்யறிதலில் ஒருங்கிணைந்த ஒரு பகுதியுமாகும். காந்தி உண்மையைக் கடவுளாக வழிபட்டார். எங்கெங்கும் நிறைந்திருக்கும் உண்மையாகிய கடவுள் தூய்மையானவர். எனவே தான் தூய்மையை கடவுள் நிலையுடன் காந்தி ஒப்பிட்டார். சுதந்திரத்திற்கு மிகவும் அத்தியாவசியமான படி துப்புரவு ஆகும். காந்தியின் ஆக்கப்பூர்வமான 18 திட்டங்களில் ஒன்றாக துப்புரவும் இடம்பெற்றிருந்தது.

உண்மைக்கு மிக நெருக்கமான வெளிப்பாடுதான் வாழ்க்கை என்பதனால் வாழ்க்கையை உண்மைக்கும், கடவுளுக்கும் நிகராக காந்தியடிகள் கூறினார். அதனால்தான், காந்தி துப்புரவையும், தூய்மையையும் அகம், புறம் ஆகிய இரண்டின் தேவையாகவும் உணர்ந்தார். அதன் மூலமாகவே கடவுளை அடையமுடியும் என்றும் அவர் கூறினார். தூய்மை இல்லாத உடலோடும், தூய்மையற்ற மனதோடும் கடவுளின் ஆசிகளை நாம் ஒருபோதும் பெறமுடியாது. 'தூய்மையற்ற நகரங்களில் தூய்மையான உடலோடு யாருமே வசிக்க முடியாது'.




## சுயராஜ்யம்

சுயராஜ்யத்தை அடைவதற்கான முயற்சியில் முக்கியமான இடம் துப்புரவுக்கு உள்ளது என்று காந்தி புரிந்து வைத்திருந்தார். ஹோம் ரூலுக்கான கோரிக்கையை ஆதரித்த பாலகங்காதர திலகர் 'சுயராஜ்யம் எனது பிறப்புரிமை' என்று முழங்கினார். சுயராஜ்யம் பற்றி காந்தி "யங் இந்தியா' இதழில் எழுதினார். "சுயராஜ்யம் என்பது ஒரு புனிதமான வார்த்தை, வேதத்தில் காணப்படும் வார்த்தை அது. சுயஆட்சி, சுயக் கட்டுப்பாடு என்பது இதன் பொருள். அனைத்து விதமான கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலை என்பது இதன் பொருள் அல்ல." பொது இடங்களை அசுத்தப்படுத்துவது சுதந்திரமாகாது என்பதைக் குறிப்பிட்டுத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. 'சுயராஜ்யம் பற்றிய எனது கனவு ஏழையின் சுயராஜ்யம் பற்றியது' என்று காந்தி மேலும் குறிப்பிட்டார். எனவே சுயக்கட்டுப்பாடு என்பதும் கடைசி மனிதன் வரையிலும் சென்று சேர வேண்டியதாகும்.

பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தின் தொடக்க விழாவில் ஏராளமாகக் கூடியிருந்த மக்களிடம் பேசிய போது, பானாரஸ் என்ற புனித நகரத்தை மூச்சுத் திணறச் செய்திருந்த மாசு பற்றி அவர் பேசினார். 'நம்மை நாமே ஆள்வது பற்றி (சுதந்திரம்) நீட்டி முழக்கிப் பேசுவதால் மட்டும் நாம் அதற்குத் தகுதி உடைவர்களாகிவிட முடியாது. நம்முடைய நடத்தை தான் நம்மைத் தகுதி உடையவர்களாக்கும்'. தூய்மைதான் அவரது சுயராஜ்ய யாகமாகும்.

கழிவு அகற்றும் நடவடிக்கைகள் பற்றி பேசியபோது காந்தி குறிப்

பிட்டார்: 'தனது ஆளுகையின் கீழிருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவைப்படும் சாதாரண அடிப்படை வசதிகளுக்கு உத்திரவாதம் தரப் படாத வரையிலும், சுயராஜ்யம் பூரண சுயராஜ்யமாக இருந்திட முடியாது.'

## துப்புரவு தேசக்கட்டுமானத்திற்கான ஒரு நடவடிக்கை

சுதந்திரப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி சுதந்திரத்தின் பரிமாணங்களைப் பற்றி விளக்கிய போது 'தூய்மை நடத்தை' யின் முக்கியத்துவத்தை அவர் கோடிட்டுக் காட்டினார். இந்தச் சூழலில் 'சுய ஆளுகை பற்றி நாம் சிந்திப்பதற்கு முன்பாக அவசியமான கடும் உழைப்பை நாம் மேற்கொண்டாக வேண்டும்' என்று காந்தி குறிப்பிட்டார்

சுகாதாரம் என்ற கண்ணோட்டத்தில் கிராமங்களைப் பார்த்த காந்தி கிரா மங்களின் நிலைமை துயரமளிப்பதாக இருக்கிறது. 'வறுமைக்கு மிக முக்கியமான காரணம் துப் பரவு பற்றிய அவசியமான அறிதல் இல்லாமல் இருப்பதே ஆகும்'. இந்தப் பார்வையின் அடிப்படையில்தான் காந்தி 'சுயராஜ்யம் என்பது வெறுமனே ஆங்கிலேய நுகத்தடியிலிருந்து விடுவித்துக்கொள்வது மட்டுமல்ல. எல்லாவிதமான தளைகளிலிருந்தும் நம்மை விடுவித்துக்கொள்வதே சுயராஜ்யமாகும்' என்று தெரிவித்தார்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் கருத்து தெரிவிக்கும் போது 'சுயராஜ்யம் என்பது இடையறாத உழைப்பின் பலனும், சுற்றுச்சூழலைப் போற்றும் தன்மையுமாகும்' என்றார் காந்தி.



துப்புரவு என்பது கம்பீரம் மிக்க மகிழ்ச்சி

அஹிம்சை வழியே கடவுளையும், உண்மையையும் வழிபடுவதற்கான சிறந்த வழி என்றும், வாழ்க்கையில் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் கடவுளை அடைவதற்கான வழிகள் என்றும் காந்தி கண்டார். தூய்மை என்பது அளவற்ற மகிழ்ச்சியை அளிக்கும் என்று அவர் கூறினார்.

இந்து, முஸ்லிம் ஒற்றுமையை உருவாக்குவதற்காக நவகாளி முழுவதும் காந்தி நடந்து சென் றார். காந்தியின் செயலாளர் பியாரிலால் இது தொடர்பான ஒரு நினைவைப் பகிர்ந்து கொள்கிறார். 'நவகாளியில் அது கடும் பனி பொழிந்த இரவு. குறுகலான வழுக்கும் பாதையில் அவர் நடந்து செல்லவேண்டியிருந்தது. கடினமான நிலப்பகுதிகளில் நடந்து பழகியிருந்த கர்னல். ஜிவான்சிங் என்பவர் கால் வழுக்கி உருளப்போனார். காந்தி சிரித்தபடியே தனது கைத்தடியின் ஒரு நுனியை அவரிடம் நீட்டி அவரை இழுத்து நிறுத்தினார்.'

அவர்கள் நடந்து வந்த பாதை திடீரென குறுகலாக ஆனது. எல்லோரும் ஒரு அணியாக சேர்ந்து நடக்க முடியாது. நடந்து வந்த அனைவரும் ஒரு கட்டத்தில் திடுமென நின்றுவிட்டனர். அங்கு கிடந்த மலக்கழிவை சில உலர்ந்த இலைகளைக் கொண்டு காந்தி அகற்றிக் கொண்டிருந்தார். அந்தப் பாதை மறுபடியும் இனவெறியர்கள் சிலரால் அசிங்கப்படுத்தப்பட்டது.

'எங்களை செய்யவிடாமல் நீங்களே ஏன் இதைச் செய்கிறீர்கள்? எங்களுக்கு சங்கடமாக இருக்கிறது!' என்று மனு கூறினார். அதற்கு காந்தி சிரித்தபடி இப்படி பதில் கூறினார்: 'இத்தகைய காரியங்களை செய்யும் போது நான் அடையக்கூடிய ஆனந்தம் பற்றி உங்களுக்குத் தெரியாது'.

அடிப்படைத் தேவையான பொருள் களை கிராமங்கள் உற்பத்தி செய் கின்றன. கிராமங்களே இந்தியாவின் இதயம் அன்று காந்தி நம்பினார். அதனால் இந்தியாவின் சுயராஜ் யத்தை கிராம ராஜ்யத்துடன் அவர் ஒப்பிட்டார்.

தனக்குத் தேவைப்படும் அனைத்தையும் உற்பத்தி செய்துகொள்ளும் தன்மைகொண்ட, எழுத்தறிவு கொண்ட மக்கள் நிறைந்திருக்கும், தூய்மையான சாலைகளைக் கொண்டிருக்கும், தூய்மையான கிணறுகளைக்கொண்ட, கழிப்பிட வசதி உடைய கிராமங்கள் அவரது கனவாகும்.

'முழுமையான அளவில் தூய்மை உடையதாக இருக்கும் கிராமமே இலட்சிய கிராமமாகும். அங்கு குடிசைத்தொழில்கள் நடைபெறும். போதுமான வெளிச்சமும், காற்றும் புழங்கும். ஐந்து மைல் தொலைவிற்குள் கிடைக்கக்கூடிய பொருள்களைக் கொண்டு கட்டுமானங்கள் எழுப்பப்பட்டிருக்கும்' என்று காந்தி முன்மொழிந்திருந்தார்.

கிராமங்களின் அப்போதைய இழிநிலை பற்றிக் குறிப்பிட்ட போது, 'கிராமங்களின் துப்புரவை மேம்படுத்த முடியுமானால், இலட்சக் கணக்கான ரூபாய் பணத்தை எளிதாக சேமிக்கமுடியும். மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். ஆரோக்கியமான விவசாயி உழைக்கும் அளவிற்கு நோயுற்ற ஒருவரால் உழைத்திட முடியாது.'

## துப்புரவு பிரச்சினைகளுக்கான பதில்

துப்புரவு மேம்படவேண்டுமானால் 'ஒவ்வொரு கிராமத்திலும் அதிக செலவில்லாத நீர் ஆதாரம் ஒரு இடத்தில் சேமிக்கப்பட்டிருக்கவேண்டும்'.

சத்தியாகிரகமும், ஆக்கப்பூர்வமான திட்டமும் ஒரு பறவையின் இரு சிறகுகள் என்று காந்தி குறிப்பிட்டார். இதில் ஒன்று இல்லாமல் போனலும் அதற்கு அர்த்தமில்லை. கழிப்பறைகளை சுத்தம் செய்வதும், துப்புரவு பணி செய்வதும் சத்தியாகிரகிகளின் தகுதிகளாகும். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான பொதுக்கூட்டமாயினும் சரி, சமூக சீர்திருத்தத்திற்கான முன் முயற்சியாயினும் சரி, ஒரு கிராமத்தை தூய்மை செய்வது தவறாமல் அதில் இடம் பெற்றிருக்கும்.

இந்தியரில் ஒரு பிரிவினரான பங்கிகள் மனித மலத்தை வாளிகளில் அள்ளும் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் இழிவாக பார்க்கப்பட்டனர். சமூகத்தின் துப்புரவிற்கும், ஆரோக்கியத்திற்கும் மிக முக்கியமான தொண்டு புரியும், சமூகத்தின் அடிநிலையில் இருக்கும் இந்த மக்களின் துயரங்கள் பற்றி காந்தி மிகுந்த கவலை கொண்டிருந்தார். ''அனைவராலும் புறக்கணிக்கப்பட்ட தொழுநோயாளிகள் போல இருந்த நிலையிலும் சமூகத்தின் துப்புரவுக்கும், சுகவாழ்விற்கும் பங்களித்த இந்த மக்கள் கைகளால் மனித மலத்தை வாரி எடுத்து அகற்றினர். கிருமிகளில் இருந்து பாதுகாத்துக்கொள்ளும் வகையில்லாமல் மலத்தை வாளிகளில் சுமந்து வந்தனர். அவர்களுக்கு கண்ணியம் தரும் வகையில் நாம் ஒவ்வொருவருமே நமக்கு நாமே பங்கிகளாக இருக்கவேண்டும். என்று அவர் தெரிவித்தார்.' அவர் எப்போது தில்லிக்குச் சென்றாலும் பங்கிகள் வசிக்கும் காலனியில் சென்று தங்குவார் அல்லது அவர்களைப் பார்த்துவிட்டு வருவார்.

காந்தியின் பார்வையைப் பின்பற்றி எண்ணற்ற நிறுவனங்கள் அவரது அழைப்பை ஏற்று துப்புரவு பிரசாரத்தை மேற்கொண்டன. சபாய் வித்யாலயா, நிர்மல் கிராம், நிர்மான் கேந்திரா ஆகிய அமைப்புகள் இதனை சிறப்புற செய்து வருகின்றன.

அகமதாபாத் சபர்மதி காந்தி ஆஸ்ரமத்தில் 1963ஆம் ஆண்டு ஹரிஜன் சேவக் சங்கம் அமைக்கப்பட்டது. மனித மலத்தை அள்ளும் வேலைகளில் இருந்து துப்புரவுப் பணியாளர்களை விடுவிப்பது அதன் நோக்கம். தெரு கூட்டுபவர்கள், தோட்டிகள் ஆகியோரின் உயர்வுக்கு உழைப்பது, கிராமப்புற, நகர்ப்புற சுகாதாரம், துப்புரவு மேம்பாடு ஆகியவை சபாய் வித்யாலயாவின் முதன்மை நோக்கங்களாகும்.

## முடிவுரை

காந்தி உண்மையை கடவுளாகப் போற்றினார். அகிம்சையை வழியைக் கைக்கொண்டார். அதனை ஒரு வாழ்க்கை முறையாகக் கடைபிடித்தார். இலக்கிற்கும், வழிமுறைக்கும் இடையேயான உறவு பற்றிக் கூறும் போது காந்தி கூறினார்: 'வழிமுறை எனது கட்டுப்பாட்டில் இருக்கிறது. எனவே இலக்கை விடவும் வழிமுறையை நான் முக்கியமானதாகக் கருதுகிறேன்.' வழிமுறையின் மீது நாம் கவனம் செலுத்தினால் இலக்கு தானே எட்டப்பட்டுவிடும்''. இந்த வகையில், இந்தியா உலக அரங்கில் ஒரு தேசமாக தூய்மை எனும் பெரும் சிறப்பை நோக்கி நடைபோட்டு வருகிறது. ''வசந்தத்தின் சிறப்பு ஒவ்வொரு மரத்திலும் தெரிகிறது. பூமி முழுவதுமே இளமையின் புத்துணர்ச்சியினால் நிறைந்திருக்கிறது. சுயராஜ்ய மனநிலை சமூகத்தில் வியாபிக்கும்போது, வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும் அதன் சக்தி உயர்ந்தோங்கி மிளிரும்' என்கிறார் மகாத்மா காந்தி. ●

---

**டி.ஜான் செல்லதுரை**, கூடுதல் முதல்வர், காந்தி ஆராய்ச்சி அறக்கட்டளை, ஜல்காவோன், மகாரஷ்டிரா.

# அனைவருக்கும் துப்புரவு

- ஏ.தில்லைராஜன்

இந்தியாவின் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள சுற்றுச்சுவர்களில், "இது கழுதைகள் சிறுநீர் கழிக்கும் இடம்" என்ற வாசகம் எழுதப்பட்டிருப்பதை அடிக்கடி பார்க்கமுடியும். பல ஆண்டுகளுக்கு முன் முதன்முறையாக இப்படியொரு வாசகத்தைப் பார்த்தபோது எனக்கு சிரிப்பு வந்தது. ஆனால் இப்போது இத்தகைய வாசகங்களை அர்த்தமற்றவையாக ஆக்கும் வகையில், கொள்கை நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பதில்தான் நான் அதிக அக்கறை கொண்டிருக்கிறேன். போதிய அளவில் கழிப்பறை உள்ளிட்ட துப்புரவு வசதிகளை செய்து கொடுப்பது கண்ணியமான மனித வாழ்க்கைக்கு மட்டுமின்றி, ஆரோக்கியமான, நோய்கள் இல்லாத சுற்றுச்சூழலுக்கும் மிகவும் அவசியமாகும். அனைவருக்கும் துப்புரவு என்ற இலக்கை உறுதி செய்வதற்கான கொள்கையில் மத்திய அரசு கவனம் செலுத்தி வரும் வேளையில், களச்சூழல் மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. 2015ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனமும், ஐ.நா.வின் யுனிசெப் அமைப்பும் இணைந்து செயல்படுத்திய குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுக்கான கூட்டுக் கண்காணிப்புத் திட்டத்திற்கான கணக்கெடுப்பின்படி, உலகளவில் 240 கோடி பேருக்கு மேம்படுத்தப்பட்ட கழிப்பறை வசதிகள் இல்லை என்று தெரியவந்துள்ளது.

துப்புரவு வசதிகளை ஏற்படுத்தித் தருவதில் இந்தியாவிலும், உலக அளவிலும் கடந்த இரு பத்தாண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் எட்டப்பட்டிருக்கும் போதிலும், அது ஒரு தரப்பினருக்கானதாகத் தான் உள்ளது. குறிப்பிடத்தக்க அளவிலான மக்களுக்கு இன்னும் மேம்படுத்தப்பட்ட கழிப்பிட வசதிகள் கிடைக்கவில்லை. இதனால், பெருமளவிலான மக்கள் திறந்த வெளியில் மலம் கழிக்கின்றனர். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமத்துவமான, நீடித்த வகையில் துப்புரவு வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் மூலமாக மட்டும்தான் அனைவருக்கும் துப்புரவு என்ற இலக்கை எட்டமுடியும்.

துப்புரவு வசதிக்கான இப்போதைய செயல்திட்டம் என்பது பெரும்பாலும் ஊரகம், நகர்ப்புறம், ஏழை மற்றும் குறைந்த வருவாய்ப் பிரிவினர் போன்ற பூகோள, பொருளாதார, சமூகப்பிரிவுகளைச் சார்ந்துதான் உள்ளதே தவிர, வயது, பாலினம் அல்லது மாற்றுத்திறன் சார்ந்ததாக இல்லை. துப்புரவு சேவையை நீடித்த தன்மை கொண்டதாகவும், நுட்பமானதாகவும் மாற்றவேண்டுமானால், வாழ்க்கை சுழற்சியின் பல்வேறு நிலைகளில் உள்ள மக்கள் எதிர்கொள்ளும் தடைகளையும், பாகுபாடுகளையும் புரிந்துகொள்வதுதான் அதற்கான முதல் நடவடிக்கையாக இருக்க வேண்டும். ஏனெனில், மனித குலத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள மக்கள் துப்புரவு சேவைகளை அனுபவிப்பதில் எதிர்கொள்ளும் தடைகளும், அவர்களுக்கான தேவைகளும் மாறுபடுகின்றன. உதாரணமாக, குழந்தைகளுக்கு அவர்களுக்கு ஏற்ற அளவிலான சிறிய திறப்பும், குறைந்த உயரமும் கொண்ட அமரும் இடம் உடைய கழிப்பறைகள் தேவைப்படுகின்றன. பருவ வயது இளம் பெண்களும், பெண்களும், தங்களின் மாதவிடாய் கால தூய்மையைப் பராமரிக்கும் வகையில் பாதுகாப்பான மற்றும் தனியான இடவசதி கொண்ட கழிப்பறைகளையே விரும்புவார்கள். மற்றொருபுறம், பருவ வயது இளைஞர்களுக்கும், ஆண்

| பிரிவுகள்: வாழ்க்கை சுழற்சி அணுகுமுறையும், பாரம்பரிய அணுகுமுறையும் | |
|---|---|
| வாழ்க்கை சுழற்சி அணுகுமுறை | பாரம்பரிய அணுகுமுறை |
| குழந்தைகள் | கிராமம் |
| வளரிளம் பருவப்பெண்கள் | நகரம் |
| வளரிளம் பருவ ஆண்கள் | ஏழை, குறைந்த வருவாய்ப் பிரிவினர் |
| பெண்கள் | சாதி, இனக் குழுக்கள் |
| ஆண்கள் | புலம் பெயர்ந்தவர்கள், நாடோடிகள் |
| மூத்த குடிமக்கள் | தொழில் ரீதியாக பாதிப்புக்கு உள்ளாகக்கூடியவர்கள் |
| மாற்றுத்திறனாளிகள் | |
| ஹெச்.ஐ.வி. தொற்று உள்ளவர்கள் | |

களுக்கும் அவர்களது தனிமை யுரிமையை உறுதி செய்யும் வகையில் பாலினம் சார்ந்த கழிப் பறைகள் தேவைப்படுகின்றன. மூத்தகுடிமக்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் சிறப்புவசதிகள் தேவைப்படுகின்றன. அவர்கள் கழிப்பறைக்குச் செல்ல சாய்வு மேடையும், கைப்பிடிகளும் மிகவும் அவசியமாகும். திரு நங்கையர், ஹெச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட நலிவடைந்த மற்றும் புறக்கணிக்கப் பட்ட பிரிவினருக்கான கழிப்பறைகள், அவர்களின் உடலமைப்புக்கு ஏற்றதாக இருக்கவேண்டும். அதற்கேற்ற வகையில் அவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் தூய்மையான கழிப்பறைகளை அமைத்துத் தர வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

**அனைவருக்கும் துப்புரவு: வாழ்க்கைச் சுழற்சிப்பிரிவு, புவி யியல், பொருளாதாரம் மற்றும் சமூகப்பிரிவுக்கான உத்திகள் குறித்த ஒப்பீடு:**

மனிதகுலப் பிரிவுகள் வாழ்க்கைச் சுழற்சிப்பிரிவு (Life Cycle Segmentation-LCS)அல்லது புவியியல், பொருளாதாரம் மற்றும் சமூகப்பிரிவுக்கான (Geographical, Economic and Social Segments - GSS) அணுகுமுறையின் கீழ் அடையாளம் காணப்படுவது மட்டும் போதுமானதல்ல. இரு வகை யான அணுகுமுறையிலும் இடம் பெற்றுள்ள பல்வேறு பிரிவினரின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான உத்திகள் உருவாக்கப்பட்டுள்ளனவா என்பது முக்கியமாகும். வாழ்க்கைச் சுழற்சிப்பிரிவு, புவியியல், பொருளா தாரம் மற்றும் சமூகப்பிரிவு ஆகியவற்றுக்கான உத்திகள் மாறுபடுவது எங்களது ஆய்வில் தெரியவந்துள்ளது.

வாழ்க்கை சுழற்சிப்பிரிவினரைப் பொறுத்தவரை பயனாளிகளின் பங்கேற்புதான் மிகவும் பொதுவான உத்தியாக இருக்கும் என்று எங்களது ஆய்வில் பரிந்துரைக்கப்படுகிறது. கீழிருந்து மேல்நோக்கி முன்னேறும் வகையிலான அணுகுமுறைக்கு உத்தி மாறவேண்டும் என்பதை இது காட்டுகிறது. புவியியல், பொருளா தாரம் மற்றும் சமூகப்பிரிவைப் பொறுத்தவரை திட்டமேலாண்மை உத்தியே சிறந்ததாக இருக்கும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இத் தகைய நடவடிக்கைகளில் பொதுவாக பெண்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் களுக்காக உருவாக்கப்பட்டுள்ள பொதுஉத்திகளில் திட்டமிடல், முடி வெடுத்தல், துப்புரவு வசதிகளைச் செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல், திறன்மேம்பாடு, அதிகாரம் அளித்தல் ஆகிய வற்றுக்கான நடவடிக்கைகளில் பெண்களை அதிக அளவில் பங் கேற்கச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. குழந்தைகளைப் பொறுத்தவரை அவர்களுக்குத் தகவல், கல்வி, தொடர்புமுறையை பயிற்றுவிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பள்ளிகளில் துப்புரவுக்கல்வி வழங்குதல், சமுதாயத்தின் ஒட்டு மொத்தப் பழக்கவழக்கத்தையும் மாற்றுவதையும், அவற்றுக்கான அவசியத்தையும் கொள்கைகள் வலியுறுத்துகின்றன. பருவவயது இளம்பெண்களுக்கான உத்திகளில் மாதவிடாய் கால சுகாதாரப்பராமரிப்பு குறித்த விழிப்புணர்வை மேம் படுத்துதல், திட்டமிடல், குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் சார்ந்த வசதிகளுக்கான வடிவமைப்பு மற்றும் செயல்படுத்துதல், தேவையை அதிகரித்தல் ஆகியவற்றில் பங் கேற்றல் உள்ளிட்டவை அடங்கும். எச்..ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட மக்கள் மீது குறைந்த அளவே அக்கறை காட்டப்படும் நிலையில், துப்புரவுக்கான விதிகளை உரு வாக்குவதிலும், குறைந்தபட்ச சேவை வழங்கலைத் தீர்மானிப்பதிலும் அவர்களையும் பங்கேற்க அனுமதிக்கவேண்டும். இவை தவிர, எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான துப்புரவு சேவை களை வழங்கும் அமைப்புகளின் திறனை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் கொள்கைகள் உருவாக்கப்பட வேண்டும். குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதார வசதிகளுக்கான உத்திகளை வகுப்பதில் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். பள்ளி களில் கழிப்பறைகளை மாற்றுத் திறனாளிகளுக்கு ஏற்றவகையில் வடிவமைப்பதற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். இந்த விசயங்களில் மூத்தகுடிமக்கள் நலனில் குறிப்பிடத்தக்க வகையில் அக்கறை காட்டப்படுவதில்லை. அவர்களின் உடலமைப்பு, நட மாடுவதில் உள்ள சிக்கல் ஆகிய வற்றை கருத்தில் கொண்டு அவர்களுக்கென தனி உத்திகள் எதுவும் வகுக்கப்படவில்லை.

ஊரகம் மற்றும் நகர்ப்புறப் பிரிவினருக்காக தொடர்ந்து வலியுறுத் தப்படும் உத்தி திட்டமேலாண்மை ஆகும். கழிப்பறைகளை அமைத்துப் பராமரித்தல், குடிநீர் வழங்கு வதற்கான விதிமுறைகளை உருவாக்குதல், துப்புரவுக் கட்டமைப்புகளை மேம்படுத்துதல் உள்ளிட்டவையும் திட்டமேலாண்மை உத்தியில் அடங்கும். ஏழை மற்றும் குறைந்த வருவாய்ப்பிரிவினருக்கு தகவல், கல்வி, தொடர்புஉத்தி, பயனாளிகள் பங்கேற்புஉத்தி, திட்டமேலாண்மை ஆகியவற்றுடன் நிதிஊக்குவிப்பு உத்தியும் வலியுறுத்தப்படுகிறது.

### வெவ்வேறு உத்திகள்:

பல்வேறு திட்டங்களில் வாழ்க்கை சுழற்சி முறைப்பிரிவினர், புவியியல், பொருளாதாரம் மற்றும் சமூகப் பிரிவினருக்காக அடிக்கடி செயல் படுத்தப்படும் குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதார வசதிகளுக்கான அம்சம் என்பது தகவல், கல்வி, தொடர்புமுறையாகும். அதற்கு அடுத்தபடியாக, வாழ்க்கைச் சுழற்சிமுறைப் பிரிவினருக்கான துப்புரவு வசதிகளைப் பரவலாக்குதல் மற்றும் சமமாக்குதல் உத்தியும், புவியியல், பொருளாதாரம் மற்றும் சமூகப் பிரிவினருக்கான துப்புரவு வசதிகளை அமைப்பு சார்ந்து வலுப்படுத்தும் உத்தியும் அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. பெண்களுக்கான தகவல், கல்வி, தொடர்பு நடவடிக்கைகள் அவர்களை மேம்படுத்தப்பட்ட துப்புரவு மாற்றத் திற்கான முகவர்களாக அங்கீகரித் திருக்கிறது. குழந்தைகள் மற்றும் பருவ வயதுப் பெண்களிடையே தகவல், கல்வி, தொடர்புஉத்தி, நடத்தை மாற்றத்திற்கான சிறப்பான அம்சமாகப் பார்க்கப்படுகிறது. ஆண்கள் மற்றும் பருவ வயது இளைஞர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு மேம்படுத்தப்பட்ட துப்புரவு நடைமுறைகளை பயிற்று விக்கவும், பயிற்சி அளிக்கவும், தகவல், கல்வி, தொடர்புஉத்தி அதிக கவனம் செலுத்துகிறது. அதுமட்டுமின்றி, பாலினம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த உத்தி பயன்படுத்தப்படுகிறது. துப்புரவு சார்ந்த திட்டங்களைத் தயாரித்தல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தலில் பெண்களின் பங்கேற்பை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

### கிடைத்திருக்கும் பயன்கள்:

குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் சார்ந்த பயன்களை கீழ்க்கண்டவாறு வகைபடுத்தலாம். வசதிகள் கிடைத்தல், வசதிகளை அணுகுதல், கட்டுப்படியாகும் தன்மை, தரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவையே துப்புரவு சார்ந்த பயன்களின் வகைகள் ஆகும். இந்தப் பயன்கள் பல்வேறு வகையான பரிமாணங்களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் என்பது பிரிவு சார்ந்த அணுகுமுறைக்கு ஏற்றவாறு மாறுபடும். வாழ்க்கை சுழற்சிமுறைப் பிரிவு மற்றும் புவியியல், பொருளாதாரம் மற்றும் சமூகப்பிரிவு அணுகுமுறைகளுக்கு மிக அதிகமாக முன்மொழியப்படும் பயன் வகை என்பது வசதிகள் கிடைப்பது ஆகும். மற்ற பயன் பரிமாணங்களைப் பொறுத்தவரை இந்த இரு வகை அணுகுமுறைக்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன. உதாரணமாக, வாழ்க்கைமுறை சுழற்சிமுறைப் பிரிவுக்கான அணுகு முறையில் முதலில் வசதிகள் கிடைத்தல், அடுத்ததாக வசதியை அணுகுதல், தரம் மற்றும் பாதுகாப்பு, கட்டுப்படியாகும் தன்மை ஆகியவை உள்ளன. புவியியல், பொருளாதாரம் மற்றும் சமூகப்பிரிவு அணுகுமுறையில் முதலில் வசதிகள் கிடைத்தல் என்ற பரிமாணமும், அதைத் தொடர்ந்து தரம் மற்றும் பாதுகாப்பு, கட்டுப்படியாகும் தன்மை ஆகியவையும் கடைசியாக வசதிகளை அணுகுதல் பரிமாணமும் உள்ளது.

குழந்தைகளுக்கான பிரிவில்தான் மிகவும் அலட்சியமான கொள்கைகள் கடைபிடிக்கப்படுகின்றன. இப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பல்வேறு வகையான உத்திகளில் குழந்தை களுக்கு ஏற்றவகையில் கழிப் பறைகளைக் கட்டுதல், பள்ளி களில் கைகளைக் கழுவுவதற்காக சோப்புகளை வழங்குதல், விளை யாட்டுத் திடல்களில் கழிப்பறை களைக் கட்டுதல் ஆகியவை முக்கியமானவையாகும். பருவவயது இளம்பெண்களைப் பொறுத்தவரை, வசதிகள் கிடைத்தல், வசதிகளை அணுகுதல், தரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு சமஅளவில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பெண்கள் மற்றும் ஆண்களுக்காகப் பரிந்துரைக்கப்படும் பயன்கள் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகும். பொது இடங்களில் பாலியல் சார்ந்த கழிப்பிட வசதிகளை வழங்குவதில் மட்டும்தான் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

### பயன்களைப் பெறுவதற்காக மக்கள்தொகை பிரிவுகளை சேர்த்தல்:

வாழ்க்கை சுழற்சிமுறைப் பிரிவு, புவியியல், பொருளாதாரம் மற்றும் சமூகப் பிரிவு ஆகியவற்றுக்கான துப்புரவுப்பயன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்வதில் இரு நிபந் தனைகள் கடுமையான ஆதிக்கம் செலுத்துகின்றன. குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் சார்ந்த கொள்கைகளை உருவாக்கு வதில் மத்தியஅரசு முக்கியப் பங்காற்றும்போது, துப்புரவுப் பயன்களைப் பெறுவதற்காக வாழ்க்கை சுழற்சிமுறைப்பிரிவு, புவியியல், பொருளாதாரம் மற்றும் சமூகப் பிரிவை சேர்ப்பதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

வாழ்க்கை சுழற்சிமுறைப் பிரிவு மற்றும் புவியியல், பொருளாதாரம் மற்றும் சமூகப்பிரிவு அணுகு முறையின் கீழ்வரும் மக்களை பல்வேறு பிரிவாகப் பிரிப்பதில் பல்வகை நிதியுதவி வழங்கும் முகமைகள் அல்லது சமுதாய அமைப்புகளின் ஈடுபாடு மிகவும் உதவியாக உள்ளது.

### சுருக்கமான பரிந்துரைகள்:

அனைவருக்கும் துப்புரவு என்ற இலக்கை எட்டுவதை உறுதி செய்ய இருவகையான அணுகு முறைகளும் ஒன்றுக்கொன்று உதவியாகச் செயல்படவேண்டும். கீழ்க்கண்ட உத்திகளைக் கடை பிடிப்பது வாழ்க்கை சுழற்சிமுறை அணுகுமுறையைப் பின்பற்று வதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் என்று எங்களது ஆய்வில் தெரியவந்துள்ளது.

### வாழ்க்கை சுழற்சி முறைப்பிரிவினர் எதிர்கொள்ளும் குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் சார்ந்த தடை களை தெளிவாக அடையாளம் காணுதல்:

துப்புரவு சேவைகளை வழங்கு வதில் உள்ள தடைகளை அடையாளம் காணுவதில், வாழ்க்கை சுழற்சிமுறைப்பிரிவுக்கான அணுகு முறையைவிட, பாரம்பரியமான புவியியல், பொருளாதாரம் மற்றும் சமூகப்பிரிவுக்கான அணுகுமுறை சிறப்பாகவும், விரிவாகவும் உள் ளது. இதற்குக்காரணம் நமது கொள்கை வகுப்பாளர்கள் புவியியல், பொருளாதாரம் மற்றும் சமூகப் பிரிவுகளைச் சார்ந்த மக்கள் மீது அதிக கவனம் செலுத்தியதுதான். வாழ்க்கை சுழற்சிமுறைப் பிரிவு களைச் சேர்ந்தவர்கள் சுகாதார வசதிகளைப் பெறுவதில் உள்ள தடை என்பது பற்றாக்குறை, உடல் நிலை, சுற்றுச்சூழல் ஆகியவைச் சார்ந்தவையாகவே உள்ளன. பல் வேறு மக்கள்தொகைப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள் எதிர்கொள்ளும் அனைத்து வகையான தடைகளை யும் புரிந்துகொள்ள வாழ்க்கை சுழற்சிமுறைப் பிரிவின் பல்வேறு கோணங்களையும் நமது கொள்கை கள் பரிசீலிக்கவேண்டும்.

### கீழிருந்து மேலான அணுகு முறையின் வளர்ச்சி:

வாழ்க்கை சுழற்சி முறைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர் கொண்டுவரும் தடைகளை உடைத்து மீண்டுவர கீழிருந்து மேலான அணுகுமுறை அல்லது அடிமட்ட அளவில் மக்களைத் திரட்டும் அணுகுமுறைதான் சிறந்த உத்தியாகும். இத்தகைய உத்திகளில் பயனாளிகளின் பங்கேற்பு, பரவலாக்குதல், தேவை மேலாண்மை, துப்புரவு வசதிகளை வழங்குவதில் சமத்துவம், தகவல், கல்வி, மேலாண்மை நடவடிக்கைகள் ஆகியவையும் அடங்கும். குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் சார்ந்த வசதிகளை வழங்குவதில் சமுதாயத்தை பங்கேற்கச் செய்யும் அணுகுமுறை நமது கொள்கைகளில் ஊக்குவிக்கப்படவேண்டும்.

### குடிநீர், துப்புரவு மற்றும் சுகாதாரம் சார்ந்த பயன்களை வாழ்க்கை சுழற்சிமுறைப் பிரிவினரின் துணைப் பிரிவுகளுக்கு அதிக அளவில் கிடைக்கச் செய்தல்:

துப்புரவு சார்ந்த பெரும்பான்மை யான கொள்கைகள் வயதின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட குழந்தைகள் பருவ வயது இளை ஞர்கள் மற்றும் இளம்பெண்கள், வயதுவந்தோர் போன்ற வாழ்க்கை சுழற்சி முறைப் பிரிவினருக்கு பயன்கிடைக்கும் வகையில்தான் அமைந்துள்ளன. பாலினம், மாற்றுத்திறனாளிகள், எச்.ஐ.வி. / எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட பிரிவினருக்கு மிகக்குறைந்த அள வில்தான் முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. எனவே, வாழ்க்கை சுழற்சிமுறைப்பிரிவில் உள்ள அனைத்து வகையினருக்கும் முழுமையான பயன்கிடைக்கும் வகையில் துப்புரவுக்கொள்கைகளை நமது கொள்கை வகுப்பாளர்கள் உருவாக்கவேண்டும்.

### நம்பகத்தன்மையை உறுதி செய்ய கொள்கை மற்றும் திட்ட வடிவத்தை மேம்படுத்துதல்:

சுகாதார வசதிகளைப் பெறுவதில் உள்ள தடைகளை அகற்றுதல், பரிந்துரைக்கப்படும் உத்திகளின் உதவியுடன் பயன்களைத் தெளிவாக அடையாளம் காணுதல் ஆகியவற்றுக்கான உத்திகளையும், தடைகளின் வரையறைகளையும் ஒரு நேர்கோட்டில் இணைப்பதுதான் நம்பகத்தன்மை ஆகும். தடைகள், உத்திகள் மற்றும் பயன்கள் ஆகிய வற்றுக்கான கருத்தொற்றுமை அதிகமாக இருக்கும்போது நம்பகத் தன்மையும் அதிகமாக இருக்கும். புவியியல், பொருளாதாரம் மற்றும் சமூகப்பிரிவுக்கான நம்பகத்தன்மை யுடன் ஒப்பிடும்போது, வாழ்க்கை சுழற்சிமுறை பிரிவுக்கான நம்பகத் தன்மை அதிகமானதாகவோ, வலிமையானதாகவோ இல்லை என்பதைத்தான் நமது ஆய்வுமுடிவுகள் தெரிவிக்கின்றன. பல்வேறு வகையான வாழ்க்கை சுழற்சிமுறைப்பிரிவுகள் இடையிலான கொள்கை மற்றும் திட்ட நம்பகத்தன்மையில் ஏராளமான வேறுபாடுகள் உள்ளன. குழந்தைகள் மற்றும் பெண்களின் நலனில் மட்டும்தான் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. எனவே, நம்பகத்தன்மையை உறுதிசெய்யும் வகையில், கொள்கை மற்றும் திட்டவடிவத்தை மேம்படுத்த வேண்டிய தேவை உள்ளது. நம்பகத்தன்மையை உறுதி செய்வதுதான் தரம், கொள்கை உள்ளடக்கம், திட்டங்கள் ஆகிய வற்றை மட்டுமின்றி, அவற்றின் தன்மையையும் அதிகரிக்கும் என்பதால் இதை செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும். ●

---

- **ஏ.தில்லைராஜன்**, பேராசிரியர், இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை.

ஆய்வில் உதவி ரீபா தேவராஜ்.

# செய்தித்துளிகள்

வேளாண்மை, அதன் சார்பான துறைகளில் இந்தியா மற்றும் லெபனான் இடையேயான புரிந் துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் தலைமையிலான மத்திய அமைச் சரவை ஒப்புதல் அளித்துள்ளது

இருநாடுகளிலும் உள்ள சிறந்த வேளாண் நடைமுறைகளைப் புரிந்துகொள்ளவும், விவசாயிகளின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், சர்வதேச சந்தையில் சிறந்துவிளங் கவும் இந்த ஒப்பந்தம் துணை புரியும்.

உலகெங்கும் உள்ள சிறந்த விவசாய நடைமுறைகளையும், சந்தை நடைமுறைகளையும் தெரிந்துகொண்டு விவசாய உற் பத்தியை அதிகரிக்க இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் பயன் படும். புதுமுயற்சிகள், புதிய தொழில்நுட்பங்கள் ஆகியவற்றின் மூலம் உணவுப் பாதுகாப்பினைப் பலப்படுத்த இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும்.

*****

சுற்றுச்சூழல் ஒத்துழைப்புக்கு இந்தியா - பின்லாந்து நாடுகள் இடையேயான ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இயற்கைவளங்களின் மேலாண்மை ஆகிய துறை களில் இரு நாடுகளுக்கும் இடையேநெருக்கமான, நீண்ட கால ஒத்துழைப்பை ஏற்படுத்த இந்த ஒத்துழைப்பு ஒப்பந்தம் வழிவகுக்கும். இது இரு நாடுகளின் சட்ட விதிகளையும் கருத்தில் கொண்டு சமபங்கு, இருதரப்புப் பரிமாற்றம், இருதரப்பு நன்மைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த ஒப்பந்தம் செயல்படுத்தப்படும்.

சூழல் பாதுகாப்பு, பருவநிலை மாற்றத்தில் சிறந்த மேலாண்மை, வன விலங்குகள் பாதுகாப்பு ஆகியவற்றில் நவீன தொழில்நுட்பங்களையும், சிறப்பான நடைமுறைகளையும் இந்த ஒப்பந்தம் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் அடைப்படையில் கீழ்கண்ட துறை களில் ஒத்துழைப்புஏற்படுத்தப்படும்:

1. காற்று மற்றும் நீர் மாசுபாடு தடுப்பு, சுத்திகரிப்பு, மாசுபடுத்தப்பட்ட மண்ணை சரிசெய்தல்
2. அபாயகரமான கழிவுகள் உட்பட கழிவுகள் மேலாண்மை, கழிவு களில் இருந்து எரிசக்தி உற்பத்தி செய்யும் தொழில்நுட்பங்கள்
3. மறுசுழற்சிப் பொருளாதாரம், கரிய மில வாயு தொடர்பான தீர்வுகள், வனங்கள் உள்ளிட்டஇயற்கை வளங்களின் நிலையான மேலாண்மை
4. பருவநிலை மாற்றம்
5. சுற்றுச்சூழல், வனக் கண்காணிப்பு, தரவு மேலாண்மை
6. கடல், கடற்கரையோர வளங்கள் பாதுகாப்பு
7. கடல்களிலும், கடல் தீவுகளிலும் ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை
8. இருதரப்பும் இனணந்து முடிவு செய்யும் பிற துறைகள்.

*****

இந்தியாவின் சுற்றுலாவிற்கு ருமேனியா நாடு முக்கியமான சந்தை யாகும். 2017ஆம் ஆண்டு 11844 சுற்றுலா பயணிகள் ருமேனியாவில் இருந்து இந்தியாவிற்குவருகை தந்துள்ளனர். சுற்றுலா துறையில் இந்தியா ருமேனியா இடையே ஏற்கனவே கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. செப்டம்பர் 2018 இல் ருமேனியா நாட்டின் துணை அதிபர் இந்தியாவிற்கு வருகை தந்தபோது இந்தஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

**இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கங்கள்:**

1. சுற்றுலாத் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரித்தல்.
2. சுற்றுலா தொடர்பான தகவல்கள், தரவுகளின் பரிமாற்றம்.
3. ஹோட்டல்கள், சுற்றுலா ஏற்பாட் டாளர்கள் உள்ளிட்ட சுற்றுலாத் துறைதொடர்பானவர்களுக்கு இடையே ஒத்துழைப்பை ஊக்கப் படுத்துதல்.
4. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் முதலீடுகள்.
5. இருவழி சுற்றுலாவை ஊக்கப் படுத்த சுற்றுலா ஏற்பாட்டாளர்கள்/ பத்திரிக்கையாளர்கள்/சிந்தனை யாளர்களை இரு நாடுகளுக்கும் பயணம் மேற்கொள்ளச் செய்தல்.
6. ஊக்கப்படுத்துதல், சந்தைப் படுத்துதல், சுற்றுலாத் தலங்களின் மேம்பாடும்,மேலாண்மையும்.

7. இரு நாடுகளையும் சிறந்த சுற்றுலாத் தலங்களாக மேம்படுத்த திரைப்பட சுற்றுலாமூலம் இரு தரப்பு ஒத்துழைப்பை ஏற்படுத்துதல்.

8. பாதுகாப்பான, கௌரவமான, நிலையான சுற்றுலாவை ஊக்குவித்தல்.

9. இரு நாடுகளுக்கும் இடையே சுற்றுலா இயக்கத்தை மேம்படுத்துதல்.

சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுக்கும்.

*****

கோயம்புத்தூரில் உள்ள இந்திய தொழில் வர்த்தக சபையின் 90 ஆவது ஆண்டு கொண்டாட்டங்களில் குடியரசுத் துணைத்தலைவர் எம். வெங்கய்யா நாயுடு அவர்கள் பங்கேற்றார். அப்போது அவர் ஆற்றிய உரை:

இந்த அமைப்பின் பயணத்தில் 90 ஆண்டுகள் நிறைவடைந்திருப்பது ஒரு முக்கிய மைல் கல்லாகும். சுதந்திர இந்தியாவின் முதல் நிதி அமைச்சராக இருந்த சர் ஆர்.கே.சண்முகம் செட்டியார், 1929ஆம் ஆண்டு தொடங்கிய இந்த அமைப்பு, இந்திய குடியரசின் பிறப்புக்கும், குறிப்பிடத்தகுந்த பல நிகழ்வுகளுக்கும் சாட்சியாக இருந்துள்ளது. இப்பகுதியில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் வர்த்தகம், தொழில் மற்றும் சேவைத் துறைக்கு பங்களித்துள்ளது.

1671 உறுப்பினர்களும், பத்தாயிரம் உறுப்பினர்களைக் கொண்ட 96 சார்பு அமைப்புக்களையும் கொண்ட இந்த சபை கோயம்புத்தூரில் உள்ள வியாபார நிறுவனங்களின் விரிவான பிரதிநிதியாக உள்ளது. கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள ஏரிகள் அழிக்கப்படுவதற்கு எதிராக இந்த சபை ஒரு போராட்டம் நடத்தியது மகிழ்ச்சி தருகிறது. இதனையடுத்து 1992ஆம் ஆண்டு ஏரி நிலங்களில் கட்டுமானப்பணிகள் மேற்கொள்வதற்கு அனுமதியில்லை என்று மாநில அரசு அறிவித்தது. சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பிற்காக உறுப்பினர்களின் ஆதரவோடு நொய்யல் கால்வாய் திட்டத்தின் புனரமைப்பு, வாலங்குளத்தின் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்பதும் பாராட்டுக்குரியது.

தொழில்மயமாகும் மாநிலங்களிடையே தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இந்த மாநிலம் மோட்டார் வாகனம், தோல், ஜவுளித்தொழில் மற்றும் கடின உழைப்பிற்கான இயல்பைக் கொண்ட மக்களுக்கு பெயர் பெற்றது.

வியாபாரம் வளரவும் செல்வத்தின் உருவாக்கலுக்குமான சூழகமான சூழலை உருவாக்குவதிலும் வர்த்தக சபைகள் அரசுக்கும், தொழில் துறைக்கும் இடையே பாலமாக செயல்படுகின்றன. வியாபாரம் மேற்கொள்வதற்கு இலகுவான சூழலை உருவாக்குவதில் சட்டங்களும், விதிமுறைகளும் தடைகளாக இல்லாமல் இருப்பதற்கு, அரசுகளுக்கு ஆலோசனை வழங்குவதில் இவை ஆக்கப்பூர்வமான பங்களிக்கின்றன.

தார்மீகப் பொறுப்புடன் கூடிய பெரும் நிறுவனங்களின் நிர்வாகம், வரி செலுத்துதல், பெருநிறுவனங்கள் சார்ந்த சமூகப் பொறுப்பு ஆகியவற்றை வர்த்தக சபைகள் தங்களது உறுப்பினர்களிடையே வளர்க்க வேண்டும். பெரும் நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, சில அரசுப் பள்ளிகளை தத்தெடுத்து அதன் உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவதில் வர்த்தக சபைகள் பங்கேற்க வேண்டும் என்பது என் ஆலோசனையாகும். குறிப்பிட்ட பகுதியின் தேவைகளை அடையாளம் கண்டு வர்த்தக சபை அதைத் தாமே முன்வந்து ஏற்றுக்கொள்ளலாம் என்று குடியரசுத்துணைத்தலைவர் அப்போது பேசினார்.

*****

திருப்பதி (ஆந்திர பிரதேசம்), பெர்ஹாம்பூரில் (ஒடிஸா) ஆகிய இடங்களில் இந்திய அறிவியல்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் (IISER) வளாகங்களை நிரந்தரமாக நிறுவிச் செயற்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்குத்தேவைப்படும் மொத்த செலவு ரூ. 3074.12 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

- இரண்டு ஐ.ஐ.எஸ்.இ.ஆர் நிறுவனங்களும் சுமார் 1,17,000 சதுர மீட்டரில் கட்டப்படும். ஒவ்வொரு நிறுவனத்திலும் 1855 மாணவர்களுக்குத் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளும் இருக்கும். இந்த நிறுவனங்களின் நிரந்தர வளாகங்கள் கட்டும் பணி டிசம்பர், 2021இல் முடிக்கப்படும்.

உயர்தரமான அறிவியல் கல்வியை வழங்கி இளநிலை, முதுநிலைப் பட்டங்கள், முனைவர் பட்ட ஆய்வு மற்றும் ஒருங்கிணைந்த

டாக்டர் பட்ட ஆய்வு ஆகியவற்றை இந்த IISER நிறுவனங்கள் அளிக்கும். அறிவியலின் முன்னணித் துறைகளில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும். சிறந்த அறிவியல் நிபுணர்களை ஆசிரியர்களாக நியமித்து இந்தியாவில் மிகவும் வலிமையான அறிவியல் திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்கப் பாடுபடும்.

*****

2018ஆம் ஆண்டுக்கான சியோல் அமைதிப் பரிசினை பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்குவது என சியோல் அமைதிப் பரிசுக்குழு முடிவு செய்துள்ளது. சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவது, உலகப் பொருளாதார வளர்ச்சியை அதிகப்படுத்துவது, இந்திய மக்களின் திறன் மேம்பாட்டினைத் துரிதப்படுத்துவது, ஊழல் ஒழிப்பு, சமூக நல்லிணக்க முயற்சிகளின் மூலம் ஜனநாயகத்தை மேலும் மேம்படுத்துவது ஆகியவற்றில் பிரதமரின் அர்ப்பணிப்புக்கு அங்கீகாரமாக இந்தப் பரிசு வழங்கப்படுகிறது. கொரியக் குடியரசின் சியோல் நகரில் 24வது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் வெற்றிகரமாக நடத்தப்பட்டதை நினைவுகூரும் வகையில் 1990ஆம் ஆண்டு சியோல் அமைதிப் பரிசு நிறுவப்பட்டது. உலக அமைதிக்காகவும், நாடுகளுக்கு இடையே நட்புறவை ஏற்படுத்துவதற்கும், மனிதகுலத்தின் நல்லிணக்கத்திற்கும் பங்களிப்பு செய்கின்ற தனிநபர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சியோல் அமைதிப் பரிசு வழங்கப்படுகிறது.

*****

அரசு தனியார் பங்களிப்பு மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்தியத் திறன் நிறுவனம் அமைக்க மத்தியஅமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. குறிப்பிட்ட இடங்களில் தேவை மற்றும் உட்கட்டமைப்பு வசதி அடிப்படையில் இந்தியத் திறன் நிறுவனத்தை மேம்படுத்தும் வாய்ப்புகள் ஆராயப்படும். தனியார் துறை நிறுவனங்களின் நன்மைகளைக் கொண்டிருப்பதாலும் அரசாங்கநிலத்தை மூலதனமாக அளிப்பதாலும் நிபுணத்துவம், சிறந்த அறிவுத் திறன்மற்றும் போட்டித்தன்மை நிறைந்த புதிய நிறுவனங்கள் உருவாக இந்த ஒப்புதல்வழிவகுக்கும்.

*****

பினாமி சொத்து பரிமாற்றங்கள் தடுப்புச் சட்டம் 1988ன்கீழ் நடுவர் ஆணையம் அமைக்கவும், மேல் முறையீட்டு நடுவர் மன்றம் உருவாக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. நடுவர் மன்ற ஆணையத்திற்கு பரிந்துரைக்கப்படும் வழக்குகளை நன்கு நிர்வகிக்கவும், இந்த ஆணையத்தின் உத்தரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் மேல் முறையீடுகளை விரைந்து பைசல் செய்யவும் இந்த ஒப்புதல் பயனளிப்பதாக இருக்கும். பினாமி சொத்துகள் பரிமாற்ற தடுப்புச் சட்டத்தின்கீழ் நிர்வாக செயல்பாட்டு ஆய்வின் முதல் கட்டமாக நடுவர் மன்ற ஆணையம் அமைப்பது இருக்கும். பினாமி சொத்துக்கள் பரிமாற்றத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடுவர் மன்ற ஆணையம் நிறைவேற்றிய உத்தரவுக்கு எதிராக மேல்நிலை முறையீட்டு நிறுவனம் கூடுதலாக மற்றொரு அமைப்பையும் உருவாக்கிக் கொள்ளலாம்

*****

பூமியின் புரவலர் (Champion of Earth) என்ற பெருமைமிகு விருதினை பிரதமர் நரேந்திர மோதிக்கு ஐக்கிய நாடுகள் சபை வழங்கியுள்ளது. பன்னாட்டு சூரிய சக்திக் கூட்டமைப்பை நிறுவியதற்கு அவர் எடுத்திருக்கும் முயற்சியைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் 2022ஆம் ஆண்டுக்குள் தனி நபர்களின் பிளாஸ்டிக் பயன்பாட்டை ஒழிப்பது என்ற பிரதமரின் உறுதிப்பாடும் விருது வழங்குவதில் கணக்கில் கொள்ளப்பட்டிருக்கிறது. 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட இந்த விருது அரசு, குடிமை சமூகம், தனியார் துறைகளில் சரியான கொள்கைகை முடிவுகலை எடுத்து தலைமையேற்று வழிநடத்தி சுற்றுச்சூழலை மேம்படுத்தும் தலைவர்களுக்கு வழங்கப்படுகிறது. பிரெஞ்ச் அதிபர் இமானுவேல் மெக்ரானும் இந்த உயரிய விருதினைப் பெறுகிறார்.

*****

ஆதார் திட்டம் அரசியல் சட்டப்படி செல்லுபடியாகும் என்று உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது. வங்கிக்கணக்கு, கைபேசி இணைப்பு, பள்ளிகளில் மாணவர் சேர்க்கை ஆகியவற்றிற்குஆதார் எண்ணைக் கேட்கக்கூடாது என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. CBSE தேர்வுகள், தேசியத்தகுதித்தேர்வு, நுழைவுத்தேர்வுகள் ஆகியவற்றிற்கு ஆதார் எண் கட்டாயத்தேவை இல்லை

என்று அது ஆணையிட்டுள்ளது. வருமான வரி கணக்கு எண் (PAN NUMBER) பெறுவதற்கும், வருமான வரிக் கணக்குகளைத் தாக்கல் செய்வதற்கும் ஆதார் எண் கட்டாயம் தேவை.

*****

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோலி, பளு தூக்குவதில் உலக சாம்பியனான சாய்கோம் மிரபாய் சானு இரு வருக்கும் 2018ஆம் ஆண்டுக்கான விளையாட்டுத்துறையின் உயரிய விருதான 'கேல்ரத்னா' விருதுகளை குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் வழங்கினார். பதக்கம், சான்று ஆகியவற்றுடன் ரூ.7.5 இலட்சம் பணமும் இவர்களுக்கு தரப் பட்டது. இது தவிர அர்ஜுனா, துரோணாச்சார்யா, தயான்சந்த் விருதுகளும் பல விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டன.

*****

மத்திய அரசு 19 வகை பொருள் களுக்கு சுங்கவரியை அதிகரித் துள்ளது. இதில் விமான எரிபொருள், குளிர்சாதனக் கருவிகள், குளிர்பதனப் பெட்டிகள் போன்றவை அடங்கும். நடப்புக் கணக்கில் நிலவும் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு இந்த வரி அதிகரிப்பு உதவும். இத் தகைய பொருள்களின் இறக்குமதி மதிப்பு 2017-18ஆம் ஆண்டில் ரூ.86 ஆயிரம் கோடியாக இருந்தது. அவசியத்தேவை என்ற கணக்கில் வராத இத்தகைய பொருள்களின் இறக்குமதியைத் தடுப்பதற்கு இந்த வரி அதிகரிப்பு உதவும்.

*****

உச்சநீதிமன்றத்தலைமை நீதிபதி யாக ரஞ்சன் கோகாய் அக்டோபர் 3, 2018 அன்று பொறுப்பேற்றார். நவம்பர் 17, 2019 வரை 13 மாதங்களுக்கு இப்பதவியை அவர் வகிப்பார். அவர் அஸ்ஸாம் மாநிலம் குவஹாட்டியைச் சேர்ந்தவர்.

*****

மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்த ஆண்டைக் குறிக்கும் விதத்தில் இலட்சினை ஒன்றையும், இணைய நுழைவாயிலையும் குடியரசுத்தலைவர் வெளியிட்டார். காந்திய இலக்கியம், தத்துவம், அரிய நிழற்படங்கள் போன்றவை இணையத்தில் கிடைக்கும். இணைய முகவரி: *<http://gandhi.gov.in/>*

*****

தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் சில குறிப்பிட்ட பதவிகளுக்கு விளையாட்டு வீரர்களுக்கு இதுவரை இருந்து வந்த இரண்டு சதவீத இடஒதுக்கீடை மூன்று சதவீதமாக உயர்த்தி தமிழ்நாடுஅரசு ஆணையிட்டுள்ளது. கூடைப்பந்து, கைப்பந்து விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் பொருட்டு திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மேற்கூரை வசதியுடன் கூடிய மைதானங்கள் அமைக்கப்படும். விளையாட்டில் திறமையானவர்களை அடையாளம் கண்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ஒரு திறந்த வெளி விளையாட்டரங்கம், ஒரு உள் விளையாட்டரங்கம், ஒரு நீச்சல் குளம் ஆகியவற்றை அமைக்கும் திட்டம் உள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களின் சாதனையில் சர்வதேச அளவில் மூன்றாவது இடத்திலிருந்து எட்டாவது இடத்திற்கு தமிழ்நாடு முன்னேறி வந்திருக்கிறது.

*****

தமிழ்நாட்டில் 126 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் 471 புதிய பேருந்துகள் பொதுப் போக்கு வரத்திற்காக வாங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள எட்டு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் 21744 பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன.

*****

தொகுப்பு: **த.சித்தார்த்தன்**

**திட்டம் இதழில் வெளியாகிவரும் கட்டுரைகள் பற்றி உங்களது கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. கடிதங்கள் மூலமாகவோ, editorthittam@yahoo.co.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவோ உங்கள் கருத்துக்களை அனுப்பிவையுங்கள்.**

# மகாத்மா காந்தி சர்வதேச தூய்மை மாநாட்டின் நிறைவு விழாவில் பிரதமர் உரையாற்றினார்.




புதுதில்லி ராஷ்டிரபதி பவன் கலாச்சார மையத்தில் அக்டோபர் 2, 2018 அன்று நடைபெற்ற மகாத்மா காந்தி சர்வதேச தூய்மை மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோதி, ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலாளர் அன்டோனியோ குட்டேரிஸ், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ், மத்திய குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சர் சுஸ்ரி உமாபாரதி, மத்திய தகவல் தொடர்பு (பொறுப்பு), ரயில்வே இணை அமைச்சர் மனோஜ் சின்ஹா, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் ரமேஷ் சந்தப்பா ஜிகாஜினாகி ஆகியோர் படத்தில் உள்ளனர்.



புதுதில்லியில் நான்கு நாள்களுக்கு நடைபெற்ற மகாத்மா காந்தி சர்வதேச தூய்மை மாநாடு அக்டோபர் 2, 2018 அன்று நிறைவு பெற்றது. மகாத்மா காந்தி அளித்த உத்வேகமே தூய்மை இந்தியா இயக்கத்திற்குக் காரணமாக இருந்தது என்று தனது நிறைவுரையில் பிரதமர் குறிப்பிட்டார். இதிலிருந்து ஊக்கம் பெற்ற இந்தியர்கள் தூய்மை இந்தியா இயக்கத்தை உலகத்தின் மிகப்பெரிய மக்கள் இயக்கமாக மாற்றி இருக்கின்றனர் என்றும், 2014இல் 38சதவீதமாக இருந்த கிராமப்புறத்தூய்மை இப்போது 94 சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும், ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான இந்திய கிராமங்கள் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராமங்களாக மாறியுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இந்த மாநாடு உலகெங்கும் உள்ள துப்புரவு அமைச்சர்களையும், WASH (Water, Sanitation, Hygiene) அமைப்பின் தலைவர்களையும் ஒன்று கூடும்படி செய்திருந்தது.

மின்னணு கண்காட்சிக்கு பிரதமர் வருகை புரிந்தார். ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலாளர் அன்டோனியோ குட்டேரிஸ் அவருடன் வந்தார். மேடையில் இருந்தபடி மாநாட்டின் நினைவாக மகாத்மா காந்தி அஞ்சல்தலை, மகாத்மாவிற்கு விருப்பமான வைஷ்ணவ ஜனதோ பாடல் அடங்கிய குறுந்தகடு ஆகியவற்றை சிறப்பு விருந்தினர்கள் வெளியிட்டனர். தூய்மை இந்தியா விருதுகளும் இந்த மாநாட்டின் போது வழங்கப்பட்டன.

ISSN 0971 - 8362
THITTAM (YOJANA - TAMIL)

Published on: **1st Week of Every Month**
Posted on : **3rd November 2018**

**Registrar of Newspapers for India No.24495/74**
**"Registration" No.TN/CC(S)DN//566/18-20/2018-20**
**WPP No.: TN/PMG (CCR) WPP No. 150/2018-20**


# தேசப்பிதா

தூய்மை பாரதம்

# அண்ணல் காந்தியின் வாழ்வியல்

## பப்ளிகேஷன்ஸ் டிவிஷனின் புதிய வெளியீடுகள்





**Published by Shri A. Elangovan, Editor/Deputy Director on behalf of DG, Publications Division, Ministry of Information and Broadcasting, Govt. of India.**

and Printed by N.K.Narayanamurthy at YUVA SAKTHI PRINTS (P) LTD., No.2, 8th Street, Dr.Subbarayan Nagar, Kodambakkam, Chennai - 600 024. Ph: 2372 4901.

Published at 'A' Wing, Ground Floor, Rajaji Bhavan, Chennai - 600 090. Ph: 2446 5382. Chief Editor: Deepika Kachhal